



# தினப்புயல்

news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –373

# தனி நாடு கோரி போராடியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் – சுரேஷ் பிரேமச்சந்திரன்

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் இன்றைய தேவை என்ன?

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு கூட்டுக்கட்சிகள் என்ன செய்யப்போகின்றன?



# தனி நாடுகோரி போராடியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்

**ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்**

**கேள்வி :- இன்றைய சமகால அரசியலில் பல தரப்பட்ட பிரச்சினைகள் இந்நாட்டில் இடம்பெறுகின்றது. இன்றைய தமிழ்க் கட்சிகளின் கூட்டிணைவு என்பதைப்பற்றி உங்களது கருத்து என்ன?**

பதில் :- இது கட்சிகளுக்கிடையிலான இணைவு அல்ல. இது புதுப் பிரச்சினைகள் தொடர்பிலான ஒரு இணக்கப்பாடு. தமிழ் மக்கள் எதிர்நோக்குகிற பல பிரச்சினைகளை நாங்கள் இனங்கண்டிருக்கின்றோம். அந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நாங்கள் ஒருமித்துச் செயற்படலாம் என்கிற முடிவுக்கும் நாங்கள் வந்திருக்கின்றோம். அதன் பிரகாரம் ஐ.நா மனித உரிமை ஆணையகத்துக்கு கடந்த முறை நாங்கள் எல்லோரும் இணைந்து ஒரு கடிதத்தை எழுதியிருந்தோம். கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக 13வது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி இப்பொழுது இந்தியப் பிரதமரிடம் ஒரு கோரிக்கையினை வைத்து அதற்கான ஒரு அறிக்கையினை சமர்ப்பித்திருக்கின்றோம். இவ்விடயம் தொடர்பாக யாழில் ஒரு பொதுக்கூட்டத்தினை நடத்தவும் இருக்கின்றோம். அதுபோல பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும்படி ஐரோப்பிய யூனியனுக்கும் நாங்கள் ஒரு அறிக்கையினைச் சமர்ப்பிக்கவிருக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை இருக்கிறது. காணிப் பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆகவே இவ்வாறான பல விடயங்களை தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருக்கின்ற காரணத்தினால், பொது விடயங்களில் நாம் ஒன்றுபட்டு செயற்படுதல் என்ற அடிப்படையில் தான் இப்பொழுது நாம் ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டுவருகின்றோம். இது ஒரு கூட்டாக வருமா மாறுமா என்பதெல்லாம் எதிர்காலத்தில் வரக்கூடியதொரு விடயம். ஆனால் இன்று தமிழ் மக்களது விடயங்களைக் கையாள்வதற்கான முயற்சியாக இந்த விடயங்கள் நடைபெற்று வருகின்றது.

**கேள்வி :- இவ்வாறு நீங்கள் கூறுகின்றபோதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, உங்களது இந்தக் கூட்டிணைவின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது. இந்தியாவை ஆதரிப்பதையோ அல்லது 13க்கு ஆதரவு வழங்குவதோ பயனற்றது என்கிற ரீதியில் அவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறு குற்றச்சாட்டுக்களை தமிழ்த் தரப்பின் ஒரு கட்சி முன்வைப்பதற்குரிய காரணம் என்ன?**

பதில் :- தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ். அவர்கள் ஆரம்பம் முதலே இந்திய எதிர்ப்பு வாதத்தை முக்கியமான விடயமாக வைத்திருக்கின்றார்கள். ஆனால் அதேசமயம் அவர்கள் ஓர் பூகோள அரசியல் சம்பந்தமாகவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஈழத்தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கானத் தீர்வை பெற்றுக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையோ அல்லது வழிமுறையோ அவர்களிடத்தில் இல்லை. இரண்டு தேசம் ஒரு நாடு என்கிற கோசத்தை அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். குறைந்தபட்சம் அதனை அடைவதற்கான வழிமுறைகள் என்ன?, அதனை அடைவதற்கான பொறிமுறைகள் என்ன என்பது அவர்களிடம் இல்லை. எம்மைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தம் என்பது இலங்கை அரசியலமைப்பு யாப்பில் இருக்கக்கூடியதொரு பகுதி. அது 1988ஆம் ஆண்டு அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அது இலங்கையினது அரசியலமைப்பின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாங்கள் இப்பொழுது கோருவது அந்த அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய விடயத்தை நிறைவேற்றுங்கள் என்கின்ற ஒரு விடயத்தைத் தான் நாங்கள் கேட்கின்றோம்.




இந்திய அரசுடன் நாங்கள் ஈழத் தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கானத் தீர்வு பற்றி இதுவரையில் நாங்கள் பேசத் தொடங்கவில்லை. ஆனால் இந்த முயற்சி என்பது ஈழத் தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக பேசுவதற்கான ஒரு களத்தை உருவாக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஆகவே இது என்னைப் பொறுத்தவரையில் ஒரு அரசியல் நகர்வாக. இன்னும் குறிப்பாக கூறப்போனால் இன்று மாறியிருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தியா எங்களுடைய இனப்பிரச்சினையில் ஏற்கனவே தலையிட்ட நாடு. இந்தியா எமக்கு மிக அண்மையில் இருக்கக்கூடிய நாடு. இப்பொழுது இலங்கைக்குள்ளும் பூகோள அரசியல் காரணமாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றது. சீனாவினது கடும் செல்வாக்குக்கு உட்பட்ட நாடாக இலங்கை மாறி வருகின்றது. அது இந்தியாவில் பல்வேறுபட்ட நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் உருவாக்கியிருக்கிறது.

அந்த வகையில் இந்த சந்தர்ப்பங்கள் என்பது வெறுமனே இந்தியாவினது பாதுகாப்பு மாத்திரமல்லாமல் இலங்கைத் தமிழ் மக்களினுடைய எதிர்காலம். அவர்களினுடைய பாதுகாப்பு. அவர்களுடைய உரிமைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அது நகர்த்தப்படவேண்டும். அந்த வகையில் இந்த 13வது திருத்தம் என்பது இந்தியா கொண்டுவந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தத்தின் ஒரு சரத்து என்ற அடிப்படையில். இந்தியாவுக்கு இருக்கக்கூடிய பிடிமானம் என்பது அந்த 13வது திருத்தம் தான். அங்கிருந்துதான் நாங்கள் இதனை ஆரம்பிக்க முடியும் என்ற அடிப்படையில் தான் இந்த ஆரம்பம் என்பது இந்தியாவில் இருந்து ஆரம்பிக்கப்படுகிறதே தவிர, இதனுடைய பொருள் 13 முடிந்த முடிவு கிடையாது. ஆனால் நீங்கள் கூறுகின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பது தவறான பொய்யான கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்றது. ஏன் அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தான் தெரியும். நாங்கள் முன்னெடுக்கின்ற பாதையை விட ஒரு மாற்றுப்பாதை இருக்குமாகவிருந்தால் அதனை அவர்கள் எங்களுக்குக் கூறலாம்.

ஆனால் அவ்வாறான மாற்றுத்திட்டம் அவர்களிடம் கிடையாது. மாறாக அவர்கள் கோசங்களைத் தான் வைக்கின்றார்கள். அந்தக் கோசங்களை முன்வைப்பதன் ஊடாக பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. தந்தை செல்வா 1950-51 களில் சமஸ்டிக் கட்சியினை உருவாக்கி 1971 வரை அவர் ஒரு சமஸ்டியை நோக்கித் தான் பயணித்தார். ஆனால் அவரால் அதனை சிங்கள அரசிடம் இருந்து வெல்ல முடியவில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் வந்தாலும் கூட அவையெல்லாம் கிழித்தெறியப்பட்ட விடயங்கள். 1976இல் இயலாத கட்டத்தில் தான் அவர் தனிநாடு என்ற முடிவுக்குப் போகின்றார். பின்னர் தனிநாட்டுக்காக மிக நீண்ட போராட்டம், தமிழர் விடுதலைக்கூட்டணி அந்தப் போராட்டத்தை நோக்கிப் பயணிப்பதற்கான பொறிமுறை அவர்களிடமும் இருக்கவில்லை. அந்த நேரத்தில் தான் பல இயக்கங்கள் வருகின்றது. விடுதலைப்புலிகள், ரெலோ, புளொட், ஈரோஸ், ஈபிஆர்எல்எப் என இயக்கங்கள் வருகின்றன. இறுதியில் விடுதலைப்புலிகள் போராடினார்கள். பின்னர் அதுவும் மௌனிக்கப்பட்ட நிலையில் இன்று நாங்கள் மீண்டும் சமஸ்டி பற்றிப் பேசுகின்றோம். பேசக்கூடாது என்பது கிடையாது. தமிழ் மக்களுக்கான ஒரு முழுமையான தீர்வு சமஸ்டியில் சாத்தியமாகலாம்.

ஆனால் அதற்கு முன்பாக ஏற்கனவே அரசியல் சாசனத்தில் உள்ளவற்றை தமிழ் மக்கள் தமது கைகளில் எடுப்பது தவறான காரியம் கிடையாது. ஏற்கனவே அரசியல் சாசனத்தில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்தும்படிக் கூறுவது இன்னுமொரு பேச்சுவார்த்தையைக் குழப்புவதாகவோ அல்லது பேச்சுவார்த்தை நடைபெறக்கூடாது என்ற முடிவில் இருந்து பார்ப்பது தவறானது. ஆகவே தான் நாங்கள் இது வேறு அது வேறு என கூறுகின்றோம். எம்மைப்பொறுத்தவரையில் ஒரு சரியான பேச்சுவார்த்தைக் களத்தை உருவாக்குவதற்கான அரசியல் நகர்வாகத்தான் நாங்கள் இதனை செயற்படுத்தியிருக்கின்றோம்.

**கேள்வி :- எழுக தமிழ் இடம்பெற்றபோது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உங்களுடன் கைகோர்த்து செயற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே அந்த எழுக தமிழ் மற்றொரு பக்கத்தில் பார்க்கப்பட்டது. அந்தக்கட்டத்தில் தோள்கொடுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தற்பொழுது உங்களுக்கு எதிரான ஒரு பிரச்சாரத்தை முன்னெடுத்திருப்பதற்கான காரணம் என்ன?**

பதில் :- ஒன்று அவர்களுக்கு அனுபவப் பற்றாக்குறையாக இருக்கலாம். இல்லையென்றால் அவர்கள் வேறொரு நிகழ்ச்சிநிரலின் கீழ் வேலை செய்பவர்களாக இருக்கலாம். அவர்களின் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் நலன்களில் இருந்து எடுக்கப்படுவதாகவிருந்தால் அவர்கள் கூறுகின்ற கோரிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகள் அவர்களிடம் இருக்கவேண்டும். இவர்கள் சர்வதேச நாடுகள் தமக்கு ஆதரவாக இருப்பதாக கூறுகிறார்கள் ஆனால் இன்னும் ஒரு நாடு கூட இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை அங்கீகரிக்கவில்லை. தமிழ் மக்கள் அதிகம் வாழும் கனடா, இங்கிலாந்தில் கூட இங்கு நடைபெற்றது இனப்படுகொலை என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே அவ்வாறான ஒரு சூழலில் தான் நாங்கள் இன்றும் இருக்கின்றோம். சமஸ்டியை நோக்கிப் பயணிக்கவேண்டும் என்பது ஒரு விடயம். அந்த இடத்தை நோக்கி நகர்வதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு Pro Active ஆன செயற்பாடு. நாங்கள் செயற்திறன் இல்லாமல் அரசாங்கம் கூறுவதைக் கேட்டுக்கொண்டு இருப்பதும் அதற்கு எதிர்வினையாற்றுவதும் தான் எங்களது கடமையாக இருக்க முடியாது. ஆகவே நாங்கள் சில காய்களை நகர்த்த எத்தணிக்கின்றபோது அரசாங்கம் எதிர்வினையாற்றலாம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது வேறு வேறு பிரச்சினைகள் வரலாம். இப்படியான சூழல் வருகின்றபோதுதான் இதனை தீர்ப்பதற்கான வழிவகைகள் ஏற்படும். பாராளுமன்றில் வெல்லவேண்டும் என கஜேந்திரகுமார் அணியினர் சில கோசங்களை வைத்திருக்கிறார்கள் எதவித திட்டங்களும் இல்லாமல். அவர்களுக்கு இரண்டு ஆசனங்கள் கிடைத்திருக்கிறது.

எனினும் இரண்டு ஆசனங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும் என இப்பொழுது கேட்கின்றார்கள். ஏனையோர் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுவதை விடுத்து தற்போது உங்களுக்கு இரண்டு ஆசனம் கிடைத்திருக்கின்றது. உங்களுக்குக் கிடைத்திருக்கின்றபலத்தைவைத்துக்கொண்டு நீங்களே கூறுகின்ற இந்த சர்வதேச பூகோள அரசியலுக்குள் எத்தனை நாடுகளுக்குச் சென்று எங்களது பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுடன் கலந்து பேசியிருக்கிறீர்கள். எத்தனை நாடுகளை எமக்கு ஆதரவாகத் திரட்டியிருக்கிறீர்கள். மனித உரிமைச் சபையில் 47 நாடுகள் பங்குபற்றுகின்றது. நீங்கள் கூறுகிற விடயங்கள் அங்கு நடைபெறவேண்டுமாகவிருந்தால் நீங்கள் அங்கு போகவேண்டும் அவர்களுடன் பேசவேண்டும். சரியான சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும். அவ்வாறில்லாமல் நீங்கள் எல்லாவற்றுக்கும் கட்சிகளைக் குற்றஞ்சாட்டிவிட்டுப் பயணிப்பது சரியாக இருக்காது.

**கேள்வி :- இந்நாட்டில் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பது சாத்தியமா?**

பதில் :- சாத்தியப்படாது என்று நான் முற்றுமுழுதாக ஒதுக்கிவிடமாட்டேன். ஏனெனில் இந்நாட்டில் இன்னும் பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கிறது. அண்மைக்காலங்களில் முன்பு வாய் மூடியிருந்த பலர் இன்று 13 நிறைவேற்றப்படவேண்டும் என்று பேசுகின்ற நிலைமைகள் எழுந்திருக்கின்றது. சம்பிக்க ரணவக்க உட்பட பல்வேறுபட்ட சிங்கள அரசியல்வாதிகள் இவ்வளவு காலமாக வாய்திறக்காமல் இருந்தவர்கள் கூட நாங்கள் இந்த 13இனை நிறைவேற்றவேண்டும் என்று கோரிக்கை வைத்த பிற்பாடு. அவர்கள் இந்த 13 ஐ நிறைவேற்றாதுவிட்டால் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று கூறுகிற ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறார்கள்.

ஆகவே இந்த அரசாங்கம் செய்யுமா? என்பது என்னைப் பொறுத்தவரை ஒரு கேள்வி. ஏனெனில் இந்த அரசாங்கம் தான், சிங்கள பௌத்த வாக்குகளால் வந்திருப்பதாகவும் தாங்கள் இந்த நாட்டில் சிங்கள பௌத்தத்தை பாதுகாக்கின்ற மன்னர்களாகவும் தங்களைக் கருதிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அந்த நிலையில் இவர்கள் செய்வார்களா? என்கிற கேள்வி இருக்கிறது. அவ்வாறு செய்யாமல் இவர்கள் புறந்தள்ளுகின்ற பட்சத்தில் இதில் இந்தியாவும் ஒரு பங்குதாரராக இருந்து இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் வந்தது என்ற அடிப்படையில் நாங்கள் இதுதொடர்பாக மேற்கொண்டு இந்தியாவுடன் பேச ஒரு களச்சூழல் உருவாகும் என நாங்கள் நம்புகின்றோம். ஆகவே நாங்கள் பொறுமையாக இருந்து அந்த விடயங்களைக் கையாளவேண்டும். இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்காக அடிப்படை விடயங்களைக் கொடுக்க மறுக்கின்ற பட்சத்தில் மாறியிருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தியா இதனை வேறு எவ்வாறு கையாளலாம் என சிந்திக்கின்ற சூழ்நிலைகள் கூட ஏற்படலாம்.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## சூடு பிடிக்கும் அரசியல் களமும், பட்டினிச் சாவும்

இலங்கையில் கடந்த இரண்டு வாரங்களாக சூடுபிடித்துள்ள அரசியல் கள நிலவரங்களால் கொழும்பு பரபரப்படைந்துள்ளது. ஐ.நாவில் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு மிகப்பெரும் அழுத்தம் கொடுக்கும் முகமாக அதன் ஓர் அங்கமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோரி தமிழ் பரப்பில் உள்ள அரசியல் தலைமைகள் உட்பட முஸ்லீம் - சிங்கள அரசியல் தலைவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், இளைஞர் யுவதிகள், மதகுருமார், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் கையெழுத்து வேட்டை ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

1978ஆம் ஆண்டு முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் மிகப்பெரும் பாதிப்பையும் இழப்புக்களையும் தமிழ் இளையவர்கள் தடுப்புக்காவலில் நீண்டகாலம் விசாரணை இன்றி சிறையில் வாடுகின்றனர். இப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோரி பலகாலமாக பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்ற பொழுதெல்லாம் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. தற்பொழுது மூன்று சமூகமும் இணைந்துள்ளது. மாற்றம் வருமா என தமிழ் சமூகம் அங்கலாய்ப்பில் உள்ள நிலையில் பொருளாதார நெருக்கடியானது சுருக்குக்கயிறு போல கழுத்துக்கு வந்து நிற்கின்றது. தொழிற்சங்கப் போராட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வலம் வந்து கொண்டு இருக்கின்றன.

சுகாதார ஊழியர்கள் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பல வைத்தியசாலைகளில் நோயாளர்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளனர். அடுத்ததாக மின்சார துண்டிப்பு இன்று வருமா? நாளை வருமா? என்ற ஓர் அவல நிலை காணப்படுகின்றது. ஏற்கனவே எரிவாயு தட்டுப்பாட்டால் மக்கள் அல்லல்படும் நிலையில் இரவு வேளைகளில் மின்சாரம் தடைப்படுமானால் மண்ணெண்ணெய் விளக்கு பாவிக்கும் முறை தொடர உள்ளது. இந்நிலையில் எரிபொருளுக்கும் தட்டுப்பாடும் விலையேற்றமும் மக்களின் தலையில் சுமையாக இறங்கியுள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் அவதியுறுகின்றனர். விலையேற்றப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் விலைக்குறைப்புக்கிடமே இல்லை என்ற நிலையில் தொடர்ந்து விலையேறி மக்களை பட்டினிச் சாவை நோக்கிக் கொண்டு செல்கின்றது. தற்பொழுது அரசானது மிகப்பெரும் நெருக்கடி சிக்கலில் சிக்கியிருந்தாலும் அதைப்பற்றியெல்லாம் கணக்கில் எடுக்காமல் பயணித்து வருகின்றது. கொழும்பு அரசியலில் திடீர் திடீர் திருப்பங்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளது.

தேர்தல் பற்றிய கதைகளும் பரவத் தொடங்கியுள்ளது. இவ்வாறு ஆட்சியைத் தக்கவைக்க அரசும் ஆட்சியைப் பிடிக்க எதிர்க்கட்சிகளும், மாகாண சபை தேர்தல் வைத்தால் அதனை எப்படி எதிர்கொள்வது என தமிழ் தரப்பில் உள்ள தமிழ் அரசியல் தலைமைகளும், பிரச்சினைக்குள் முஸ்லீம் தலைமைகளும் உள்ள நிலையில், மக்கள் அத்தியாவசிய பொருள் விலையேற்றத்தால் வாழ்வா? சாவா? என போராடும் நிலையில் உள்ளனர்.

அடுத்தபக்கம் மீனவர்கள் போராட்டமும், முடிவின்றி தொடர்கின்றது. நெல் அறுவடை வீழ்ச்சி, விவசாயிகள் துயர் உற்ற நிலையில் ஒட்டுமொத்த இலங்கை மக்களும் சுறா வழியில் சிக்கிய படகு போல் அல்லாடி வருகின்றனர். அரசாங்கம் தனது விடாப்பிடி கொள்கையை விட்டு விலகி மக்களின் நலன் கருதி ஆக்கபூர்வ செயல்பாட்டில் இறங்குவதே இதற்கு ஒரே வழி.

# 178 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



இத்தொடர்பாளர்கள் எழுத்துருவிலான தகவலைக் காட்டுக்குக் கொண்டுசென்று, அங்குள்ள இரகசியத் தபால் பெட்டிக்குள் போடுகின்றனர். அல்லது காட்டின் குறித்த இடத்திலோ கலங்கரை விளக்கம் என அழைக்கப்படும் பண்ணையிலோ இருக்கின்ற கெரில்லா வேவுக்குழுவிடம் வாய்வழியாகத் தெரிவிக்கின்றனர். குலங்கரை விளக்கத்தில் கெரில்லாக்கள் நகரிலிருந்து வருகின்ற ஆட்களைச் சந்திக்கின்றனர். அல்லுத குறித்த இடத்தை அவர்கள் சென்றடைவதற்கான நகர்வுக்குப் பாதுகாப்பளித்து, அங்கிருந்து ஆட்களை நகருக்கு அனுப்புகின்றனர். கெரில்லா எதிர்வேவுக்காரர்கள் தொடர்ச்சியாக மக்கள் வாழ்விட நிலைகளில் சுற்றித்திரிந்து, அரச சிறப்புப் பணியகத்தின் முகவர்களை இனங்காண்பதற்காகத் தகவல் தருபவர்களைச் சந்திக்கின்றார்கள். இச்சிறப்புப் பணியகம் எதிர்ப்பியக்கத்திற்குள் ஊடுருவுவதற்காகத் தொடர்ச்சியாக முகவர்களை அனுப்புகின்றது. நாசகாரக் குழுக்கள் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருக்கின்றன.

போக்குவரத்துப் பாதைகளைக் கண்காணித்தல், தொடர்புக் கம்பிகளை ஒற்றுக்கேட்டல், வேவுத் தகவல்களைத் திரட்டுதல், இரகசிய இடங்களிலிருந்து தகவல்களைப் பெறுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் வாழ் நிலைகளுக்கு பரப்புரைக் குழுக்கள் அனுப்பப்படுகின்றன. தமது வேலைகளை அமைதியாகச் செய்ய விரும்புகின்ற, அதிகாரத் தரப்பினருடன் பிரச்சினைகளைவைத்திருக்கவிரும்பாத குடியானவர்களுக்கு இக்குழுக்கள் அவர்கள் ஆயுதமேந்தவேண்டுமென்ற நம்பிக்கையை வழங்கவேண்டும். எதிர்ப்பியக்கத்தின் நடுவகத் தளங்களுக்கும் முன்னணிப் படைப்பிரிவுகளுக்குமிடையில் பணி மாற்றங்கள் நடைபெறுகின்றன. இறுதியாக, தளங்களினதும் படைப்பிரிவுகளினதும் அமைவிடம் நிலையானதாக இருக்கக்கூடாது. அப்படித் தவறுமிடத்து, அதற்குள் அரச முகவர்கள் ஊடுருவும் சாத்தியம் அதிகரிக்கின்றதுடன், ஆகாயத் தாக்குதல், படைகளின் சுற்றிவளைப்புத் தாக்குதல் போன்றவாறான ஆபத்தும் அதிகரிக்கின்றது. இன்னமும் கூடியளவில் பிற பணிகள் இருக்கின்றன. அவற்றையும் வினைத்திறனுடன் நிறைவேற்றவேண்டும். இல்லையேல், இவ்வாறான எதிர்ப்பின் விலை பெறுமதியற்றதாகிவிடும்.

ஆனால், இவையாவற்றிற்காகவும் தொடர்ச்சியாக முன்னோக்கி நகர்ந்தவாறு இருக்கவேண்டும். ஆரம்பத்தில் பூரண திகைப்புடன் பரந்தளவில் சகலதும் இலகுவாக எட்டக்கூடியதாக இருக்கின்றது. எதிர்ப்பியக்கத்தின் இராணுவ வெற்றிகள் அரசியல் உளப்பதிவுகளை ஏற்படுத்துகின்றன. தாக்குதல் - பின்வாங்குதல் என்ற பிரசித்திமிக்க கெரில்லாத் தந்திரோபாயத்திற்கெதிராக (இறப்பர்த் தொடுகைத் தந்திரோபாயம்) அரசினால் நியமிக்கப்பட்ட இராணுவப் படைகள் சுறுசுறுப்பற்றவையாகவும் குறைந்த வினைத்திறன் மிக்கவையாகவும் ஆக்கப்பட்டுவிடுகின்றன.

கெரில்லாக்கள் தங்களது பலத்தைவிட விஞ்சிய படைகளுடன் திறந்த நேரடிச் சமரில் ஈடுபடுவதைத் தவிர்க்கின்றனர். இது அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அழிவுதருகின்ற விடயமாகும். இராணுவத்தினர் தெருச்சமரைப்போல (பீரங்கிகளுடனும் கவச வாகனங்களுடனும் தெருக்களில் நிலையெடுத்துக்கொள்ள முடியாது), காட்டுச் சமரையும் விரும்புவதில்லை. இராணுவத்தினர், தாங்கள் சமரிடுகின்ற மக்களைப் பற்றியும் பிரதேசத்தைப் பற்றியும் அறிந்திருக்கவில்லையாயின், அவர்கள் பாத்திரக் கடையில் புகுந்த யானையின் நிலையிலிருப்பவர்கள் போலாகிவிடுகின்றனர். ஏனெனில் ஏதோ ஒரு சூழ்நிலையில் மக்கள் சலித்துப்போய், அவர்களிடத்தில் அதிருப்தியாளர்கள் தோற்றம் பெற்றுவிடுவார்கள். வெவ்வேறு காலப்பகுதிகளில்வெவ்வேறுநாடுகளில் இவ்வாறான நிலைமை ஒரேமாதிரியான முறையில் நடந்தேறியுள்ளது.

இறுதியாக உயர்கட்டளையகம் பின்வரும் கருத்துரையால் (வழக்கமாக, கீழ் மட்டத்திலுள்ளவர்களின் தொடர் அறிக்கைகளால்) நிரப்பப்பட்டது. அதாவது காடுகளில் மேற்கொள்கின்ற சுயாதீன நகர்வுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். தூசிகள் மூடிய பழைய ஆவணங்களிலிருந்து எகேர்களால் (எகேர் என்பதன் பொருள் யாதெனில், வேட்டைக்காரன் என்பதாகும்.

இரண்டாம் உலகப்போரின்போது, ஜேர்மனிய கெரில்லா எதிர்ப்புக் காட்டு நடவடிக்கைப் படைகளும் எகேர் என்றே அழைக்கப்பட்டன) பயன்படுத்தப்பட்ட கெரில்லா எதிர்ப்புத் தந்திரோபாய வழிகாட்டல்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இவை பல்லாண்டு காலமாக சகல வகையான கெரில்லாக்களுக்கு மெதிராகப் பயன்படுத்தப்பட்டன. துடந்தொடர் நிபுணர்கள், நடவடிக்கையாளர்கள், தந்திரோபாய ஆழ வேவுக்காரர்கள், தொழில்சார் வேட்டைக் காரர்கள், சிறப்பு அணிகள் போன்றவற்றிலிருந்து எடுக்கப்பட்ட, நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட, கற்பிக்கப்பட்ட, நன்றாக ஆயுதந்தரித்த ஆட்கள் கெரில்லாக்களின் காட்டுப் பாதைகளில் இறங்கி, அவர்களின் காட்டு நகர்வுகளைத் தடுத்து நிறுத்தினர். இதிலிருந்தே சமர் நடவடிக்கைகள் அரச போக்குவரத்துப் பாதைகளிலிருந்து காட்டுப் பாதைகளுக்கு இடம் மாறிச் செல்கின்றன. அவை அமைதியாகவும் வெளித்தெரியா வண்ணமும் தந்திரமாகவும் மேற்கொள்ளப்பட்டன. காடுகளில் உயிர்வாழ்தலுக்காகப் பயிற்றுவிக்கப்பட்ட, மிக நன்றான முறையில் உருமறைப்பு வலையால் உருமறைக்கப்பட்ட, பொறுமைமிக்க எகேர்கள் வழங்கப்பட்ட நேரம்வரை அவர்களுக்கென வழங்கப்பட்ட பிரதேசத்தில் என்ன நடைபெறுகின்றதென்பதை மறைவாக இருந்து அவதானித்தார்கள். சிறிய துரும்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட தடயங்களும் பொருட்களும் (எங்களது காலப்பகுதியில் - சுடப்பட்ட வெற்றுக்கோதுகள், உணவுப் பண்டம் அடைத்துவரும் தகர டப்பாக்கள், புகைபிடித்த சிகரெட் துண்டுகள், பழைய கட்டுத்துணிகள் போன்றன) பல விடயங்களை தெரியப்படுத்தக் கூடியதாக இருந்தன. யார், எவ்பொழுது, எந்த மக்கள் வாழ்விடத்திலிருந்து காட்டுக்குள் சென்றார்கள் என்பதை அறியக்கூடியதாக இருந்ததுடன், தடயங்களைக் கொண்டு அங்கே அவன் என்ன செய்தான் என்பதையும் அறியக்கூடியதாக இருந்தது. (இதன்போது, கூடுதலாக இரகசியத் தபால் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. அவற்றினுள் பெறப்பட்ட தகவல்கள் போடப்பட்டு, நடவடிக்கை ஆய்வுக்கு அனுப்பப்பட்டன). கேரில்லாக்களது வேவு நாசகாரக் குழுக்களின் பாதைகள், பொருட் தளவாடப் போக்குவரத்துப் பாதைகள், முகாம்களும் கலங்கரை விளக்கங்களும் அமைந்துள்ள இடங்கள் ஆகியன படிப்படியாக அறிந்துகொள்ளப்பட்டன.

இவற்றுக்குச் செல்கின்ற பாதைகள், அங்கேயிருக்கின்ற இரகசியக் காவல் நிலைகள், காவற்கடமையாளர்கள் காவல் மாற்றுகின்ற ஒழுங்கு, காவலிடத்திற்கு வருகின்ற பாதைகள், முகாமைச் சுற்றிச் சென்றுவருகின்ற காவலுலா நடைமுறைகள் (இன்றைய காலத்தில் - கண்டுகொள்கின்ற, எச்சரிக்கை செய்கின்ற சைகை அமைப்புக்கள்) ஆகியனவற்றை அறிந்துகொண்டனர்.

இவ்வாறான அவதானிப்பின் பலாபலன்கள் கெரில்லா முகாமுக்குள் இயங்குகின்ற தமது முகவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தும் சாத்தியத்தைக் கொடுத்தன. முகாமுக்கருகிலிருக்கின்ற அல்லது முகாம் வளாகத்திற்குள் இருக்கின்ற (வழக்கமாக முற்றிலும் சந்தேகம் வராத இடங்களான, கழிவு கிடங்குக்கு அருகில் அல்லது கழிப்பிடத்திற்கருகில்) அல்லது நகர்வின்போது, குறித்த இடத்தில் அமைந்துள்ள இரகசிய இடத்தில் முகவர்கள் தகவல்களை வைத்தனர். பெற்றுக்கொள்ளப்பட்ட இவ்வாறான தகவல்கள் எகேர் சிறப்பணிக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் சாத்தியத்தைப் பொறுத்து தமது முகவருக்குக் காப்பு வழங்கினர். பிற மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக தகவல்கள் நடவடிக்கையாளர்களால் எகேர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டன. சூழ்நிலை பற்றிய அறிவு, எதிர்ப்பை நாசப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை எகேர்களுக்கு வழங்கியது.

**தொடர்வான்....**
**நெற்றிபொறியன்**

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் – இன்றைய தேவை என்ன?




இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினை நீண்ட காலமாகவே இழுபறி நிலையில் உள்ளதொரு பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பினரால் பல காலமாக முன்வைக்கப்பட்டு, பல்வேறுபட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது சாதாரண பிரச்சினையல்ல. அது தண்டனைக்குரிய குற்றம் என்று குற்றவியல் நடவடிக்கைச் சட்டம் கூறுகின்றது. ஆட்களை வலிந்து கடத்திச் செல்வது அல்லது தனது பொறுப்பில் உள்ள ஒருவரைக் காணாமல் போகச் செய்வது என்பது தண்டனைக்குரிய பாரதூரமான குற்றம் என்று, நாட்டின் பொதுவான சட்டம் குறிப்பிடுகின்றது. இது முதலாவது. அதேநேரம், அது ஒரு அடிப்படை உரிமை மீறல் என்றும், மிக மோசமான மனித உரிமை என்றும் சர்வதேச சட்டங்களும் கூறுகின்றன. அந்த வகையில் அது கடும் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகின்றது. இது இரண்டாவது நிலைப்பாடாகும். **ஒரு ஜனநாயக நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான ஆட்கள் காணாமல் ஆக்கப்படுவது என்பது இலகுவில் புறந்தள்ளிவிடப்படக்கூடிய விடயமல்ல. அந்த வகையில் அது அப்பட்டமான ஜனநாயக விரோத நடவடிக்கையாகவும், ஜனநாயகத்திற்கு சாவு மணி அடித்து, சர்வாதிகாரத்தைக் கையில் எடுக்கின்ற ஒரு மோசமான நடவடிக்கையாகவும் கருதப்படுகின்றது.** இத்தகைய ஒரு பின்னணியிலேயே இலங்கையில் குறிப்பாக பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்ற விடயத்தை நோக்க வேண்டியிருக்கின்றது. அந்த வகையில் காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்கள் பற்றிய விடயம் சர்வதேச அரங்காகிய ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையில் ஏற்கனவே அணுகப்பட்டிருக்கின்றது. இந்த விடயத்திற்குப் பொறுப்பு கூறுவதற்கு, அந்தப் பேரவையில் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கி இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலைமையிலேயே புரையோடிப் போயுள்ள பல பிரச்சினைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்ற காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்கள் பற்றிய பிரச்சினைக்கு அரசாங்கத்திடமிருந்து உறுதியானதொரு பதிலைக் கோரி, வவுனியாவில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டு, அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பல கேள்விகளுக்கு விடை தேட வேண்டியிருக்கின்றது. இவற்றில் பல கேள்விகள் பல்வேறு வடிவங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல தரப்பினராலும் எழுப்பப்பட்டிருக்கின்றன. அந்தக் கேள்விகளை முன்வைத்து பல்வேறு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்தப் போராட்டங்களில் பல இந்த மோசமான பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்வு காணப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் உணர்வுபூர்வமாக அமைந்திருந்தன. காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற உத்வேகத்துடன் பல போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. அதேவேளை, போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்ற அரசியல் நோக்கத்திற்காக ஒரு சிலருடைய அரசியல் தேவைக்காக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விடயம் கையாளப்பட்டு போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன என்பதையும் மறுப்பதற்கில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இனியும் தாமதிக்க முடியாது. கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும், கையளிக்கப்பட்டும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டவர்கள் பற்றிய தகவல் தெரியாமல் இனியும் இருக்க முடியாது. அவர்களைப் பற்றிய விபரங்களை அரசாங்கம் உடனடியாக வெளியிட வேண்டும். தன்னுடைய பொறுப்பில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்கள் பற்றி அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும். இந்தப் பிரச்சினையில் எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளையே வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டிருந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் முன் வைத்திருந்தது. ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ள விடயத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஒரு சிலரே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள். நீண்ட காலமாகவே அவர்கள் நீதி கோரி வீதிகளில் இறங்கி போராடியிருந்த போதிலும், அவர்களுடைய கோரிக்கைகள் உரிய முறையில் சம்பந்தப்பட்டவர்களினால் கவனத்தில் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்ற உத்தரவாதம் தமிழர் தரப்பு அரசியல்வாதிகளினால் வாயளவில் வழ்ங்கப்படுகின்றதேதவிர, அதிகாரம்கொண்ட பொறுப்பானவர்களிடமிருந்து அவர்களுக்கு உரிய முறையில் பதிலளிக்கப்படவில்லை. இதனால் அவர்கள் விரக்தியடைந்துள்ளார்கள். எவர் மீதும் நம்பிக்கை வைக்க முடியாது என்ற நிலைமைக்கு அவர்கள் ஆளாகினார்கள். அதன் காரணமாகவே இறுதி வடிவமான சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர்கள் குதித்திருந்தார்கள். ஆனால் இந்தப் போராட்டத்தின் தீவிரத் தன்மையை எவரும் முதலில் சரியாகப் புரிந்திருக்கவில்லை. வழமையானதோர் அரசியல் போராட்ட நடவடிக்கையாகவே பலரும் அதனை ஆரம்பத்தில் நோக்கினார்கள். அந்தப் போராட்டத்தின் உண்மைத்தன்மையை அவர்கள் உணரத் தவறியிருந்தார்கள். உண்ணாவிரதப் போராட்டம் என்ற பெயரில் அவர்கள் ஒப்புக்காகவே ஏ9 வீதியில் எதிரெதிரே அமைந்துள்ள வவுனியா அஞ்சல் அலுவலகம் மற்றும் வவுனியா பொலிஸ் தலைமை அலுவலகம் என்பவற்றுக்கிடையில் வீதியோரத்தில் அவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள் என்று பலரும் கருதியிருந்தார்கள். ஆனால் நிலைமை அப்படி இருக்கவில்லை. ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதற்கு அரசாங்கம் நீதி வழங்காவிட்டால் தாங்கள் உயிர் துறப்போம் என்று அவர்கள் ஓர் இறுதித் தீர்மானத்திற்கு வந்திருந்தார்கள் என்ற உண்மை தாமதமாகவே பலருக்கும் உறைத்திருந்தது.

அவ்வாறிருந்தபோதிலும், அந்த உண்ணாவிரதம் அரசாங்கத்தின் நேரடி தலையீட்டினாலும், அந்தப் பிரச்சினை குறித்து பேச்சுக்கள் நடத்தப்படும் என்று அப்போதைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன நேரடியாக அளித்த உத்தரவாதத்தையடுத்து, அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் பலரும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் குறித்து பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். இன்னும் ஒரு நாள் தாமதித்திருந்தால், அந்தப் போராட்டத்தை நாங்கள் பிரமாண்டமானதொரு போராட்டமாக்கியிருப்போம். அதற்குள் அவசரப்பட்டு அதனை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார்களே என்ற ஆதங்கம் இளைஞர்கள் மத்தியில் மேலோங்கியிருப்பதைக் காண முடிகின்றது. இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் திட்டமிட்டு முறியடித்துவிட்டார்கள். அவ்வாறு இடம்பெற இடமளித்திருக்கக்கூடாது. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று வாதிடுபவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்கள் பற்றிய பிரச்சினை குறித்து விரிவாக பார்க்க வேண்டியிருக்கின்றது. அத்துடன் இதன் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து தீவிரமாகவும் அதேவேளை மிகுந்த பொறுப்போடும் சிந்தித்துச் செயற்பட வேண்டியிருக்கின்றது. ஏனென்றால் நீதி வழங்கப்பட வேண்டும். இல்லையேல் நாங்கள் எங்களையே மாய்த்துக் கொள்வோம் என்று பாதிக்கப்பட்டவர்கள் இறுக்கமானதொரு தீர்மானத்திற்கு வந்திருந்தார்கள். அவ்வாறு அவர்கள் வருவதற்குப் பல காரணங்கள் இருந்தன. கைது செய்யப்பட்டவர்களும், கடத்திச் செல்லப்பட்டவர்களும் ஒரு பக்கம் இருக்க, பொது மன்னிப்பு அளிக்கப்படும். விசாரணைகளின் பின்னர் நாங்கள் அவர்களை விடுதலை செய்வோம் என்று அரசாங்கம் அளித்த உறுதிமொழியையடுத்து, பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இராணுவத்தினரிடமும், இராணுவ புலனாய்வாளர்களிடமும் கையளித்திருந்தார்கள்.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து மெனிக்பாம் அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த குடும்பங்களை அழைத்து பல கூட்டங்கள் பல்வேறு தேவைகளுக்காக நடத்தப்பட்டிருந்தன. மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்த குடும்பங்களில் மறைந்திருந்தவர்களாகக் கருதப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களையும், அவர்களுடன் சேர்ந்து இயங்கியவர்களையும் கண்டுபிடிப்பதற்காக அந்தக் கூட்டம் நடத்தப்பட்டிருந்தது. அவ்வாறானவர்களைத் தங்களிடம் கையளிக்குமாறும், விசாரணையின் பின்னர் அவர்களை விடுதலை செய்வதாக அந்தக் கூட்டத்தில் அந்த முகாமுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரியும், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த புலனாய்வாளர்களும் உறுதியளித்திருந்தனர். அதேநேரம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் ஒருவரும் யாரும் பயப்படத் தேவையில்லை. சந்தேகப்படவும் தேவையில்லை. இராணுவம் கேட்பவர்களை ஒப்படையுங்கள் அவர்களுக்கு எதுவும் நடக்காது என கூறியிருந்தார். அத்துடன் விசாரணைகளின் பின்னர் அவர்கள் திரும்பி வருவார்கள். நாங்கள் இருக்கிறோம் அதனைப் பார்த்துக்கொள்வோம். அவர்களுடைய பாதுகாப்புக்கு நாங்கள் உத்தரவாதமளிக்கிறோம் என்றும் அவர் அந்த இடத்தில் கூடியிருந்த இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களிடம் உறுதியளித்திருந்தார். அந்த உறுதிமொழியை நம்பி தமது பிள்ளைகளைக் கையளித்தவர்கள் இன்று தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டுவிட்டார்களே என்று கண்ணீரும் கம்பலையுமாகத் திரிகின்றார்கள். அது மட்டுமல்ல. தங்களுடைய அந்தப் பிள்ளைகளைத் தாங்களாகவே இராணுவத்தினரிடம் கையளித்து காணாமல் போகச் செய்திருக்கின்றோமே என்ற கழிவிரக்கத்தில் மனம் வருந்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த குற்ற உணர்வுடன் கூடிய மன வருத்தம் என்பது சாதாரணமானதல்ல. அந்த குற்ற உணர்வும்கூட தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு நீதி வழங்க வேண்டும் என்ற சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு உரம் சேர்த்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளமைக்கு நீதி கோரி தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்ற போராட்டத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள சாகும் வரையிலான உண்ணாவிரதம் என்ற தீர்மானத்தை மீறி அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு தீர்மானத்தை எடுக்க முடியும் என்று கூறுவதற்கில்லை. ஆயினும் அடுத்த கட்ட நகர்வு என்பது அரசாங்கத்தின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

இந்த நிலைமையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும் என்ற கோரிக்கையில் பல கேள்விகள் எழுந்திருக்கின்றன. கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும், கையளிக்கப்பட்டும் கொண்டு செல்லப்பட்டவர்கள் ஏன் காணாமல் ஆக்கப்பட்டார்கள்? அதற்கு பொறுப்பானவர்கள் யார்? கைது செய்யப்பட்டவர்களும், உறவினர்களினால் கையளிக்கப்பட்டவர்களும், கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களும் எந்தெந்த இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்? எத்தனை பேர் அவ்வாறு வைக்கப்பட்டிருந்தார்கள்? அவர்களைப் பற்றிய விபரம் என்ன? அவர்களின் பெயர்ப்பட்டியல் எங்கே? அவர்களில் எத்தனை பேர் இன்னும் உயிரோடு இருக்கின்றார்கள்? உயிரோடு இல்லாதவர்கள் எத்தனை பேர்? அவர்கள் பற்றிய விபரம் பெயர்ப்பட்டியல் எங்கே? ஒட்டுமொத்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் என்ன பதிலை வைத்திருக்கின்றது? காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் எப்போது பொறுப்பு கூறப் போகின்றது? இது போன்ற கேள்விகளுக்கு அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின்போது பதில் கிடைக்குமா என்பது தெரியவில்லை.

கடந்த நல்லாட்சி அரசாங்கம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும். அதனால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையை முன் வைத்து தமிழர் தரப்பின் முக்கியமான அரசியல் அமைப்பாகிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அந்த அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது.

யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு இது மிகவும் ஒரு சாதகமான நிலைமையாகவே நோக்கப்பட்டது. அத்தகைய ஒரு சாதகமான அரசியல் சூழ்நிலையில், முறையானதோர் அரசியல் தலைமைத்துவமோ அல்லது வலுவானதோர் அரசியல் வழிநடத்தலோ இல்லாத நிலையில் முன்னெடுக்கப்பட்டிருந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தின் அடுத்த கட்டம் நீதி கிடைப்பதற்கு சாதகமானதாக அமையுமா என்பதை முன்கூட்டியே அனுமானிப்பது கடினமாகவே இருந்தது.

**11 ஆம் பக்கம் பார்க்க...**

**செல்வரட்ணம் சிறிதரன்**

# ஈழத்தமிழ் நோக்கு நிலையிலிருந்து இந்தியாவை அணுகுவது – நிலாந்தன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் "நாங்களும் இந்தியாவின் தலையீட்டைக் கோரித்தான் நிற்கிறோம்" என்று கூறுகிறார்.அவருடைய கட்சி கிட்டு பூங்காவில் ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்திலும் இந்தியா ஒரு நட்பு சக்தி என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தியத் தலையீட்டைக் கேட்பது என்று முடிவெடுத்தால் ஆறு கட்சிகளின் கூட்டு அழைத்தபோது அதில் இணைந்து கூட்டுக்கோரிக்கையின் வடிவத்தை மாற்றியிருந்திருக்கலாந்தானே? மேலும். 13க்கு எதிராக அக்கட்சி மக்கள் மத்தியில் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால் அக்கட்சி உண்மையாகவே இந்தியாவின் தலையீட்டை கோரி நிற்கின்றதா? என்ற சந்தேகமே எழுகிறது.

எனினும்.கடந்த புதன்கிழமை மீனவர்களின் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அக்கட்சி கொண்டுவர இருந்த ஒத்திவைப்பு பிரேரணையை. கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் வேண்டுகோளை ஏற்று அக்கட்சி கையாண்ட விதம் பொசிற்றிவ் ஆனது. 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக இந்தியாவுக்கு எதிராகத்தான் அமையும். ஏனென்றால் கடந்த 34 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா 13வது திருத்தத்தை ஒரு வாய்ப்பாடு போல சொல்லி வருகிறது.எனவே தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு தீர்வை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா முன்வைக்கும்போது அதை எதிர்ப்பவர்கள் தவிர்க்கவியலாதபடி இந்தியாவையும் எதிர்க்க வேண்டித்தான் இருக்கும். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் அதற்காக இந்தியா ஒரு பகை நாடா என்பதுதான்.

கிட்டு பூங்கா பிரகடனம் இந்தியாவை ஒரு நட்பு நாடாக சித்தரிக்கிறது. ஆனால். ஈழத்தமிழர்கள் இந்தியாவை நட்பு நாடாக பார்த்து அதை நம்பவும் தேவையில்லை.பகை நாடாகப் பார்த்து அதை எதிர்க்கவும் தேவையில்லை.அதை தமது நோக்கு நிலையிலிருந்து கையாள்வதே பொருத்தமாக இருக்கும். அதற்குப் பெயர்தான் ராஜதந்திரம். இந்தியாவை ஒரு நட்பு நாடாக நம்பினால் அதன் விளைவாக இந்தியாவின் மீது நம்பிக்கைகளை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். அதுதான் முதலாம் கட்ட ஈழப் போரின்போது நடந்தது. ஆனால் இந்தியா ஒரு பேரரசு. அது ஈழத் தமிழர்களை அதன் பேரரசு நலன்களின் அடிப்படையில் தான் அணுகும். எனவே இது விடயத்தில் நட்பு-பகை என்பதெல்லாம் கிடையாது. நலன்சார் பேரம்தான் உண்டு. இந்தியாவை நட்பு -பகை என்ற இருமைகளுக்கு அப்பால் கையாளப்பட வேண்டிய ஒரு பிராந்திய பேரரசு என்ற அடிப்படையில் பொருத்தமான ஒரு வியூகத்தை வகுப்பதுதான் சரியாக இருக்கும்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்தியாவை குறித்து ஒரு வித கறுப்பு-வெள்ளை சிந்தனைதான் உண்டு. ஒன்றில் இந்தியாவை நேசிக்கிறார்கள்.அல்லது இந்தியாவை வெறுக்கிறார்கள். இரண்டுக்குமிடையே இந்தியாவை புத்திசாலித்தனமாக கையாள வேண்டும் என்ற நோக்கு நிலை ஈழத்தமிழர்கள் மத்தியில் மிகவும் பலவீனமாகவே காணப்படுகிறது.

ஈழத்தமிழர்கள் இந்தியாவை ஒரு நட்பு நாடாக பார்க்கும் நிலைமை எங்கிருந்து உற்பத்தியாகிறது? அது தமிழகத்தை மையமாக வைத்து சிந்திக்கும் போது தான் உற்பத்தியாகிறது.கடலால் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழகம் மொழியால் இனத்தால் பண்பாட்டால் ஈழத் தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு நிலத்துண்டு.எனவே தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் உள்ள இந்த பிணைப்பை-கனெக்டிவிற்றியை- வைத்துக் கொண்டு இந்தியாவை ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள்.

தமிழகம் எனப்படுவதுகூட ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு சனத்தொகையோ.நிலப்பரப்போ அல்ல. அது பல அடுக்குகளைக் கொண்டது.அங்கே ஆளுங்கட்சி உண்டு. ஏனைய கட்சிகள் உண்டு.ஈழ அபிமானிகளாகக் காணப்படும் கட்சிகள் உண்டு. ஈழ உணர்வாளர்கள் உண்டு. இவை தவிர தமிழகத்தின் பொதுசனம் உண்டு. இதில் தமிழகத்தின் ஆளும் கட்சி இந்திய சமஷ்டி கட்டமைப்புக்கு கட்டுப்பட்டது. அது இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கையை மீறி ஈழத்தமிழர்களுக்காக முடிவெடுப்பதில் வரையறைகள் இருக்கும்.ஏனைய கட்சிகளும்கூட ஈழத்தமிழர்களின் விவகாரத்தை தமது தேர்தல் அரசியல் நோக்கு நிலையிலிருந்தே அணுகும். இதுவும் ஈழத்தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஆனால் ஈழத்தமிழர்களின் நெருங்கிய நண்பர்களாக



காணப்படும் கட்சிகளும் அரசியல்வாதிகளும் உணர்வாளர்களும் தேர்தல் மைய நோக்கு நிலைகளுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்காக அர்ப்பணிக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இது ஒரு சிறு தொகை. இது தவிர தமிழகப் பொதுசனங்கள் ஈழத்தமிழர்களுக்கு ஏதும் நடந்தால் கொதித்து எழுவார்கள். ஆனால் அக்கொதிப்பை மடை மாற்றவும் திசை திருப்பவும் தலைவர்களால் முடியும். இது தான் தமிழகம். எனவே தமிழகத்தை தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடாது.

தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான இன மொழி உறவை அடிப்படையாக வைத்து இந்தியா ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் தலையிடுகிறது என்ற ஒரே காரணத்துக்காக ஈழத் தமிழர்களின் விவகாரத்தை இந்தியா தமிழகத்துக்கு ஊடாகத்தான் பார்க்கும் என்றோ,அல்லது இனமான உணர்வுக்கூடாகத்தான் அணுகும் என்றோ எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கையை அவ்வாறு விளங்கிக் கொள்ளவும் கூடாது.

ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கை அதன் அரசியல் பொருளாதார ராணுவ நலன்களின் அடிப்படையில் தான் வடிவமைக்கப்பட்டிருக்கும். அயல் நாடுகளுடனான உறவும் அவ்வாறு தான் அமையும். புதுடில்லிக்கு கொழும்புக்கும் இடையிலான உறவும் அப்படித்தான். எனவே அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார்நலன்சார் உறவுகளின் அடிப்படையில் தான் இந்தியா இலங்கையை அணுகும். அதிலும் கூட கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத்தான் அவ்வாறு அணுகும். கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தின் நலனை பகைத்துக்கொண்டு இந்தியா ஈழத்தமிழர்களை முழுமையாக நெருங்கிவராது. கொழும்பில் இருக்கும் அரசாங்கம் பணிய மறுக்கும்பொழுது ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு அரசாங்கத்தின் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்கும்.

இவ்வாறு ஈழத் தமிழர்களை ஒரு கருவியாக பயன்படுத்த விளையும் பொழுது அதில் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான இன ரீதியான,மொழி ரீதியான,பண்பாட்டு ரீதியிலான இணைப்புகளை இந்திய மத்திய அரசு தனது புவிசார் அரசியல் நோக்கு நிலையிலிருந்து அணுகும். நிச்சயமாக ஈழத்தமிழர்களின் செண்டிமெண்டலான நோக்கு நிலைகளில் இருந்தோ அல்லது தமிழகத்தின் இன உணர்வு நோக்கி நிலைகளிலிருந்தோ அணுகாது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்திய-ஈழத்தமிழ் உறவை இந்த அடிப்படையில்தான் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆனால் ஈழத் தமிழர்களில் கணிசமானவர்கள் தமிழகத்துக்கும் தமக்கும் இடையிலான இனம்,மொழி,பண்பாடு சார்ந்த நெருக்கத்துக்கூடாக இந்திய மத்திய அரசை விளங்கிக்கொள்ள முற்படுகிறார்கள். இது தவறு. இதுவிடயத்தில் தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் இடையிலான கனெக்ரிவிட்டியை இந்திய நடுவண் அரசு அதன் பேரரசு நோக்கு நிலையிலிருந்து பயன்படுத்துகிறது என்பது ஒரு கொடுமையான யதார்த்தம்.

ஏனென்றால் அரசுகள் எப்பொழுதும் அப்படித்தான் நடந்து கொள்ளும்.இது மேற்கத்தைய அரசுகளுக்கும் பொருந்தும். சீனாவுக்கும் பொருந்தும். எனவே ஈழத் தமிழர்கள் இந்தியாவை சென்டிமென்டலாக அணுகும் அந்த நோக்கு நிலையில் இருந்து விடுபட வேண்டும். மாறாக புத்தி பூர்வமாக அணுக வேண்டும்.


ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றால் இந்தியாவுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற தர்க்கத்தை பலமாக முன்வைக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் மிக நீண்டகடல்எல்லைகளின்சொந்தக்காரர்கள். தமிழ்க் கடலை கட்டுப்படுத்தும் எந்த ஒரு நாடும் இந்தியாவின் தெற்கு மூலையை கட்டுப்படுத்தும். எனவே தமிழ்க் கடலை இழந்தால் இந்தியா தனது தெற்கு வாசலின் பாதுகாப்பையும் இழக்க நேரிடும். இந்த தர்க்கத்தை ஈழத்தமிழர்கள் முன்வைக்கலாம். இந்தியாவை நோக்கி ஈழத்தமிழர்கள் முன்வைக்கக்கூடிய கோரிக்கைகளும் அந்த அடிப்படையில் அமைவது நல்லது. ஒரு மக்கள் கூட்டம் வெளிநாடுகளை நோக்கி அதன் கோரிக்கைகளை முன்வைக்கும்போது வெளிநாடுகள் ஏற்றுக்கொள்ளும் என்று பார்த்து அந்தக் கோரிக்கைகளை வடிவமைக்கத் தேவையில்லை. மாறாக தங்களுக்கு எது தேவை என்ற அடிப்படையில் உச்சமான கோரிக்கைகளை முன் வைக்கலாம். பின்னர் அதற்காக உழைக்க வேண்டும். இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கும் கட்சிகள் இந்த விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையில் 13வது திருத்தம் என்ற கோரிக்கையை ஈழத்தமிழர்கள் முன்னிலைப்படுத்த தேவையில்லை. அதேசமயம் 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு இந்தியா தொடர்பான தனது அணுகுமுறைகளில் ஒரு குழப்பமான படத்தை வெளிக்காட்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இதில் ஒரு தெளிவான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அக்கட்சியின் தலைவர்கள் தாங்கள் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு எதிர் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் 13ஐ அவர்கள் எதிர்க்கும் விதம் அக்கட்சியிடம் இந்தியாவை என்கேஜ் பண்ணுவதற்குரிய பொருத்தமான வெளியுறவுத் தரிசனம் ஏதும் உண்டா என்ற கேள்வியை எழுப்புகின்றது. இந்தியா ஒரு பிராந்திய பேரரசு.ஈழத்தமிழர்கள் அரசற்ற ஓரினம். இனப்படுகொலை, புலப்பெயர்ச்சி போன்றவற்றால் மெலிந்து போய் இருக்கும் ஒரு மக்கள் கூட்டம். ஈழத்தமிழர்கள் மத்தியில் மகப்பேற்று விகிதமும் கவலை தரும் வகையில் குறைந்து வருகிறது. சில ஆண்டுகளில் ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவின் இரண்டாவது சிறிய தேசிய இனமாக மாறக்கூடிய ஆபத்து உண்டு என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். எனவே ஈழத்தமிழர்கள் குறுகிய காலத்துக்குள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு ஒரு வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும்.

ஓர் அரசற்ற இனத்தைப் பொறுத்த வரை அல்லது சிறிய தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை பக்கத்துப் பேரரசுதான் இறுதியிலும் இறுதியாக தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதனை உலகின் நவீன வரலாறு உணர்த்துகிறது. இப்பொழுது கொதிநிலையில் இருக்கும் உக்ரேன் விவகாரத்திலும் இது தான் நடக்கிறது. ரஷ்யா கிரிமியாவை ஆக்கிரமித்தது இந்த அடிப்படையில் தான். தீபெத்தில்,பலுசிஸ்தானில், காஷ்மீரில் போராடும் மக்களுக்கு மீட்சி கிடைக்காமல் இருப்பதும் அந்த அடிப்படையில் தான்.

பங்களாதேஷ் தனி நாடு ஆகியதும் அந்த அடிப்படையில் தான். பின்லாந்து மிக நுட்பமான ஒரு வெளியுறவுக்கொள்கையை வடிவமைக்க வேண்டி வந்ததும் அந்த அடிப்படையில் தான். கிழக்குத் திமோரில் பொது மக்கள் வாக்கெடுப்பின் முடிவுகளை இறுதியிலும் இறுதியாக நடைமுறைப்படுத்தியது பக்கத்தில் இருக்கும் பலமான அரசாகிய ஒஸ்ரேலியா தான். எனவே சிறிய தேசிய இனங்களின் போராட்டங்களைப் பொறுத்த வரை இறுதி முடிவை தீர்மானிப்பது அருகிலுள்ள பெரிய அரசுகள் தான் என்பதே உலகளாவிய அனுபவம் ஆகும்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் பிராந்திய அரசியலை கெட்டித்தனமாக அணுக வேண்டும். இந்தியாவின் நலன்களுக்கும் ஈழத் தமிழ் நலன்களுக்கும் இடையிலான பொதுப்புள்ளிகளைக் கண்டுபிடித்து பேரம் பேச வேண்டும்.



# உலகமே அழித்த ஈழத் தமிழர்களின் இன்றைய நிலை என்ன?

**இலங்கையில் மூன்றாவது யுத்தத்திற்கு தயாராகிறது சர்வதேசம்!**

இலங்கையில் மூன்றாவது யுத்தம் ஒன்றை முன்னெடுப்பதற்கு சர்வதேசம் தயாராகிவரும் நிலையில் வடகிழக்கு தமிழ் பேசும் மக்கள் கடந்த அரை நூற்றாண்டுகளாக செய்த தியாகங்கள் இழப்புக்கள் துன்பங்களுக்கெல்லாம் அவர்களுக்கு கிடைத்தது என்ன?

தனது ஆயுத பலத்தின் ஊடாக இலங்கையில் தன்னிச்சையான சுதந்திர தேசம் ஒன்றை உருவாக்கி உலகையே திரும்பிப் பார்க்க வைத்த தமிழர்களின் இன்றைய நிலை என்ன?

தமிழ் மக்களின் போராட்டம் வெற்றி பெற்றதா? அல்லது தமிழர்களின் போராட்டம் அவர்களது இலக்கை நோக்கி வெற்றிகரமாக நகர்ந்து கொண்டிருக்கின்றதா?

என்ற பல கேள்விகளுடன் தமிழ் மக்களின் இன்றைய நிலை குறித்து ஆராய வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

**2009-மே-19ற்கு பின்னர் தமிழர்களின் மனநிலை**

யுத்தம் நிறைவடைந்த ஆறு ஆண்டுகளில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வானது பல்வேறு சந்தேகங்களுக்கு உட்படுத்தப்பட்டதோடு தமிழர்களுக்கான இனப்பிரச்சினைத் தீர்வு ஒன்றை இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு தராது என்ற நிலைப்பாட்டிலேயே பெரும்பாலான தமிழ் மக்கள் இருந்தனர். காரணம் அப்போது இருந்த இலங்கை அரசாங்கம் யுத்த வெற்றியின் மமதையில் இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்றே இல்லை என்ற நிலைப்பாட்டில் இருந்தது. மறுபக்கம் யுத்தம் தமிழர் தேசத்தில் ஏற்படுத்திய அழிவுகளும் அதனால் ஏற்படுத்தப்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்புக்களும் தமிழ் மக்களை அவர்களது அரசியல் தீர்வு குறித்து சிந்திக்க விடவில்லை. யுத்தத்தின் முடிவு ஒருகட்டத்தில் தமிழ் மக்களை விரக்தியின் விளிம்புக்கே தள்ளியிருந்தது. அத்தோடு அது தமிழீழ விடுதலைப் புலிகளை விமர்சிக்கும் நிலைக்கு கொண்டுபோயிருந்தது.பலர் யுத்தம் தமிழர்களை 1970ம் ஆண்டு காலத்திற்கு இழுத்துச் சென்று விட்டது என்று கூறினர். சிலர் தமிழிழ விடுதலைப் புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையாவது பெற்றிருக்கலாம் என்றனர்.இன்னும் சிலர் சந்திரிக்காவின் தீர்வையாவது ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்றனர். இன்னும் சிலர் நாம் எதையுமே பெறாது எல்லாத்தையும் இழந்து நிர்க்கதியாக நிற்கின்றோம் என தங்களை தாங்களே நொந்துகொண்டனர். இவ்வாறு யுத்தத்தின் முடிவு தமிழர் போராட்டத்தின் நோக்கத்தையே சிதறடித்திருந்தது. ஆனால் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் தமிழர்களின் போராட்டத்திற்கான ஒரு அதிகாரப் பகிர்வினை பெற்றுக் கொள்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தியுள்ளது. இருந்தும் தமிழ் மக்கள் தங்களது ஒருங்கிணைந்த செயற்பாடுகளற்ற நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்கான அரசியல் அதிகாரப் பகிர்வுக்கான தீர்வு குறித்த ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்காது பல கொள்கைகளை கொண்ட பல அமைப்புக்களாக பிரிந்து நிற்கின்றமையானது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை பெறுவதற்கான செயற்பாடுகளை பின்னுக்குத் தள்ளியுள்ளது. குறிப்பாக இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை பிராந்திய ரீதியாக பார்க்கும் சர்வதேசமும் அதனுடன் இணைந்து செயற்படும் இலங்கை அரசும் தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளது. இதன் காரணமாக தமிழர்கள் மீது ஒரு அரசியல் தீர்வை திணிக்க சர்வதேசமும் இலங்கையும் எத்தனித்து வருகின்றது. இதன் செயற்பாடுகளே தற்போது இலங்கையில் நடைபெற்று வருகின்ற நல்லிணக்க செயற்பாடுகளாகும். பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்கள் இலங்கை அரசாங்கம் அதிகாரத்தை பகிர்வதற்கு பதிலாக அதிகாரத்தை குவிக்கின்ற செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றது என்று கூறியிருந்தார். உண்மையில் நல்லாட்சி அரசும் சர்வதேச நாடுகளும் இந்தியாவும் இணைந்து இலங்கையில் அதிகாராத்தை குவிக்கின்ற செயற்பாடுகளையே முன்னெடுத்து வருவதாக தெரிகின்றது.

**இலங்கையில் நடை முறைப்படுத்தப்படவிருக்கும் தென்னாபிரிக்க நல்லிணக்க செயற்பாடுகள்**

இலங்கையில் சர்வதேச நாடுகளினால் கொண்டு வரப்பட்ட ஆட்சி மாற்றமானது இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டு வரப்பட்டதுடன் அதற்கான உத்தரவாதத்தை அண்மையில் நடைபெற்ற ஜெனிவா மனிதவுரிமைகள் பேரவை வழுங்கியுள்ளது. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வரைவு ஒன்றை முன்வைத்துள்ள சர்வதேசம் குறித்த வரைவானது தென்னாபிரிக்கவில் நெல்சன் மண்டேளாவினால் முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்க செயற்பாடுகளை கொண்டதாகவும் அமையுமென தெரிவித்துள்ளது. இதனை இலங்கையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான "நீதியின் நிலைமாற்ற செயற்பாடுகள்" எனவும் சர்வதேசம் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு அமைய குறித்த நல்லிணக்க செயற்பாடுகளை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் செயற்படுத்த வேண்டுமென்ற கால அவகாசத்தை சர்வதேசம் இலங்கைக்கு வழங்கியுள்ளதாக தெரிகின்றது. இதன் விளைவுகளே இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள கலந்துரையாடல் அமைச்சு உட்பட அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான குழு. விடுதலைப் புலி சார்பு அமைப்புக்கள் மீதான தடை நீக்கம், வடகிழக்கு உள்ளிட்ட தென்னிலங்கை பகுதிகளில் உள்ள மக்கள் மத்தியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகள் போன்றவற்றை கூறலாம். இலங்கை அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்கள் இலங்கையின் அரை நூற்றாண்டு கால தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண வேண்டும் என்ற நோக்குடன் பிரிக்கப்படாத இலங்கைக்குள் இந்தியாவின் அனுசரணையுடன் தீர்வு ஒன்றை பெறவேண்டுமென்ற நிலைப்பாட்டுடன் சர்வதேசத்திடம் சரணாகதியடைந்ததன் விளைவே சர்வதேசத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த நல்லிணக்க செயற்றிட்டமென தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக இந்திய அரசாங்கத்தின் தலையீடு காரணமாகவே இவ்வாறான நிலைப்பாட்டை சர்வதேச நாடுகள் எடுக்க காரணமெனவும் சொல்லப்படுகின்றது. எனவே வாய்ப்பைப் பயன்படுத்தி சர்வதேச பிராந்திய உறவைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது. இதன் காரணமாகவே மிகவும் அவசர அவசரமாக தன்னுடைய நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. குறித்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அமெரிக்கா இந்தியா உள்ளிட்ட நாடுகளும் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களும் தற்போது களத்தில் குதித்துள்ளன.

எனவே தமிழர்கள் விரும்பினாலும். விரும்பாவிட்டாலும் சர்வதேசத்தினால் முன்வைக்கப்பட்ட இந்த நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தின் ஆதரவுடன் முன்னெடுத்தே தீரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. சர்வதேசத்தினால் முன்வைக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்தினால் நடை முறைப்படுத்தப்படவுள்ள "நீதி நிலைமாற்றத்திற்கான" இந்த செயற்றிட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையினால் பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான செயற்றிட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

**இலங்கை மீதான மூன்றாவது யுத்தத்திற்கு தயாராகும் சர்வதேசம்**

இலங்கையில் தனது மூன்றாவது யுத்தத்தை முன்னெடுப்பதற்கான சகல முன்னாயத்தங்களையும் சர்வதேசம் பூர்த்தி செய்துள்ளது. இன்னும் சில மாதங்களுக்குள் சர்வதேசத்தின் மூன்றாவது யுத்தம் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது என்ன சர்வதேசத்தின் மூன்றாவது யுத்தம் என பலரும் சிந்திக்கலாம். உண்மையில் இலங்கையில் கடந்த ஆறு ஆண்டுகளாக நடைபெற்று வரும் செயற்பாடுகளை சரிவர உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு சர்வதேசம் இலங்கை மீது தொடுத்துள்ள புலனாய்வு யுத்தம் குறித்து தெரியும். இலங்கை தொடர்பில் சர்வதேசம் ஒரு நிகழ்ச்சி நிரலை கொண்டு செயற்பட்டு வருகின்றது. அதனை நடைமுறைப்படுத்த தனது முழுவளத்தையும் பயன்படுத்த சர்வதேசம் பின்நிற்காது. இதையே சர்வதேசத்தின் மூன்றாவது யுத்தமென்று சொல்ல வேண்டியுள்ளது. அதாவது இலங்கையில் தனது முதலாவது யுத்தத்தை முள்ளிவாய்க்காலில் நிறைவு செய்த சர்வதேசம் தமிழர்களின் பேரம் பேசும் சக்தியை இல்லாதொழித்ததோடு சர்வதேசம் தனது இரண்டாவது யுத்தத்தை ராஜபக்ச அரசாங்கத்தை உடைத்தெடுப்பதில் மேற்கொண்டிருந்ததோடு சிங்கள தேசத்தையும் பலவீனப்படுத்தியிருந்தது. இந்த இரண்டு யுத்தங்களின் ஊடாக பிராந்தியத்தில் தங்களுக்கு பல்வேறு நெருக்கடிகளை கொடுத்த தமிழர் தரப்பையும் இலங்கை அரசாங்கத்தையும் பலவீனப்படுத்தி இரண்டு தரப்பினரையும் தங்களிடம் சரணாகதியடைய வைத்த சர்வதேசம் தனது மேலாதிக்கத்தை இலங்கையில் நிலைநாட்டியுள்ளது. ஏற்கனவே தங்களுடன் இணங்கி செயற்பட மறுத்த விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு பின்நின்று செயற்பட்ட இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள், பின்னர் தனக்கு கட்டுப்பட்டு நடக்க மறுத்த சீன அரசாங்கத்துடன் உறவை வைத்துக் கொண்டிருந்த ராஜபக்ச அரசாங்கத்தை உடைத்தெறிந்து தனது மேலாதிக்கத்தை இலங்கையில் நிலைநிறுத்தியுள்ளது. இந்நிலையில் இனிமேல் இலங்கை அரசாங்கம் தங்களது கட்டுப்பாட்டை மீறிச் செல்லக்கூடாது என்பதற்காக இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு காண்பதற்குறிய உபாயத்தீன் ஊடாக தனது மூன்றாவது யுத்தத்தை இலங்கை மீது தொடுத்து இலங்கையை முழுமையாக தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு சர்வதேசம் தயாராகி வருகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழ் சிங்கள தரப்புக்கு அப்பாற்பட்ட சக்தியொன்று செயற்படுகின்றது என்பதை முதலில் எல்லோரும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இதன் காரணமாகவே தமிழர்களினால் இறுதி யுத்தத்தை வெல்ல முடியாமல் போனது என்பதோடு முள்ளிவாய்க்கால் அழிவைக் கூட எங்களால் தடுத்து நிறுத்த முடியாமல் போனது. எவ்வாறு இறுதி யுத்தத்தை தமிழர் தரப்பால் நிறுத்த முடியாமல் போனதோ அதேபோன்று சர்வதேசத்தினால் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் மூன்றாவது யுத்தத்தையும் தமிழர் தரப்பாலோ அல்லது சிங்களத் தரப்பாலோ தடுக்க முடியாது என்பதை தமிழர்களாகிய நாம் புரிந்து கொண்டு செயற்படுவதே உத்தமம். அதாவது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு தமிழர்கள் முதலில் தங்களை பலப்படுத்த வேண்டும் அத்தோடு தமிழர்கள் அனைவரும் ஒருங்கிணைந்த சக்தியாக உருப்பெற்று சர்வதேசத்துடன் இணங்கிச் சென்று எமக்கான நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிப்பதே இப்போதைக்கு புத்திசாலித்தனமான விடயமாகவிருக்கும். அதைவிடுத்து தமிழர்கள் பல அமைப்புக்களாக பிரிந்து ஒவ்வொரு விதமான கருத்துக்களுடன் எதிரும் புதிருமாக செயற்படுவோமாக இருந்தால் எப்படி எமக்கு முள்ளிவாய்க்கால் அழிவை தடுக்க முடியாமல் போனதோ அதேபோன்று தமிழர்கள் மீது திணிக்கப்படப் போகும் அரசியல் தீர்வையும் தடுக்க முடியாமல் போகும். எனவே அரசாங்கமோ அல்லது சர்வதேசமோ அல்லது இந்தியாவோ கொண்டு வருகின்ற நல்லிணக்க அரசியல் தீர்வு செயற்பாடுகளை தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைந்து பங்குபற்றி அதில் எமக்கு சாத்தியமான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு அழுத்தம் கொடுப்பதே தமிழர் விடிவிற்கு சாத்தியமான பாதையாக அமையும். அதை விடுத்து தமிழர்கள் அமைப்பு ரீதியாகவும் கட்சி ரீதியாகவும் பிரிந்து நின்று தனிநபர் அடையாளங்களுக்குள் அகப்பட்டு தங்களது சொந்த நலன்களுக்காகவும் கட்சி நலன்களுக்காகவும் செயற்படுவோமாக இருந்தால் தமிழர்களின் போராட்டம் இன்னும் முப்பது வருடங்களுக்கு தொடரும் என்பதுடன். தமிழர்கள் தங்களது தேசிய அடையாளங்களை தொலைத்து விட்டு தேட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்பதே யதார்த்தம்.

**கூட்டமைப்பு – சிவில் சமூகம் – புலம்பெயர் சமூகம் இணைய வேண்டிய கட்டாயம்**

சர்வதேசத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள இந்த மூன்றாவது யுத்தத்தில் சிங்கள தேசம் தனது கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு நிற்பதை காணக்கூடியதாகவுள்ளது. இன்று சிங்கள தேசம் தன்னை சர்வதேசத்திடம் இருந்து காத்துக் கொள்வதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

11ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

# ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த இன அழிப்பு




ராஜபக்சேவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்கக் கோரும் தீர்மானம் என்றும் திரும்பத் திரும்ப தமிழக ஓட்டுக்கட்சிகளும் தமிழினப் பிழைப்புவாதிகளும் ஊடகங்களும் பரபரப்பூட்டுகின்றனர். இத்தீர்மானம் இலங்கையைக் கண்டிப்பது போலவும், ராஜபக்சே கும்பலின் போர்க்குற்றங்களை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்று கோருவது போலவும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றனர். ஆனால், இந்தத் தீர்மானத்தில் சிங்கள இனவெறி பாசிசபயங்கரவாத அரசின் போர்க்குற்றங்களையோ, இனப் படுகொலையையோ கண்டிப்பதாக எதுவுமில்லை. ராஜபக்சேவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்கவிக்கவுமில்லை. சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனிவா நகரில் இந்தியா, இலங்கை உள்ளிட்டு 47 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைக் கவுன்சில், எவ்வித அதிகாரமும் இல்லாத ஓர் அலங்கார அமைப்பாகும். ஒரு குறிப்பிட்ட நாடு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருப்பதாக இந்த கவுன்சிலில் பெரும்பான்மை நாடுகள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினாலும், அதனை ஐ.நா. பொதுச்சபை விவாதித்து, அதனடிப்படையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அங்கீகரித்தால்தான் குற்றம் சாட்டப்பட்ட அந்நாட்டில் தலையிட முடியும். அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்கள் தங்களது மேலாதிக்க ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு ஏற்ப மனித உரிமைக் கவுன்சிலின் தீர்மானத்தைப் பயன்படுத்திக் கொள்வதுதான் இவ்வமைப்பின் நடைமுறைப் பயன்பாடாக உள்ளது.

ஈழத்தில் நடந்த இன அழிப்புப் படுகொலைகளுக்குப் பிறகு, கடந்த 2009ஆம் ஆண்டில் மனித உரிமைக் கவுன்சிலில் சுவிட்சர்லாந்து அரசு ஈழப்போர் தொடர்பாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதுவும் சிங்கள இனவெறி அரசின் இன அழிப்புப் படுகொலைக்கு எதிரான தீர்மானம் அல்ல. மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு, இறுதிப் போரின் போது சிவிலியன்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும், அதையும் இதர மனித உரிமை மீறல்களையும் இலங்கை அரசே விசாரிக்க வேண்டுமென்றும் அத்தீர்மானம் குறிப்பிட்டது. சிங்கள இராணுவத்தின் போர்க்குற்றங்களைப் பற்றி மௌனம் சாதித்த அத்தீர்மானத்தை, இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிரான தீர்மானம் என்றும், போர்க்குற்றவாளி ராஜபக்சேவைத் தண்டிக்கக் கோரும் தீர்மானம் என்றும் ஈழ ஆதரவாளர்களும் ஊடகங்களும் அன்று ஊதிப் பெருக்கினர். இத்தீர்மானத்தை எதிர்த்து இந்தியா, இலங்கை, சீனா, ரஷ்யா, கியூபா முதலான பெரும்பான்மை நாடுகள் வாக்களித்ததால் இத்தீர்மானம் தோல்வியடைந்தது.

இதேநேரத்தில் இலங்கை அரசு மற்றொரு தீர்மானத்தை முன்மொழிந்தது. பயங்கரவாதத்தை வீழ்த்தி வெற்றியைச் சாதித்துள்ள இலங்கை அரசையும் இராணுவத்தையும் பாராட்டிய அத்தீர்மானம், போரினால் அகதிகளாகியுள்ள மக்களுக்கும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு செய்யவும் உலக நாடுகள் உதவ வேண்டுமென்று கோரியது. இப்படி ஆடுகளுக்காக அழுத ஓநாயின் தீர்மானத்தைப் பெரும்பான்மை நாடுகள் வாக்களித்து நிறைவேற்றின. ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த இன அழிப்புப் படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் மற்றும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் கண்டனங்களைத் தொடர்ந்து, சிங்கள இனவெறி பாசிச ராஜபக்சே கும்பல் 2010 மே மாதம் "கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (எல்.எல்.ஆர்.சி.)" என்ற ஆணையத்தை நிறுவி விசாரணை நடத்துவதாக அறிவித்தது. இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச அரங்குக்கு இழுக்கப்படுவதைத் தவிர்த்து, நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இலங்கையில் வளமாக உள்ளதாகக் காட்டிக் கொள்ளவும், இதன் மூலம் சர்வதேசத் தலையீட்டை முறியடிப்பதும் தான் இந்த ஆணையத்தை ராஜபக்சே கும்பல் அமைத்ததற்கான காரணம். இந்த ஆணையம் புலிகளின் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. போரில் புலிகள் வீழ்த்தப்பட்டிருந்தாலும், அவர்களுடன் தொடர்புடைய புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களைத் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி வதைக்கும் நோக்கத்துடன் விசாரணையை நடத்தியது. இறுதிக் கட்டப் போரின்போது நடந்த அத்துமீறல்கள், தனிநபர்களின் பாதிப்புகள் பற்றியும் விசாரிப்பதாகத் தெரிவித்தது. இதன் மூலம் அரசு மற்றும் இராணுவ அதிகாரிகளில் ராஜபக்சே கும்பலுக்கு விசுவாசமாக இல்லாதவர்களை இனம் கண்டு களையெடுக்கவும், பழிவாங்கவும் இதனைப் பயன்படுத்திக் கொண்டது. மனித உரிமை மீறல்கள் பிரச்சினையில் சிங்கள அரசாங்கத்தைப் பாதுகாத்ததில் இழிபுகழ் பெற்ற முன்னாள் அரசுத் தலைமை வழக்குரைஞர் சி.ஆர். டிசில்வா இந்த ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்கினார். அரசாங்கத்தின் ரப்பர் ஸ்டாம்பாகச் செயல்பட்ட இந்த ஆணைக் குழு எந்த வகையிலும் சுயேட்சையானதோ, நடுநிலையானதோ அல்ல என்பது யாவரும் அறிந்த உண்மை. இறுதியாக இந்த ஆணைக்குழு தனது அறிக்கையை 2011 டிசம்பர் 16 அன்று வெளியிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போரின் போது சிங்கள இராணுவம் எவ்விதப் போர்க்குற்றமும் இழைக்கவில்லை மக்களைப் பாதுகாக்க அக்கறையோடும் பொறுப்போடும் செயல்பட்டது என்று தான் இந்த அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கையையும் ஐ.நா. வுக்குச் சமர்பிக்கப் போவதில்லை என்று சிங்கள அமைச்சரவை அறிவித்து விட்டது. இந்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவது தான், அமெரிக்காவால் முன்மொழியப்பட்டு, தற்போது ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் சாரம். இத்தீர்மானம், போரின் இறுதிக் கட்டத்தில் ராஜபக்சே கும்பலால் நடத்தப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கு எதிரானதல்ல. அந்த விவகாரத்துக்கும் இந்த தீர்மானத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. போர்க்குற்றவாளியான ராஜபக்சே அரசு தம்மைத் தாமே விசாரணை செய்து கொண்டுள்ளதாகக் கூறும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆதரித்து, அதன் பரிந்துரைகளை விரைவாகச் செயல்படுத்தக் கோருகிறது. இத்தீர்மானம், நல்லிணக்க ஆணைக்குழு கவனத்தில் கொள்ளாத மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நம்பகமான விசாரணை தொடங்கப்பட வேண்டும் என்றும், சர்வதேசச் சட்டவிதிகள் மீறப்பட்டது குறித்த குற்றச்சாட்டுகள் பற்றி கவனம் செலுத்துமாறும் இலங்கை அரசை இத்தீர்மானம் கோருகிறது. இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் தனது வலுவான ஆதிக்கத்தை நிறுவும் போர்த்தந்திரத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே, சீனாவுடனான அரசு தந்திர மற்றும் பொருளாதார உறவுகளிலிருந்து விலகி நிற்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே அமெரிக்கா இத்தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது. மற்றபடி, ராஜபக்சே கும்பலின் போர்க்குற்றங்கள் பற்றியோ, இனப்படுகொலை பற்றியோ இத்தீர்மானத்தில் ஒரு வார்த்தைகூட இல்லை.

டப்ளின் தீர்ப்பாயத்தில் முன்னின்று உழைத்த, ஈழத் தமிழர்களால் நன்கறியப்பட்டவரான பால் நியூமென், ஐ.நா. மனித உரிமைகள் கமிசனின் தற்போதைய கூட்டத்தொடரில் இலங்கையில் நடந்துள்ள இனப்படுகொலை, போர்க்குற்றம் பற்றி எதுவுமே விவாதிக்கப்படவில்லை என்று பேட்டியளித்துள்ளார். இத்தீர்மானம் இலங்கையைக் கண்டிக்கும் நோக்கம் கொண்டதல்ல என்று ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதர் எலின் சாம்பர்லெய்ன் டோனஹே தெரிவித்துள்ளார். இலங்கையிலுள்ள மனித உரிமை அமைப்புகள் கூட இந்தத் தீர்மானத்தில் போர்க்குற்றங்களுக்கு எதிராக ஒன்றுமேயில்லை என்கின்றனர். ஆனால், தமிழக ஓட்டுக்கட்சிகளும், சில பிழைப்புவாத ஈழ ஆதரவாளர்களும் ஒன்றுமில்லாத இந்த வெற்றுத் தீர்மானத்தைத்தான் ஏதோ கேழ்வரகில் நெய் வடிந்த கதையாக ஏற்றிப்போற்றி, அமெரிக்காவானது, இலங்கையைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விடுவதைப் போல சித்தரிக்கின்றனர்.

"போர் முடிந்து மூன்றாண்டுகளே ஆகியுள்ள நிலையில், மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் அவகாசம் அளிக்க வேண்டும்" என்று கூறி அமெரிக்கா முன்வைத்த இந்தத் தீர்மானத்தை ரஷ்யா, சீனா, கியூபா முதலான நாடுகள் எதிர்த்தன. "இலங்கை போன்ற ஒரு ஜனநாயக நாட்டுக்கு அமைதி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள போதிய அவகாசம் வழங்க வேண்டும்" என்று கூறி தீர்மானத்தை எதிர்த்த இந்தியா, ஒரு திருத்தத்தை முன்வைத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. "ஐ.நா. மனித உரிமைத் தூதர் அலுவலகம் அளிக்கும் உதவியை இலங்கை ஏற்க வேண்டும்" என்ற வாசகங்களை நீக்கிவிட்டு, "ஐ.நா. மனித உரிமை தூதர் அலுவலகம் அளிக்கும் எத்தகைய உதவியையும் இலங்கை அரசுடன் கலந்தாலோசனை நடத்தி அதன் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும்" என்று முக்கியமான இத்திருத்தத்தின் மூலம் இந்தியா இத்தீர்மானத்தை மேலும் செல்லாக்காசாக்கியுள்ளது. தொழில்நுட்ப உதவி என்ற விதியின் கீழுள்ள இந்த முக்கியமான அம்சத்தை திருத்தியமைத்து, இலங்கையின் மனித உரிமை மீறல் விசாரணைகளில் ஐ.நா. தலையிடுவதற்கான வாய்ப்பையும் அடைத்து, இலங்கை அரசு இத்தகைய சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் காப்பாற்றியிருக்கிறது இந்திய அரசு. இந்தியா செய்துள்ள இந்த 'சிறிய' திருத்தம் மனித உரிமை கமிசனிடமிருந்து இலங்கையைக் காப்பாற்றும் கவசமாகப் பயன்படும்.

அமெரிக்காவின் விசுவாச அடியாளாக உள்ள இந்தியா, தனது வட்டார மேலாதிக்க நலன்களுக்காக சிங்கள இனவெறி பாசிச பயங்கரவாதத்தை ஆதரித்து நிற்கும் நோக்கத்துடன்தான் முந்தைய மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலில் சுவிஸ் தீர்மானத்தை எதிர்த்தது. பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல், இப்போதைய தீர்மானத்தை நரித்தனமான திருத்தத்துடன் ஆதரித்துள்ளது. இந்தியா இத்தீர்மானத்தை எதிர்த்ததை விட, ஆதரித்ததன் மூலம் இலங்கை அரசுக்கு மேலும் உதவியுள்ளது. ஆனால், இந்தியாவின் முடிவு இலங்கைக்கு எதிரானதாகவும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவானதாகவும் உள்ளதாக கருணாநிதி, ஜெயலலிதா மற்றும் பிற ஓட்டுக் கட்சிகளும் பிழைப்புவாதிகளும் போட்டி போட்டுக் கொண்டு உரிமை பாராட்டுகின்றனர். ஐ.நா. தீர்மானத்தில் சிங்கள இனவெறி ராஜபக்சேவின் போர்க்குற்றங்களுக்கு எதிராக ஒன்றுமில்லை என்ற போதிலும், 'இது எங்களுக்கும் தெரியும். இருந்தாலும், இதுவாவது நடக்கிறதே என்று பார்க்கவேண்டும். எவ்வித நடவடிக்கையுமின்றி தறிகெட்டுத் திரியும் சிங்கள இனவெறி பாசிஸ்டுகளுக்கு கடிவாளம் போடும் முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டும். இது முதல் அடிதானே தவிர, முழுமையானதல்ல என்பது எங்களுக்குத் தெரியும்' என்றெல்லாம் தமிழினப் பிழைப்புவாதிகள் நியாயவாதம் பேசுகின்றனர். இரண்டாம் பட்ச எதிரிகளுடன் தற்காலிகமாகக் கூட்டணி அமைத்து, முதன்மை எதிரியான இனவெறி பாசிச ராஜபக்சே கும்பலை வீழ்த்துவது என்ற அரசியல் உத்தியுடன் தாங்கள் அணுகுவதாக இதற்கு நியாயம் கற்பிக்கின்றனர். இப்படிச் செய்ததன் மூலம் இந்தியா போர்க்குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதே, அது நியாயமா?

ஹிட்லரும் முசோலினியும் போல, இந்தியாவும் இலங்கையும்இணைந்து இழைத்ததேதமிழின அழிப்புப் போர்க்குற்றம். புலிகளையும் ஈழத் தமிழ் மக்களையும் பூண்டோடு ஒழிக்குமாறு முள்ளிவாய்க்கால் போரை வழிநடத்தியதில் இலங்கை அரசின் கூட்டாளிதான் இந்திய அரசு. போர்க்குற்றவாளியான இந்திய அரசிடம் பிழைப்புவாத ஈழ ஆதரவு அமைப்புகளும் ஓட்டுக் கட்சிகளும் ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவாக ஓட்டுப் போடச் சொல்லிக் கூப்பாடு போட்டன. ராஜபக்சேவுடன் இந்திய அரசையும் கூண்டிலேற்றுவதற்குப் பதிலாக, இலங்கை மட்டும்தான் போர்க்குற்றவாளி என்றும், இந்தியா முன்நின்று ஈழத் தமிழர்களுக்கு நீதியும் உரிமையும் பெற்றுத்தரும் என்றும் இவர்கள் பிரமையூட்டுகின்றனர். அதன் மூலம் போர்க்குற்றவாளியான இந்தியாவை தப்பவைக்கும் திருப்பணியைச் செய்துள்ளனர். போர்க் குற்றவாளியான இந்திய அரசை நியாயவானாகக் காட்டி, தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்ததன் மூலம் போர்க்குற்றவாளியான ராஜபக்சேவையும் விடுவிக்கத் துணைபோயுள்ளனர். கடல் வற்றி கருவாடு தின்னலாம் என்று காத்திருந்த கொக்கின் கதையாக, இந்திய உதவியுடன் ஈழ விடுதலையைச் சாதிக்க முடியும் என்று நம்ப வைத்து தமிழக இனவாதிகள் நடத்திய சந்தர்ப்பவாத அரசியலின் நீட்டிப்புதான் இது. இந்திய தேசியத்தை எதிர்ப்பதாகவும் தேசிய இன விடுதலையைச் சாதிக்கப் போவதாகவும் சவடால் அடிக்கும் இத்தமிழினக் குழுக்களும் தலைவர்களும் அரசியல் ரீதியில் இந்திய வட்டார மேலாதிக்க அரசின் அப்பட்டமான கைக்கூலிகளாக உள்ளனர். அன்று ராஜீவ் ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை வரவேற்று ஆதரித்த இவர்கள்தான், இன்று இந்தத் தீர்மானத்தையும் ஆதரிக்கிறார்கள்.

11ஆம் பக்கம் பார்க்க...
நெற்றிபொறியன்



# பிராந்திய செய்திகள்



## நாட்டில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு இல்லை

எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் வரை எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு இல்லை எனவும், பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு தேவையான எரிபொருள் கையிருப்பு உள்ளதாகவும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

## புதிய வகையான துப்பாக்கி ரவைகள் மீட்பு

*கடற்கரை பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் புதிய பல்வேறு வகையான துப்பாக்கி ரவைகளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.*

*அம்பாரை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு கடற்கரைப்பகுதியில் அன்று (17) முற்பகல் புலனாய்வு தகவல் ஒன்றிற்கமைய பிளாஸ்டிக்வடிவம்ஒன்றில்மறைத்துவைக்கப்பட்டிருந்தநிலையில்கரையொதிங்கிய குறித்த துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*இத்தேடுதல் நடவடிக்கையானது கல்முனை கடற்படையினர் மேற்கொண்டதுடன் குறித்த துப்பாக்கி ரவைகள் புதிதாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.*

*மேலும் கைப்பற்றப்பட்ட ரவைகளை கல்முனை பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கான பணியினை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.*

## மின்சார கட்டணம் தொடர்பான விசேட அறிவிப்பு

**மின்சார கட்டணத்தை செலுத்தாத பாவனையாளர்களுக்கு அதற்கான மேலதிய கட்டணத்தை அறவிடுதல் அல்லது அவர்களுக்கான மின்விநியோகத்தை துண்டிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளபட்டிருப்பதாக பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

**இததொடர்பான உத்தரவு வெளியிடப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

## மலேரியா தொற்று பரவும் அபாயம்

*வட மாகாணத்தில் தற்பொழுது மலேரியா நோய் பரவும் அனர்த்த நிலையுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. நான்கு வார காலத்திற்குள் 4 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒரு நோயாளரை அடையாளம் காண்பதன் மூலம் அது ஆயிரம் நோயாளர்களின் ஆரம்பமாக அமையும் என்று சுகாதார அமைச்சின் மலேரியா நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.*

*இந்த நான்கு நோயாளர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவாகியிருப்பதாக அவர் கூறினார். இந்த நோய் பரவும் அபாயம் இருப்பதாக குறிப்பிட்ட அவர், ஏனைய மாவட்டங்களில் இந்த நோய் பரவும் அனர்த்த நிலை இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.*

*சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.*

*கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி 2 நோயாளர்கள் யாழ்ப்பாணத்தில் பதிவாகியினர். இதன் பின்னர் இரண்டு வாரங்களில் மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டனர். 4 வார கால்திற்குள் யாழ்ப்பணத்தில் 4 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இலங்கை ஒரு சிறிய நாடு இவ்வாறான நாட்டில் ஒரு பிரதேசத்தில் நோய் அனர்தத் நிலை இருக்கின்றது என்பது அது நாட்டிற்கே அனர்த்த நிலையாகும்.*

*இதுதொடர்பில் நாம் மகிழ்சியடைய முடியாது. அதாவது ஒரு பகுதியில் மாத்திரம் இந்த அனர்த்தம் இருப்பதாக கருத முடியாது. இந்த அனர்த்த நிலையில் இருந்து யாழ்ப்பணத்தை மீட்டெடுப்பதற்காக மலேரியா ஒழிப்பு குழு, சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் அந்த மாகாணத்தின் வைத்தியசாலை பணிப்பாளர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.*

*இந்த வருடத்தில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கை 6 இவர்கள் அனைவரும் ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்த நோயாளர்கள் இவர்களை நாம் அவசர சிகிச்சை பிரிவுகளில் வைத்து சிகிச்யையளித்து நாம் மீட்டெடுத்துள்ளோம்.*

*6 ஆவது நோயாளர்ர் அனுராதபுரத்தில் ஹபரண பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டார். வெளிநாட்டில் இருந்து வந்தவர்களில் தான் இவர் காணப்பட்டார். இவர் எந்தவொரு நோய் அறிகுறிகளையும் கொண்டிருக்கவில்லை. இதேபோன்று எமது வைத்திய குழு இவரை அடையாளம் கண்டது பாரிய வெற்றியாகும் என்றும் அவர் தெரிவித்தார். இவற்றை நாம் கவனத்தில் கொள்ளாது இருந்தால் மலேரியா நோய் கொண்ட ஒருவர் மூலம் 1000 நோயாளர்கள் உருவாதற்கு ஆரம்பமாக அமையும். சுகாதார ஊழியர்களின் பணி பகிஸ்பரிப்புக்களுக்கு இடையிலேயே இந்த நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் அவர் கூறினார்.*

## ஒன்லைனில் ரயில் டிக்கெட்டுகள் விற்பனை – இலங்கை ரயில்வே

பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் அன்று(02.18) முதல் ஒன்லைனில் ரயில் டிக்கெட்டுகளை வழங்க இலங்கை ரயில்வே நடவடிக்கை எடுத்துள்ளது. பயணிகள் இணையத்தில் பயணச்சீட்டை முன்பதிவு செய்ய முடியும் அல்லது கையடக்க தொலைபேசி செயலி ஊடாக ஆசனத்தை முன்பதிவு செய்ய முடியும் என இலங்கை புகையிரத சேவையின் பொது முகாமையாளரான தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார். இந்த மொபைல் அப்ளிகேஷன் விரைவில் பதிவிறக்கம் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டம் ஆரம்ப கட்டமாக அன்று(02.18) முன்னெடுக்கப்படும் எனவும், பயணிகளின் தேவைக்கு ஏற்ப எதிர்காலத்தில் இந்த வசதி கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். சேவையை சீரமைக்க ஆரம்ப கட்டத்தில் தரவுகளை சேகரிப்போம். மொபைல் அப்ளிகேஷன்களின் android மற்றும் iOS பதிப்புகள் விரைவில் கிடைக்கும் என்றும், பயணிகள் கிரெடிட் கார்ட்களைப் பயன்படுத்தியும் பணம் செலுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாடு செல்வோருக்கான பிசிஆர் கட்டணம் 6500 ரூபா

வெளிநாட்டுப் பயணத்துக்கான பி. சி. ஆர். பரி சோதனைக்கான கட்டணமாக அன்று வெள்ளிக் கிழமை முதல் சகலரிடமும் 6 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படும் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மத்திய சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வெளிநாட்டுப் பயணத்திற்கான பி. சி. ஆர். பரிசோ தனைக்கான கட்டணமாக சகலரிடமும் ரூபா 6,500 அறவிடப்படும். வெள்ளிக்கிழமை முதல் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை பதிவின்போது சமர்ப்பித்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க யாத்திரிகர்களுக்கு அனுமதி இல்லை

கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க இலங்கை மற்றும் தமிழக யாத்திரிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அதற்கமைய, அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இன்றைய தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

500 பக்தர்களை அனுமதிப்பதாக யாழ் மாவட்ட ரீதியாக தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், இம்முறை யாத்திரிகர்களை அனுமதிப்பதில்லை எனவும் அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடத்தத் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## க.பொ.த (உ.த) பரீட்சையில் தமிழ்மொழி மாணவருக்கு பாரிய அநீதி. இதற்குப் பரிகாரம் காணப்பட வேண்டும் - இம்ரான் எம்.பி

தற்போது நடைபெற்று வருகின்ற க.பொ.த (உயர்தர) உயிரியல் பாட வினாத்தாளில் தமிழ்மொழி மூல மாணவருக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. பரீட்சைத் திணைக்களம் இதற்கான பரிகாரங்களைக் காண வேண்டும் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கோரிக்கை விடுத்துள்ளார். உயிரியல் பாட முதலாம் பகுதி வினாத்தாளின் தமிழ் மொழி பெயர்ப்பில் பாரிய குறைபாடுகள் இருந்ததால் மாணவர்களால் சரியான விடையெழுத முடியாத நிலையேற்பட்டதாக முன்னாள் பிரதம பரீட்சகர் ஒருவரை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உயர்தரப் பரீட்சையைப் பொருத்தவரை அது மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற பரீட்சையாகும். எனவே, இப்பரீட்சை வினாத்தாள்கள் மயக்க நிலையிலன்றி தெளிவாக விளங்கிக் கொள்ள கூடியதாக இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்களால் வினாவுக்கேற்ற விடைகளை எழுத முடியும். அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்றதற்கான பிரதிபலனை அடைய முடியும். இந்த வருட உயிரியல் வினாத்தாளின் பல வினாக்களின் மொழிபெயர்ப்பு பிழை காரணமாக மாணவர்களால் தெளிவாக விடையைத் தீர்மானிக்க முடியாத நிலையேற்பட்டதாகவும், இதனால் பல மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தமிழ் மொழி மூல மாணவருக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதியாகும்.

இது அவர்களது பல்கலைக்கழகத் தெரிவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த அநீதி களையப்பட வேண்டும். பரீட்சைத் திணைக்களம் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு உரிய பரிகாரம் காணப்படுவதை உறுதிப் படுத்த வேண்டும். அல்லது இந்தப் பரீட்சையை இரத்துச் செய்து மீள் பரீட்சை நடத்தப்பட வேண்டும். ஒரு பரீட்சையைக் கூட சரியாக நடத்த முயடியாத அளவுக்கு இந்த அரசு மிகவும். பலவீனமடைந்துள்ளது. பொருளாதார ரீதியாக மக்களை கஷ்டத்தில் தள்ளி அன்றாட உணவுக்கு அல்லல் படும் நிலையையேற்படுத்தியுள்ள இந்த அரசு இப்போது மாணவர்களின் எதிர்காலத்திலும் கைவைக்க ஆரம்பித்துள்ளது. ஜனநாயகத்தை நேசிப்போரால் இதனை அனுமதிக்க முடியாது. தமிழ் பேசும் மக்களுக்கு நன்மைகள் பல செய்வதாகக் கூறி அவர்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் வந்து இந்த அரசோடு ஒட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதி குறித்து வாய்மூடி மௌனமாக இருப்பது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன். தமிழ் மொழி மூல மாணவருக்கு இழைக்கப்பட்டுள்ள இந்தப் பாரிய அநீதி குறித்து அவர்கள் கவனம் செலுத்தாது இருப்பது குறித்து நான் ஆச்சரியமடைகின்றேன். இது போன்ற விடயங்களில் தீர்வு பெற்றுத்தராத இவர்கள் இந்த அரசிடம் இருந்து தமிழ் பேசும் மக்களுக்கு என்ன தீர்வைப் பெற்றுத் தரப்போகின்றார்கள் என்று கேட்க விரும்புகின்றேன். எனவே, மக்களுக்கும் மாணவர்களுக்கும் அநீதி இழைக்கும் இந்த அரசாங்கத்தையும், தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைப் பெற்று அவர்களது உரிமைசார்ந்த விடயத்தில் கவனம் செலுத்தாது மௌனமாக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய காலம் வந்து விட்டது. அதற்கு மக்கள் தயாராக வேண்டும். மக்களுக்காக அவர்களின் கஷ்டங்களுக்காக குரல் கொடுக்கும் எம்மோடு இணைய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு கூட்டுக்கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?



இலங்கையின் இன்றைய பேசுபொருளாக இருக்கும் ஒரு விடயம் தான் பயங்கரவாதத் தடைச்சட்டம். உலகின் பல்வேறு நாடுகளிலும் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும் அது சர்வதேச ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது, சர்வதேச ரீதியிலான பயங்கரவாத செயற்பாடுகள் தத்தமது நாட்டுக்குள் தலையிடுகின்றபோதுதான், அல்லது உள்ளூரில் வன்முறைகள் உச்சக்கட்டத்தில் வெடிக்கின்ற போதுதான் அரசுகள் தமக்குச் சார்பாக இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைக் கொண்டு வருகின்றன. இலங்கையிலே பயங்கரவாதத் தடைச்சட்டம் 1978இல் தற்காலிகமாகத்தான் கொண்டுவரப்பட்டது. பின்னர் அது நிரந்தரச் சட்டமாகவே மாறிவிட்டது. மாறி மாறி இலங்கையை ஆட்சிசெய்த அரசுகள் தமது தேவைகளுக்காக சுயலாப நோக்கில் இச்சட்டத்தினைப் பயன்படுத்த வந்தன. தமது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்வதற்காக இலங்கையில் வாழும் வடகிழக்கு தமிழ் மக்கள் மீது பெருவாரியாக இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கடல், வான், தரை என முப்படைகளையும் தம்வசம் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பு முதலாவது பயங்கரவாத அமைப்பாக இலங்கை அரசினால் அடையாளப்படுத்தப்பட்டு இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளார்கள். உலகளவில் கூட இன்று விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்கிற ரீதியில் பார்க்கப்படுகின்றார்கள். அதனைவிட சர்வதேச அளவில் ஹமாஸ், லக்சரிதொய்பா போன்ற பல பயங்கரவாத அமைப்புக்கள் இருப்பதாக உலக வல்லரசுகளால் அடையாளப்படுத்தப்பட்டு தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இலங்கையில் மூன்று தசாப்தங்களாக ஒரு இனத்திற்காக அஹிம்சை பின்னர் ஆயுதமேந்திப் போராடினர். இதற்குள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் சர்வதேச ரீதியாக 07, உள்ளூர் ரீதியாக 14 கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது என்பது யாவருக்கும் தெரிந்த விடயம். யுத்த நிறுத்தம் கூட ஏற்பட்டு .றுதியில் ஈழப்போரின் இறுதிக்கட்டமாக இலங்கை அரசினாலும் சர்வதேச நாடுகளின் தலையீடுகளினாலும் இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு, சர்வதேச சட்டங்களை மீறிய மனித உரிமைகளை மீறுகின்ற பல சம்பவங்கள் இலங்கையில் பதிவாகியிருக்கின்றது. இது சர்வதேச நாடுகளுக்கும் தெரிந்த விடயம்.

யுத்தம் நிறைவுபெற்ற 12 வருடங்களைக் கடந்துவிட்ட போதிலும் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தாக்கம் இலங்கையில் இன்றும் உணரக்கூடியதாகவே இருக்கிறது. குறிப்பாக இன்றும் தமிழ்த்தரப்பினர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதும் விசாரிக்கப்படுவதும் என அரசின் செயற்பாடுகள் தொடர்கிறது. பல தமிழ் இளைஞர்கள் வருடக்கணக்காக இந்தச் சட்டத்தின் மூலமாகக் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எந்தவித விசாரணைகளும் இன்றி, நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படாமல் சிறைகளில் வருடக்கணக்கில் வாடுகின்றனர். எனவே மிக விரைவில் இவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். ஏற்கனவே சிறைகளில் வருடக்கணக்காக தண்டனையை அனுபவித்துவிட்டு இனிமேல் நீதிமன்றம் கொண்டு சென்று மீண்டும் அவர்களுக்கானத் தண்டனையை வழங்குவது என்பது மனித விழுமியங்களுக்கும் ஜனநாயகப் பண்புகளுக்கும் முரணானதாகவே அமையும். சிறைகளில் வாடுவோர் இனிவரும் காலங்களிலாவது தங்களது குடும்பங்களுடன் இணைந்து இந்த சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக வாழவேண்டும். இதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கங்கள் செய்யவேண்டும். இதுவே இன்றைய இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்குத் தேவையானதொன்று.

கடந்த கால அரசுகள் இவர்களின் விடயங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைச் செய்யவில்லை. எனினும் தற்போது யுத்தம் முடிவுற்ற நிலையில், தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்ட இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏன் அமுலில் இருக்கவேண்டும் என்கிற கேள்வி நாடு முழுவதும் எழுந்திருக்கின்றது. தற்போது இச் சட்டத்தினை இரத்து செய்யவேண்டும் என்கிற கோரிக்கையினை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒழுங்குசெய்த கையெழுத்து வேட்டை நடைபெற்று வருகின்றது. இதில் நாடு முழுவதும் இருந்து தமிழ், சிங்கள, முஸ்லீம்கள் என்கிற வேறுபாடின்றி ஒட்டுமொத்த மக்களும் கையெழுத்திட்டுவருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

நாடு முழுவதிலும் இருக்கக்கூடிய சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் கையெழுத்திடுகின்றார்கள். பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார்கள் கையெழுத்திடுகின்றார்கள். ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் இந்தச் சட்டம் குறித்து அதிருப்தியடைந்துள்ளனர். ஏனெனில் வெறுமனே இந்தச் சட்டத்தினால் தமிழர் மாத்திரம் பழிவாங்கப்படவில்லை மாறாக இந்நாட்டிலுள்ள சிங்கள, முஸ்லீம் மக்களும் இந்தச் சட்டத்தினால் அவஸ்தைப்படுகின்றனர். ஆனால் விகிதாசார ரீதியாகப் பார்த்தால் சிறுபான்மை மக்கள் இந்தச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக இந்நாட்டில் இருக்கின்றனர் என்பது உண்மை.

மீண்டும் கட்சிபேதமின்றி, இன மத பேதமின்றி அனைவரும் கூட்டாக ஒன்றுசேர்ந்து இந்த கையெழுத்துவேட்டைக்கு ஆதரவு வழங்கிவரும் விடயம் உண்மையில் வரவேற்கத்தக்கது. பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்நாட்டில் இருந்து நீக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கைகள் சர்வதேச ரீதியாகவும் வலியுறுத்தப்படுகின்றது. எதிர்வரும் ஜெனீவா மனித உரிமைச் சபை மாநாட்டில் இவ்விடயங்கள் பேசப்படப்போகின்றன. இப் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாக முஸ்லீம் காங்கிரசின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், பயங்கரவாதத் தடைச்சத்தை மிக மோசமாக துஸ்பிரயோகம் செய்து, அடிக்கடி தங்களது அரசியல் எதிரிகளையும் அப்பாவிகளையும் கைது செய்து நீண்ட நாட்கள் தடுப்புக்காவலில் வைத்திருந்துவிட்டு இறுதியில் நீதிமன்றத்தின் உத்தரவு வரும் என்ற பயத்தில் விடுவிக்கின்ற நிலவரம் தான் தொடர்ந்தும் நீடிக்கின்றது. இதன் மூலம் அப்பாவிகள் பலர் மாதக்கணக்கில் கணக்குவழக்கில்லாமல் மிக மோசமாக துன்புறுத்தலுக்குள்ளாகியிருப்பது மாத்திரமல்ல அவர்களுடைய உள ரீதியான பாதிப்புக்கள் பற்றிய எந்தவிதமான கவலையும் இல்லாமல் வேண்டுமென்று சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்ற அடிப்படையில் இப்படித் தொடர்கிற இந்தத் தொடர்கதை முடிவுக்கு வரவேண்டும்.

இதற்காகத்தான் இந்த அரசாங்கம் ஜெனீவாவில் மார்ச் மாதம் அரசின் நடவடிக்கைக்கு வெளிவரவிருக்கின்ற அறிக்கைக்குப் பயந்து வெறும் போலியான, நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத திருத்தங்கள் சிலவற்றை தங்களுக்கு ஏற்படப்போகின்ற பாதிப்புக்களில் இருந்து தப்பிக்கொள்வதற்காக பொருளாதாரத் தடைகள் வந்துவிடாமல், ஜி எஸ் பி பிளஸ் சலுகைகள் அற்றுப்போய்விடும் என்கிற அச்சத்தில் இந்தவொரு திருத்தச்சட்டத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள். இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. முழுமையாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும். இது கொண்டுவரப்பட்ட முக்கிய நோக்கம் நாட்டில் பிரிவினையைத் தடுப்பதற்காக 1978ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்டது.

எனினும் நிரந்தரமாக 42 வருடங்கள் நீடித்திருக்கிறது. இதற்கு மேலும் இதனை நீடிக்கவிடாமல் இதனை முழுமையாக எங்களுடைய சட்டப்புத்தகத்திலிருந்து கிழித்தெறியப்படவேண்டும். இதற்குப் பதிலாகத் தேவையென்றால் புதிய சவால்களை எதிர்நோக்குகின்ற நோக்கில் வேறு சட்டமூலமொன்றை உலகில் நடைமுறையில் இருக்கின்ற மனித உரிமைச் சாசனங்களுக்கு கட்டுப்பட்ட அடிப்படையிலான ஒரு புதிய சட்டமூலமொன்றை அறிமுகப்படுத்தலாம். இதைத்தான் நாங்கள் நீண்டகாலமாகக் கதைத்து வருகின்றோம். இதைத் தொடர்ந்தும் புறந்தள்ள அனுமதிக்க முடியாது. இந்த அரசின் போலி நடவடிக்கைக்கு அவர்களின் போலி முகத்திரையைக் கிழித்தெறிய வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்தக் கையெழுத்துவேட்டை விடயத்தை ஆரம்பித்திருக்கின்றோம். இது நாடு தழுவிய ரீதியில் நடைபெறுவதையிட்டு மிகவும் ஆறுதலடைகின்றோம். பெரும்பான்மை இனத்தின் அரசியல் எதிரிகளையும் இந்தத் தடைச்சட்டத்தின் மூலமாக கைது செய்த வரலாறுகள் இருக்கிறது. ஆனால் விகிதாசார அடிப்படையில் சிறுபான்மை இனத்திற்கெதிராக அதிகம் பாவிக்கப்பட்டது என்பது உண்மைதான். அதற்காக இது தனியே சிறுபான்மை இனத்தினை மாத்திரம் பாதிக்கின்ற விடயமல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கொழும்பில் இடம்பெற்றிருந்தது. குறித்த கையெழுத்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையானது கொழும்பு-கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த கையெழுத்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையானது காலை 11 மணி முதல் பிற்பல் 1 மணி வரையில் இடம்பெறும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இதில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு சர்வஜன நீதி அமைப்பின் ஊடான அதன் இணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார். இந்த நிலையில் குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹக்கீம், மனோ கணேசன் பங்கேற்றிருந்தனர். அத்துடன், மதத்தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெருந்திரளான பொது மக்களும் கலந்துகொண்டு கையெழுத்துக்களை பதிவு செய்திருந்தனர். பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குதவற்கான கையெழுத்துப் போராட்டம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்த இந்த போராட்டம் கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது அனைத்து மக்களும் ஆதரவை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, அதற்கு பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு அமைவாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வருவதற்கு இலங்கை உறுதியளித்திருந்த நிலையில் 2018 இல் ஒரு சட்டமூலம் உருவாக்கப்பட்டு பின் அது நடைமுறை அரசாங்கத்தினால் கிடப்பிலே போடப்பட்டிருந்தது. தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை 'சீர்திருத்தம்' செய்வதற்காக 2022 ஜனவரி 27 ஆம் திகதி அதன் திருத்தத்திற்கான சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முன்மொழியப்பட்ட திருத்தம் நடைமுறையில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் அமுலாக்களிலும் அதைத் தொடர்ந்து வரும் கடுமையான விளைவுகளிலும் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது. எனவே இந்தத் தடைச்சட்டம் முற்றாக இலங்கையிலிருந்து அகற்றப்படவேண்டும். இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் இந்தக் கையெழுத்துவேட்டைக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள்.

இந்தச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க புதிய சட்டம் இயற்றப்படும் என்று அரசாங்கம் கடந்த காலங்களில் பல உறுதிமொழிகளை வழங்கியது.எவ்வாறாயினும், அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டமூலமானது அத்தகைய உத்தரவாதங்களுக்குப் ஏற்றதாக இல்லாதிருப்பதோடு பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள எந்தவொரு கடுமையான விதிகளையும் நிவர்த்தி செய்யத் தவறியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாடு தழுவிய பிரச்சாரம் பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்வதாக அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்துவதாகும் எனவும் கூறப்பட்டுள்ளது. எனவே நாட்டு மக்கள் அனைவரும் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக அதனை நீக்க, அரசிற்கு அழுத்தம் கொடுக்க கையெழுத்திடுங்கள் என்பதையே நாமும் கேட்டுக்கொள்கின்றோம்.

**இரணியன்**

# கூட்டுத்தலைமையே தேவை - சிவசக்தி ஆனந்தன்

**இந்தியா பிரதமருக்கு கடிதம் அனுப்பும் வியடத்தில் ஒருங்கிணைந்துள்ள கட்சிகளும், தலைவர்களும் ஏனைய விடயங்களை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் கூட்டுத்தலைமை உள்ளிட்ட கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போது தெரிவித்தார்.**



**கேள்வி:- தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டில் நீடித்துக்கொண்டிருந்த தமிழ் தலைவர்கள் திடீரென 13ஐ நோக்கி செல்ல காரணம் என்ன?**

பதில்:- தமிழ் தலைவர்கள் 13ஐ நோக்கி சென்றார்கள் என்ற கருத்து முற்றிலும் தவறானது குறிப்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 13ஐ நோக்கி நகருக்கின்ற எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் துணைபோகவும் இல்லை, துணைபோகப்போவதும் இல்லை.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தனபோது அதன் பின்னர் 13ஆவது திருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு வட,கிழக்கு இணைந்த மாகாண சபை அமைந்தது. அந்த வேளையில் அறவழியில் இருந்த தமிழ் தலைவர்கள் அதனை எதிர்த்தனர். ஆனால் எங்களுடைய பெருந்தலைவர் பத்மநாபா முதலாவது தடவையாக ஈழவிடுதலைப் போராட்டத்தில் வித்தாகிய தங்களை ஈகம் செய்த எத்தனையோ தோழர்கள் ஆதரவாளர்கள் பொதுமக்களின் கனவு நனவாக வேண்டும் என்ற அடிப்படையில் முதலாவது சந்தர்ப்பமாக எங்களை நோக்கி திறக்கபட்ட கதவாகவே இந்த 13ஆவது திருத்தசட்டத்தை பார்த்தார்.

இதில் நீங்கள் தெளிவாக ஒரு விடயத்தை விளங்கிகொள்ள வேண்டும் வேறுகட்சி தலைவர்கள் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட்டார்கள் பதவிகளை பெற்றார்கள் ஆனால் தோழர் நாபா எமது கட்சியில் உள்ள ஒரு தோழரைத் தான் முதலமைச்சர் பதவிக்கு முன்மொழிந்தார். அவர் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்படவில்லை. இதுதான் வரலாறு. அதனை மீண்டும் பேச வேண்டிய அவசியம் இல்லை.

அப்போது, 13ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் மாகாண சபை உருவாக்கப்பட்டு நாங்கள் வெறும் 15 மாதங்கள் தான் இந்த மாகாண சபையை நிர்வகித்து இருக்கின்றோம். நாங்கள் அப்பொழுதே மிக தெளிவாக ஒற்றை ஆட்சிக்குள் உள்ள 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்குரிய தீர்வு அல்ல என்று கூறினோம். அப்போது, இந்த விடயத்தை முதலில் ஏற்று முன்னகர்த்துகின்ற போது படிப்படியாக பிராந்தியத்திற்கான சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி கட்டமைப்புடனான ஒரு தீர்வை வழங்குவதாக ராஜீவ்காந்தி வாக்குறுதி அளித்திருந்தார்.

அடிப்படையில் எதுவுமே இல்லாத நிலையில் தான் நாங்கள் வட,கிழக்கு மாகாணசபையை கையில் எடுத்தோம். வெறுமனே 15 மாதங்களுக்குள் தலைநகராக திருகோணமலையை நிர்ணயித்து அங்கு வட,கிழக்கு மாகாண சபைக்கான கட்டடம் உட்பட அடிப்படைக் கட்டமைப்புக்களை உருவாக்கினோம் அது எங்களின் தலைமையினுடைய நிர்வாகத்திறனின் வெற்றி. அந்த அடிப்படையில் படிப்படியாக நாங்கள் முன்னகர்கின்றபோது இந்த 13ஆவது திருதத்தில் இருக்கின்ற குறைபாடுகள் பற்றி மிக தெளிவாக நாங்கள் புரிந்து கொண்டோம்.

நாம் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி படிப்படியாக நகர்ந்து சென்ற முயற்சி அப்போது முடக்கப்பட்டது. இருந்தாலும் குறிப்பாக பத்மநாபா பிரேமதாசாவிடம் அதேபோன்று ஜே.ஆரிடமும் மிகத் தெளிவாக 13க்கு மேலாக செல்லவேண்டிய விடயங்கள் குறித்தும் அதிகாரப்பகிர்வுக்கான விடயங்களில் என்ன செய்யவேண்டும் என்ன குறைபாடுகள் இருக்கின்றன உள்ளிட்ட சகலவிடயங்களையும் அவர் எழுத்து மூலமாக வழங்கியிருந்தார்.

ஆகவே நாங்கள் அன்றும் 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்கின்ற விடயமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதேநேரத்தில் தற்பொழுது சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் கூட்டுமுயற்சியில் தமிழ்பேசும் கட்சிகள் சேர்ந்து 13ஐ வலியுறுத்தி அதை நடைமுறைப்படுத்த முயற்சிப்போம் என்ற முயற்சி எடுக்கப்பட்டது. இது 13இற்குள் எங்கள் மக்களின் அபிலாஷை களை சுயநிர்ணயத்தை அதிகாரபகிர்வு விடயங்களை முடக்குவதற்கான நகர்வு அல்ல. இது ராஜபக்ஷ அரசாங்கத்தை அம்பலப்படுத்துவதற்கான நகர்வு.

**கேள்வி:- அப்படியென்றால் இதில் இந்தியாவின் வகிபாகம் இல்லையா?**

பதில்:- இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக இருக்கவேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. ஏன்னென்றால் இந்தியா தனது நலன்களை பேணுவதற்கு இலங்கை மீது ஒரு பிடியை வைத்திருப்பதற்கு விரும்புகின்றது.

தற்போதைய நிலையில் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்துவருகின்றது. இவ்வாறான நிலையில் இந்தியா தன்னுடைய பிடிடைய இறுக்குவதற்கான நகர்வுகளை மேற்கொள்கின்றது. குறிப்பாகஇலங்கையில் சீனாவின் வருகை என்பது இந்தியாவுக்கு தனது தென்பிராந்தியத்திற்கான பாதுகாப்பு கரிசனைகளை ஏற்படுத்துகின்றது.

ஆகவே அவர்கள் தமிழர்களை மையப்படுத்தி ஒரு நகர்வை செய்ய முஸ்தீபு செய்கின்றார்கள். இந்திய. வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வெளிவிவகார செயலாளர். பாதுகாப்பு ஆலோசகர் போன்றவர்கள் இலங்கைக்கு வந்து தமிழ் தலைவர்களை சந்திக்கின்ற போது 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஏனென்றால் புதிய அரசியல் அமைப்பில் இலங்கை அரசாங்கம் அதனை நீக்குவதற்கு முயற்சிக்கின்றது. அகவே நீங்கள் அதனை பேணுவதற்கு நடவடிக்கைகளை கூட்டாக எடுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு பொதுதளத்தில் தமிழர்கள் ஒரு ஏகோபித்த குரலாக வரவேண்டும் என்றார்கள்.

அந்த அடிப்படையில்தான் இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டது. மாறாக, 34வருடங்களாக எந்தவொரு அரசாங்கமும் செய்யாததை ராஜபக்ஷ அரசாங்கம் செய்யும் என்றும் 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் அல்லது நாங்கள் கடிதம் கொடுத்த உடன் இந்தியா உடன் வலிந்து இழுக்கும் என்று கருதமுடியாது. இந்த ராஜபக்ஷ அரசாங்கம் உட்பட இலங்கை அரசியலில் ஆட்சியில் இருந்த எந்வொரு தரப்பாலும் இந்த விடயத்திற்கு சாதகமான பதில் இல்லை. அவர்கள் தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிர்வதற்கு தயாரில்லை. அரசியலமைப்பில் உள்ள விடயத்தையே ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்துவதற்கு தயாரில்லாத நிலையில் அவர்களிடத்தில் அதிகாரப்பகிர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று மிகவும் தந்திரோபாயமாக அம்பலப்படுத்துவதற்கான தொரு நடவடிக்கையாகத்தான் இந்தக் கடிதத்தை பார்க்க வேண்டும்.

**கேள்வி:- தற்போதைய பூகோள அரசியல் சூழலில் தமிழ் தலைவர்களுடைய இந்தக் கோரிக்கைக்கு இந்தியா சாதகமானதொரு பதிலை தருமென எதிர்பார்க்கிறீர்களா?**

பதில்:- இந்தியா மட்டுமல்ல எந்தவொரு நாடும் தன்பால் இருக்கின்ற நலன்களின் அடிப்படையில் தான் விடயங்களை கையாள்வது என்பது உலக நியதி. இது இராஜதந்திர உறவுகளில் இருக்கின்ற பொதுப்படையான தன்மை. இந்தியாவை பொறுத்தவரையில் இந்தியாவிற்கு. இலங்கை தாளம்போடுகின்ற ஒரு தரப்பாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காவிட்டாலும் தனக்கு நெருக்கடிகளை சவால்களை தேசியப்பாதுகாப்பு அச்சுறுத்தல்களை விளைவிக்காத ஒரு நாடாக இருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது. அதேநேரத்தில் தற்போதைய பூகோள சூழலில் இருக்கின்ற அமெரிக்க இந்திய மேற்குலக கூட்டுறவால் இந்தியாவைப் புறந்தள்ளி அத்தரப்புக்கள் இலங்கை விவகாரத்தை கையாள்வதற்கு தயாரில்லை. அதேநேரம் அவர்கள் சீன எதிர்ப்புவாத நிலையிலும் இருக்கின்றார்கள்.

அடுத்த நூறு ஆண்டுகளுக்கு சீனா இலங்கையில் காலூன்றி விட்டது என்பது வெளிப்படையானது. ஆகவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இலங்கை இருப்பதன் காரணமாக சீனாவின் அதிகப்படியான பிரசன்னத்தை மேற்குலகம் விரும்பவில்லை. இந்தியாவும் விரும்பவில்லை ஆகவே நிச்சயமாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக கூட்டானது இந்தியாவை முன்னிலைப்படுத்தித்தான் இலங்கையை கையாண்டுவருகின்றது, கையாளப்போகின்றது. இலங்கையில் அமெரிக்கா மற்றும் மேற்குலகின் கரிசனை என்பது இந்தோ-பசுபிக் கடற்பிராந்தியம் சுதந்திர வலயமாக இருக்கவேண்டும் என்பதை அடியொற்றியதாக இருக்கின்றது. இதில் இந்தியாவும் பங்காளியாக இருக்கின்றது. ஆகவே அந்த அடிப்படையில் நாங்கள் இந்தியா ஊடாக நகர்த்துகின்ற எந்தவொரு முயற்சியும் நிச்சயமாக அமெரிக்க, மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்கான வழியாகத் தான் இருக்கும். இந்தியா தமிழர்களுடைய விடயத்தை கையில் எடுத்து அதை முன்னகர்த்துகின்றது என்ற அடிப்படையில் நீங்கள் பார்ப்பீர்கள் என்றால் அவர்கள் நிச்சயமாக ஆதரவு அளிப்பார்கள். அதேநேரத்தில் நாங்கள் இந்தியாவை தவிர்த்து அமெரிக்காவுக்கு. பிரித்தானியாவுக்கு சென்று பேசுவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. இது கடந்தகால வரலாறு. 1989ஆம் ஆண்டு இந்திய. இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது பனிப்போர் நிலவியகாலம். அந்த தருணத்தில் இந்தியா சோவியத் யூனியன் முகாமில் இருந்தது. அதனால் இந்தியாவை பலப்படுத்துவதற்கு மேற்குலகம்.பிரித்தானிய உள்ளிட்ட நாடுகள் முனைந்தன இப்போது பூகோளச்சூழல் முற்றாக மாறிவிட்டது.

ஆகவே தற்போது நாம் வழங்கிய கடிதத்தின் அடிப்படையில் இந்தியா பகிரங்கமாக பொதுவெளியில் தமிழர்களுக்கு தீர்வுகொடுங்கள் என்று கூறமாட்டார்கள். அவர்களுக்கு இராஜதந்திர நகர்வுகள் இருக்கின்றன. கையாளுகைகள் இருக்கின்றன. உதாரணமாக. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற ஒரு விடயம் இருக்கின்றது. இது பிரேரணை தோற்றாலோ வென்றாலோ மாற்றப்படுவதில்லை. இதற்கு இந்தியா தான் அடிப்படையாக இருக்கின்றது. ஆனால் ஐ.நா.வில் இலங்கை விடயத்தில் இந்தியா வாக்களிப்பதில்லை. அது இந்தியாவின் இராஜதந்திரம் ஆகவே தமிழர்கள் விடயத்தில் நீண்டகாலமாக செயற்பட்டு வந்திருக்கின்ற இந்தியா அதன் தார்மீக அடிப்படையில் நிச்சயமாக இந்த விடயங்களை கையில் எடுக்கும். அதேநேரம் இந்தக் கடிதத்துடன் நாங்கள் நின்றுவிடக் கூடாது தொடர்ச்சியாக இந்தியாவை முறைசார்ந்த அணுகுமுறை ஊடாக கையாள வேண்டும்.

**கேள்வி:- கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணி 13ஐ எதிர்த்து பேரணியொன்றைச் செய்து பிரகடனத்தை வெளியிட்டுள்ளமை தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

பதில்:- கஜேந்திரகுமார் போராட்டத்தை நடாத்தியிருக்கின்றார். அதில் பிரகடனமும் வெளியிடப்பட்டிருக்கின்றது. நாங்கள் 13ஆவது திருத்த சட்டத்தை ஏற்றுக்கொண்டு கடிதம் அனுப்பியதாக பிரகடனம் மற்றும் பேரணி சொல்கிறது. மக்களுக்காக பேரணிகளை அல்லது பிரகடனங்களை செய்வதை நான் விமர்சிக்கவில்லை. அது மக்கள் ஆணை பெற்ற அரசியல் கட்சி ஒன்றின் கடமை. அதை அவர்கள் நகர்த்த வேண்டும். அவர்களின் கொள்கையின் பால் அவர்கள் செயற்படவேண்டும். ஆனால் கஜேந்திரகுமாருடைய குற்றச்சாட்டுக்கள் அப்பட்டமான பொய்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அவருக்கிருக்கின்ற பிரச்சினையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும் விமர்சித்து ஏனைய தரப்புக்களையும் விமர்சித்து கொண்டு தமிழ் தேசியத்துக்குள் ஒரு எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கின்றார்கள். அவர்கள் இன்று 13ஆவது திருத்த சட்டம் வேண்டாம் என்று சொல்வதும் நாங்கள் 13இற்குள் சென்றுவிட்டோம் என்று பொய்பிரசாரம் செய்வதும் மறைமுகமாக ராஜபக்ஷ அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வடக்கில் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

ராஜபக்ஷக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது. மகாணசபைகள் வெள்ளை யானைகள் எந்தவொரு அதிகாரப்பகிர்வும் கிடையாது ஒரே நாடு ஒரே சட்டம் என்றெல்லாம் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே ராஜபக்ஷ சொல்வதைத்தான் இவர்களும் கூறுகிறார்கள் ஆகவே இங்கு போராட்டம் மக்களுக்கான அபிலாஷைகளை வென்று கொடுப்பதற்காக மக்களை மீள எழுச்சிக்கு உட்படுத்தியிருக்கின்றது என்று கூறினாலும் அதற்கு அப்பால் இவர்கள் ராஜபக்ஷக்களின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றார்களா? என்ற கேள்வியொன்று இயல்பாக எழுகின்றது.

11ஆம் பக்கம் பார்க்க...

06ஆம் பக்க தொடர்ச்சி...

ஆனால் பல ஆண்டுகளாக தனது விடுதலைக்காக போராடி விலைமதிக்க முடியாத தியாகங்களையும் இழப்புக்களையும் கொடுத்த தமிழர் தேசம் மிகவும் பலவீனமான முறையில் வெறுமனே ஒரு கட்சி அரசியலுக்குள் முடங்கி கிடக்கின்றது. தமிழர்கள் இந்த உலகின் தேசிய இனம். ஆனால் தமிழர்கள் ஒரு தேசிய இனத்திற்கான கட்டமைப்புக்களை கொண்டிருக்கவில்லை என்பதே வேதனையான விடயமாகவுள்ளது. விடுதலைப் புலிகள் தங்களை தாங்களே ஆளுகின்ற வகையிலான ஒரு தேசிய இனத்திற்கான கட்டமைப்புக்களை கொண்டிருந்தார்கள் என்பது உண்மை. ஆனால் அது அழிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்கள் அவ்வாறான முயற்சியொன்றிற்கு இன்றுவரை செல்லவில்லை என்பதே உண்மை. வடகிழக்கைப் பொறுத்தமட்டில் தற்போதைக்கு மக்களின் பெரும்பான்மையைப் பெற்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சிவில் சமூக பிரதிநிதிகளும் இணைந்து தமிழர் தேசியத்திற்கான கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது.அதே போன்று புலத்தில் உள்ள தமிழர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தமிழர் தேசியத்திற்கான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி இரண்டு சக்திகளும் ஒருங்கிணைந்து தமிழர்களின் இனப்பிரச்சினை உள்ளிட்ட முக்கிய விடயங்களுக்கு ஒரு தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை இன்றைய சர்வதேச ஒழுங்குகளுக்கு அமைய கொண்டு செல்வதற்கான நிகழ்ச்சி நிரலை வகுத்து செயற்படுவதே இந்த பூமிப்பந்தில் தமிழர்கள் மீண்டும் ஒரு தேசிய இனமாக தலைதூக்குவதற்கு வழியமைத்து கொடுக்கும்.

இவ்வாறான ஒருங்கிணைவின் மூலமே தமிழர் தரப்பு சர்வதேச தரப்புக்களையும் சிங்களத் தரப்பையும் சமாளித்துக் கொண்டு தமிழர்களின் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கு செயற்பட முடியும். இல்லையேல் தமிழர்கள் பிரிந்து நின்று ஆளுக்கு ஆள் ஒவ்வொரு கருத்துக்களை சொல்லிக்கொண்டு சர்வதேசத்தினால் முன்வைக்கப்படுகின்ற தீர்வுகளை பரிசீலிக்காமல் இருந்தால் மீண்டும் தமிழர்கள் முள்ளிவாய்க்காளில் இழந்ததை போன்று தமது இனத்திற்கான விடுதலையின் இலக்கை அடைவதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டார்கள் என்ற பழிச் சொல்லுக்கும் ஆளாக நேரிடும். ஒன்றுமட்டும் உண்மை யாழ்ப்பாணத்தில் இன்று உருவாகியுள்ள தமிழ் மக்கள் பேரவையாக இருந்தாலும் சரி, தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி அல்லது வேறு தமிழ் கட்சிகளாக இருந்தாலும் சரி தமிழர் விடுதலைக்கு அப்பால் ஒருவரை ஒருவர் வெட்டி ஓட நினைத்தால் கால ஓட்டத்தில் காணாமல் போவார்கள் என்பது மட்டும் உண்மை.

07ஆம் பக்க தொடர்ச்சி...

எம்.ஜி.ஆர் இருந்திருந்தால் இப்படி நடக்க விட்டிருக்க மாட்டார் இந்திரா காந்தி இருந்திருந்தால் ஈழத்தை விடுதலை செய்திருப்பார் வங்கதேச விடுதலையைப் போல தனி ஈழத்தை உருவாக்கியிருப்பார் என்றெல்லாம் ஏற்றிப் போற்றியவர்களும் இவர்கள்தான். இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்தால். அது இந்தியாவுக்கு பேராபத்து என்று பீதியூட்டி உபதேசம் செய்தவர்களும் இவர்கள்தான். ஈழ விடுதலைக்கு எதிரான பார்ப்பன பாசிச ஜெயலலிதாவை ஈழத்தாயாகச் சித்தரித்தவர்களும் இவர்கள்தான்.

இந்தியா அல்லது அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் முதுகில் ஏறி ஈழத் தமிழர்க்கு நீதியும் உரிமையும் பெற்று விட இயலுமெனக் கருதுவதுவீண்கனவுமட்டுமல்லஈழவிடுதலைக்கே எதிரான துரோகத்தனமாகும். இந்தியாவையும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களையும் தாஜா செய்தோ. அவற்றின் தயவினாலோ. அரசு தந்திர நடவடிக்கைகள். அழுத்தங்கள் மூலமாகவோ இந்திய இலங்கை அரசுகளின் போர்க்குற்றங்களுக்கு ஒருக்காலும் நீதி பெற முடியாது. இத்தகைய பிழைப்புவாத சந்தர்ப்பவாத ஈழ ஆதரவு அமைப்புகளையும் இயக்கங்களையும் அம்பலப்படுத்தி. சர்வதேச அரசுகளைப் பணிய வைக்கும் தனித்துவமான உறுதியான புரட்சிகர மக்கள் இயக்கங்களைக் கட்டியமைப்பதன் மூலம்தான் இப்போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும்.

10 ஆம் பக்க தொடர்ச்சி...

அவர்களுடைய செயற்பாடுகளும் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களும் ராஜபக்ஷ தெரிவிக்கின்ற கருத்துக்களும் செயற்பாடுகளும் ஒரு புள்ளியில் சந்திப்பதால் எங்களுக்கு இந்த சந்தேகம் ஏற்படுகின்றது. அதேநேரத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதாக கஜேந்திரகுமார் கூறுகின்றார். 13ஆவது திருத்தச் சட்டம் ஒற்றை ஆட்சிக்குள் இருப்பதாகவும் அதை நிராகரிப்பதாவும் அவர் கூறுகிறார் ஆனால் மாகாண சபை தேர்தலில் போட்டியிடப் போவதாக கூறுகின்றார். இது எத்தனை முரண்நகை. இந்திய. இலங்கை ஒப்பந்தத்தால் தான் 13ஆவது திருத்த சட்டம் உருவாக்கப்பட்டது. 13ஆவது திருத்த சட்டத்தால் தான் மாகாணசபை உருவாக்கபட்டன. ஆகவே 13ஆவது திருத்தம் உருவாக்கத்திற்கு காரணமான விடயத்தையும் 13ஆல் உருவாகிய விடயத்தையும் ஏற்றுக்கொள்ளும் ஒருவர் 13ஐ நிராகரிப்பதாக சொல்வது ஒரு வேடிக்கையான கதை.

**கேள்வி:- தனித்தனி கொள்கைகளுடன் பயணித்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள் 13இல் ஒன்றிணைந்திருக்கிறார்கள். இந்த ஒற்றுமை எதிர்காலத்தில் தமிழர் நலனுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் நீடிக்குமா?**

பதில்:- தமிழ் தேசிய கட்சிகள் இந்திய பிரதமருக்கான கடித ஆவண விடயத்தில் ஒன்றிணைந்து இருக்கின்றார்கள் என்பது உண்மை தான். ஆனால் இந்த ஒற்றுமை நிலைக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 15வருடங்களுக்கு மேலாக போராடிய அல்லது திருப்பி திருப்பி கூறிய விடயங்கள் நடைபெற வேண்டும். இங்கு தனியொருவரின் ஓட்டத்திற்கு இடமளிக்க முடியாது. கடிதத்தை ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கியிருக்கின்றன. ஏழு தலைவர்கள் கையொப்பம் இட்டுள்ளார்கள். ஆனால் நான் தான் வரைந்தேன் என்று ஒருவர் சொல்கின்றார். இங்கு தனிநபரை முன்னிலைப்படுத்துகின்ற விடயத்தினை அனுமதிக்க முடியாது. அதற்காகத்தான் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யவேண்டும். வெளிவிவகார கொள்ளையை உருவாக்க வேண்டும். ஒரு யாப்பு, கூட்டுப் பொறுப்பு, வெளிப்படைதன்மை இருக்கவேண்டும் உள்ளிட்ட பல வியடங்களை நாம் கூறினோம். அப்பொழுது எங்களை குழப்பவாதிகளாக சித்தரித்தார்கள் தமிழரசுக் கட்சி இன்று மக்களிடத்தில் சரிவைச் சந்தித்து வருகின்றது என்பதை பகிரங்கமாக தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு நாங்கள் பெரும்பாண்மையானவர்கள் என்று சொல்லலாம். ஆனால் இவர்களால் தனியே எதனையும் செய்யமுடியாது. ஆகவே தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக நாங்கள் செயற்படுகின்றோம் என்பது உண்மையானது என்றால் நிச்சயமாக ஒரு கூட்டு முயற்சி தேவை. இந்த கூட்டு முயற்சி வெறுமனே ஒரு விடுதியில் சந்தித்து ஒரு ஆவணத்தில் கையொப்பம் இட்டுவிட்டு அதை ஊடகங்களுக்கு கொடுத்துவிட்டு செல்வதாக இருக்க முடியாது. நிச்சயமாக அந்த கூட்டுக் கட்சிகளுக்கு கொள்கைகள் வரையப்பட வேண்டும். தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு கொள்கை, அதற்குரிய பொறிமுறை தயாரிக்கப்பட வேண்டும் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அன்றாட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மாற்று வழிகளை கண்டுபிடிப்பதற்கான விடயங்களை வரைந்து பொறிமுறை செய்யப்பட வேண்டும்.

கூட்டுத்தலைமையும் அவர்களுக்கான கூட்டுப்பொறுப்பும் உருவாக்கப்பட வேண்டும் அவ்விதமான ஒரு கட்டமைப்பு உருவாக்கபட்டால் தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தரப்பாக அது மாறும் அவ்விதமான தரப்பாக அது மாறுகின்றபோது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்கும் தயாராக இருக்கின்றது. மாறாக நாங்கள் பகடைகாய்களாக இருப்பதற்கு என்றும் தயாரில்லை. மிக முக்கியமாக இலங்கை தமிழரசுக் கட்சி தன்னை முன்னிலைப்படுத்துகின்ற விடயங்களை கையளுகின்றது. அதனுடன் கூட்டில் இருக்கின்ற ரெலோ.புளொட் இன்று தீர்மானிக்கின்றவர்களாக இருக்கின்றனர் ஆகவே அவர்கள் தமிழரசுக் கட்சியை கட்டுப்படுத்தவேண்டும். கையாளவேண்டும். இல்லாவிட்டால் அந்த கூட்டில் இருந்து வெளியேறி அவர்கள் ஒரு நியாயமான கட்டமைப்பை உருவாக்குவதற்கு மக்களுக்கான அமைப்பை ஸ்தாபிப்பதற்கு கைகோர்க்க வேண்டும் அதற்கு நாங்கள் எந்தவிதமான அர்பணிப்புக்களையும் செய்ய தயார்.

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

சாகும் வரையிலான இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு முன்னதாக, கடந்த காலங்களில் டிசம்பர் 30 ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டறியும் சங்கத்தினர் நடத்திய ஒரு நாள் அடையாளப் போராட்டத்தின் போது தமிழ் அரசியல் தலைமைகள் மீது கொண்டிருந்த விரக்தி நம்பிக்கையின்மை காரணமாக எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தனின் உருவப்படத்திற்குத் தீ வைத்தனர். போராட்டம் நடத்தியவர்களின் இந்த நடவடிக்கை பலரையும் முகம் சுழிக்கச் செய்திருந்தது. சம்பந்தனுடைய உருவப்படத்திற்குத் தீ வைக்கப்பட்டதைப் பகிரங்கமாகக் கண்டித்தவர்களுக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள் கண்டனக் குரல் எழுப்பியிருந்தார்கள். இத்தகைய ஒரு பின்னணியில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் அரசியல்வாதிகளுக்கு இடமில்லை என்ற கண்டிப்பான ஒரு நிலைப்பாட்டையும் போராட்டம் நடத்தியவர்கள் எடுத்திருந்தார்கள்.
இத்தகைய ஒரு பின்னணியிலேயே அரசியல் தலைமைத்துவமோ அல்லது பகிரங்கமான அரசியல் வழிகாட்டலோ இல்லாத ஒரு நிலையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியவர்களுக்கும் அரசாங்கத் தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்ததன்படி. முன்னாள் அமைச்சர் சுவாமிநாதனே உண்ணாவிரதம் இருந்தவர்களை நேரடியாகச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆயினும் வைத்திய கவனிப்பை ஏற்க மறுத்து உண்ணாவிரதம் இருந்தவர்களில் நான்கு பேருடைய உடல் நிலை மோசமடைந்திருந்தது. தாமதம் ஆகின்ற ஒவ்வொரு நிமிடமும், அவர்களுடைய உடல் நிலை உயிராபத்தான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. இந்தச் சூழலிலேயே மன்னாருக்குச் சென்றிருந்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன வவுனியாவுக்கு விரைந்து உண்ணாவிரதம் இருந்தவர்களுடன் பேச்சுக்கள் நடத்தி ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்ததையடுத்து. உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

உண்ணாவிரதமிருந்தவர்களின் உடல் நிலை ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை அறிந்து அரசாங்கம் அப்போது உடனடியாகச் செயற்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. உண்ணாவிரதத்திற்குப் பொதுமக்கள் மத்தியில் இருந்து ஆதரவு பெருகி வருவதாகவும். இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக வடக்கு கிழக்கு பிரதேசங்களின் பல இடங்களிலும் இருந்து இளைஞர்களும் பொதுமக்களும் வவுனியாவுக்குப் படையெடுக்கத் தொடங்கயிருப்பதாகவும் அரசாங்கத்திற்குத் தகவல்கள் எட்டின. இதனால், உண்ணாவிரதம் இருந்தவர்களில் எவரேனும் உயிரிழக்க நேரிட்டால் நிலைமை மோசமடையும் வன்முறைகளும் வெடிக்கக் கூடும் என்றும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கைத் தகவல்கள் சென்றிருந்தன. இந்த நிலையிலேயே அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

அதேவேளை, தமிழர் தரப்பில் இருந்து நல்லாட்சி அரசாங்கத்திற்கு இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் ஊடாக அவப் பெயர் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அரசியல் ரீதியான ஆர்வம் கொண்டுள்ள அரசியல் தரப்பினருடைய மறைமுகமான நடவடிக்கையும் இதன் பின்னணியில் தீவிரமாக இடம்பெற்றிருந்தது என்ற தகவலும் வெளியாகியிருந்தது. ஆயினும் இந்தத் தகவலுக்கு எந்தத் தரப்பினரும் உரிமை கோரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

காணாமல் போயிருப்பவர்கள் குறித்து அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும். நீதி வழங்க வேண்டும் எனக் கோரி வீதிகளில் கவனயீர்ப்புப் போராட்டங்கள். ஆர்ப்பாட்டங்கள். பேரணிகள் என பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பது பற்றியே பலரும் பேசுகின்றார்கள். விவாதிக்கின்றார்கள். அவை பற்றிய விடயங்களே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஆனால். காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டு பிடித்து கொண்டு வந்து கண் முன் நிறுத்த வேண்டும் எனவும். ஆட்களைக் காணாமல் ஆக்கியமைக்கு நீதி வழங்க வேண்டும் எனவும் கோரி. அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் சவால் விட்டு ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருப்பவர்கள். அரசாங்கத் தரப்பினரையும். இராணுவத்தினரையும் நேருக்கு நேர் சந்தித்து. அவர்களின் முகத்துக்கு நேராக 'எங்களுடைய உறவுகளை நீங்களே காணாமல் ஆக்கியிருக்கின்றீர்கள். அதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள் என கேள்வி எழுப்பி வருகின்றார்கள். மறுபக்கத்தில் இவர்கள் செய்துள்ள குற்றத்திற்கு இவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட எங்களுக்கு நீதி வழங்க வேண்டும் என அடித்துக் கூறி வாதிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

யுத்தம் முடிவடைந்தபோது இராணுவத்தினரிடம் வட்டுவாகல் முகாமில் வைத்து இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகளான விடுதலைப்புலி உறுப்பினர்கள் மற்றும் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் உள்ளிட்ட 14 பேர் தொடர்பில் அவர்களுடைய உறவினர்கள் தனித்தனியே வவுனியா மேல் நீதிமன்றத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு. கெடு பிடிகள் மிகுந்த முன்னைய ஆட்சிக்காலகத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார்கள். இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த வருடங்களாக வவுனியா மேல் நீதிமன்றத்திலும், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்திலும் இழுபட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த வழக்குகளை வயதானவர்களும் நடுத்தர வயதுடையவர்களும் இளம் வயதுடையவர்களுமான பெண்களே முதலில் தாக்கல் செய்தார்கள். அதனையடுத்து. இராணுவத்தினரும். இராணுவ புலனாய்வாளர்களும் அவர்களுக்கு உயிரச்சுறுத்தல் விடுத்திருந்தார்கள் உச்சகட்டமான அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தவணைகளுக்குத் தவறாமல் சமூகமளித்து. காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவுகளின் நிலையை அறிவதற்காகவும் நீதிக்காகவும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இது குறித்து சமூகத்தில் போதிய தெளிவின்மை காணப்படுவது சோகமானது. நீதிக்கான இந்தப் போராட்டத்திற்கு சமூகத்தில் இருந்து போதிய ஆதரவு கிட்டவில்லை என்பதும் கவலைக்குரியது. ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டது என்பது தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். நீதித்துறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ள நீதிக்கான இந்தப் போராட்டத்தில் போதிய அளவில் பங்கெடுப்பதற்கு. அதில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்களைத் தவிர. சட்டத்துறை சார்ந்தவர்களின் பங்களிப்பு மிக மிக குறைவாகவே இருக்கின்றது. எனவே, சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டமாக இருந்தால் என்ன. ஆட்கொணர்வு மனு முறையிலான நீதித்துறை சார்ந்த போராட்டமாக இருந்தால் என்ன இந்தப் போராட்டங்களில் அரசியல் சாயம் பூசிய கண்ணோட்டத்துடன் நோக்குவதும். அந்தப் போராட்ட நடவடிக்கைகளில் கிடைக்கின்ற இடைவெளியில் பிரபல்யம் பெறுவதற்கும். அரசியல் இலாபம் தேடுவதற்கும் முனைபவர்களின் முயற்சிகள் வரவேற்கத்தக்கதல்ல.

இழுத்தடிப்பு, காலம் கடத்தல், நுட்பமான ஒடுக்குமுறை நடவடிக்கைகள், இராஜதந்திர ரீதியிலான உரிமை மறுப்புச் செயற்பாடுகள் என பல்வேறு வழிகளில் பேரின அரசியல்வாதிகள் தமிழ் மக்களை ஓரங்கட்டி வருகின்றார்கள். இந்த நிலையில் இணங்கிச் சென்று ஒடுக்குமுறைக்குள் படிப்படியாகத் தமிழ் மக்கள் தமது அரசியல், மண் உரிமைக்கான போராட்டத்தைக் கரைத்துக் கொள்கின்ற போக்கில் இழுபட்டுச் செல்கின்றார்களோ என்று சந்தேகம் கொள்ளத்தக்கதோர் அரசியல் சூழலில் போராட்டங்களில் முழுமையாக ஈடுபடுபவர்களும். அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குபவர்களும். அந்தப் போராட்டத்தை கையகப்படுத்திக்கொள்ள முயற்சிப்பவர்களும் சரியானதொரு வழிமுறையில் செயற்ப வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.



# பல்சுவை கதம்பம்



## முகத்தை பளிச்சிட தக்காளியை வைத்து செய்யப்படும் அழகு குறிப்புகள்...!

பெரும்பாலான பெண்கள் முகத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கழுத்திற்கு கொடுப்பதில்லை. இதனால் கழுத்தில் கறுப்புக்கயிறு கட்டியது போல் கருவளையம் தோன்ற விடும். இதனை தக்காளி பேஸ்ட்டால் விரட்டி விடலாம். தக்காளி முகத்தில் சுருக்கம் விழாமல் தடுக்கிறது. மேலும் இது தோல்களை பளபளக்க செய்கிறது.

பழுத்த தக்காளியை நன்கு பசைபோல விதையுடன் சேர்த்து அரைத்து, முகத்தில் தடவி, 20 முதல் 30 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் சருமத்தில் உள்ள எண்ணெய் பசை, கருமை நிறம் மறையும்.

தக்காளி குளிர்ச்சியானது. இதனுடன் வெள்ளரிச்சாறை சம அளவில் எடுத்து பஞ்சில் நனைத்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் கழுவ வேண்டும். தொடர்ந்து செய்து வந்தால், பருக்களால் ஏற்பட்ட தழும்புகள் மறையும்.

தக்காளி சாறு அரை டீஸ்பூன் தேன்அரை டீஸ்பூன் சமையல் சோடா ஒரு சிட்டிகை இந்த மூன்றையும் கலந்து கொள்ளுங்கள். இந்த பேஸ்ட்டை கருவளையத்தின் மேல் பூசி 10 நிமிடம் கழித்து கழுவுங்கள். கருவளையங்கள் காணாமல் போகும்.

நீண்ட நாட்களாக முகத்தை சரிவர பராமரிக்காதவர்களின் முகத்திலுள்ள செல்கள் இறந்து போய் முகம் பொலிவிழந்து விடும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியின் சாறுடன் கால் டீஸ்பூன் ரவையைக் நன்றாக கலந்து முகத்தில் தேய்த்து கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்.





## அதிக மருத்துவ குணம் நிறைந்துள்ள பப்பாளி !!

பப்பாளியில் சக்திவாய்ந்த ஆக்ஸிஜனேற்ற விட்டமின்கள் மூலம் செல்களை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க உதவும்.

விட்டமின் ஏ நல்ல பார்வைக்கு முக்கியமானது. மற்றும் பப்பாளி ஒரு சிறந்த மூலமாகும். பீட்டா கரோட்டின் என்பது வைட்டமின் ஏ வடிவமாகும். இது பழங்கள், காய்கறிகள் மற்றும் சில புரத உணவுகளில் நாம் உட்கொள்கிறோம்.

பப்பாளி பழத்தை முகத்தில் தடவி வந்தால் கண் கருமை, முகத்தில் சுருக்கம், நீங்கி முகத்தில் பளபளப்பு மற்றும் அழகு கூடும்.

பப்பாளிபழம் சர்க்கரை, நீரிழிவு பிரச்சனையை குணமாக்குவதில் சிறப்பாக செயல் படக்கூடியது. இது ரத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைப்பதோடு, அவர்களின் உடல் சோர்வை குறைகிறது.

பப்பாளியில் உள்ள விட்டமின்கள் ஏ, சி மற்றும் ஈ ஆகியவற்றின் கலவையானது சக்திவாய்ந்த ஆக்ஸிஜனேற்ற விளைவுகளை வழங்குகிறது. அவை ஃப்ரீரேடிக்கல்களைக் குறைத்து ஒட்டுமொத்த புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கலாம்.

பப்பாளி எல்லா காலங்களிலும் கிடைக்கக்கூடியது. பப்பாளியில் அதிக மருத்துவ குணம் நிறைந்துள்ளது. சத்துக்கள் அதிகம் உள்ளன. இதனுடைய விலையும் மலிவானது. சிவப்பு, மஞ்சள், பச்சை, நிறம் கொண்டது. வருடம் முழுவதும் கிடைக்கக் கூடிய பழம்.

பப்பாளி பழத்தில் நோய் எதிர்ப்பு சத்தியை அதிகரிக்கும் தன்மை உள்ளது. ரத்தில் நோய் எதிர்ப்பு சத்தியை அதிகரித்து, நோய் தொற்று ஏற்படுவதை கட்டுப்படுத்துகிறது.

## பருக்களை உடனடியாக போக்க உதவும் சில வழிகள்!

முகத்தில் சீழ் நிறைந்த பருக்கள் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. அதில் சருமத்தில் அதிகளவு எண்ணெய் சுரப்பு, அதிகமான மேக்கப், தூசிகள் மற்றும் அழுக்குகளால் சருமத் துளைகள் அடைப்பது, மரபணு காரணங்கள், சருமத்தில் இறந்த செல்களின் தேக்கம் அதிகரித்தல், ஹார்மோன் மாற்றங்கள், அதிகமாக வெயிலில் சுற்றுவது போன்றவை குறிப்பிடத்தக்கவை. ரோஸ் வாட்டர் சந்தனப் பவுடரை ரோஸ் வாட்டர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, பருக்களும் மறைந்துவிடும்.

தினமும் சீழ் நிறைந்த பருக்களின் மீது சிறிது தேனைத் தடவி மசாஜ் செய்து, 1 மணிநேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனால் சருமத்துளைகளில் உள்ள அடைப்புக்கள் நீங்கி, சருமத்துளைகள் சுத்தமாகும்.

கற்றாழை ஜெல்லை தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவி மசாஜ் செய்து, மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி ஒரு மாதம் தொடர்ந்து பின்பற்றினால், முகம் பருக்களின்றி பிரகாசமாக இருப்பதைக் காணலாம்.

விளக்கெண்ணெயை சிறிது வெதுவெதுப்பாக சூடேற்றி, முகத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். ஒருவேளை விளக்கெண்ணெய் சற்று அடர்த்தியாக இருப்பது போல் இருந்தால், ஆலிவ் ஆயிலுடன் சேர்த்து கலந்து பயன்படுத்துங்கள்.

உருளைக்கிழங்கை வட்ட துண்டுகளாக்கி, ஃப்ரிட்ஜில் சிறிது நேரம் வைத்து, பின் அதை எடுத்து முகத்தை மசாஜ் செய்து, சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இல்லாவிட்டால், உருளைக்கிழங்கு சாற்றினை முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இப்படி செய்வதன் மூலமும் பருக்கள் நீங்கி, முகம் அழகாக இருக்கும்.

வெந்தயக் கீரையை சிறிது எடுத்து அரைத்து, அத்துடன் தயிரை சிறிது சேர்த்து கலந்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

## தலைமுடி ரொம்ப வறண்டு போகுதா?

தலைமுடியின் மீதான கவலை எப்போதுமே ஆண், பெண் இருவருக்குமே அதிகம். முடி உதிர்வு அதிகமாகிவிட்டால் வழுக்கை விழும், தலைமுடி நரை போன்ற பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். அதேபோல பெண்களுக்கும் நரைமுடி, முடி அதிகமாக உதிர்வது, வறண்டு போவது, எண்ணெய் பிசுக்காக இருப்பது, முன்நெற்றியில் அதிகமாக கொட்டுவது, அடர்த்தி குறைவது என எக்கச்சக்க பிரச்சினைகள் உண்டு. தலைக்கு மேல் கவலை என்று சொல்பவர்களை விட தலைமுடியை நினைத்துக் கவலைப்படுபவர்கள் தான் அதிகம். அதற்கு மிக முக்கியக் காரணமே கூந்தலை நீரேற்றத்துடன் வைத்திருக்காதது தான். இன்றைய காலகட்டத்தில் தலைக்கு எண்ணெய் தேய்க்கும் பழக்கம் என்பதே அரிதாகிவிட்டது. சிலர் தலைக்கு குளிப்பதற்கு பத்து நிமிடத்துக்கு முன் மட்டும் எண்ணெய் தேய்ப்பார்கள். இதனால் முடியில் எண்ணெய் பிசுபிசுப்பு வேண்டுமானால் இல்லாமல் போகலாம். ஆனால் முடி அதிக அளவு வறட்சியடைந்து விடும். அதை எப்படி தான் சரிசெய்வது என்று கேட்கிறீர்களா? இதோ இந்த சில தலைமுடிக்கான மாஸ்க்குகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவையாவும் இயற்கையானவே. உங்களுடைய கூந்தலுக்கு பளபளப்பையும் போஷாக்கையும் தந்து தலைமுடியை வறட்சியிலிருந்து பாதுகாக்கும்.

**அவகேடோ முட்டை மாஸ்க்**

அவகேடோவில் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்திருக்கின்றன. முட்டையின் வெள்ளைக் கருவில் முடிக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்தான புரதச் சத்து நிறைந்து காணப்படுகிறது. இவை இரண்டையும் சேர்த்து தலைமுடிக்கு மாஸ்க்காகப் போடும்போது தலைமுடியிலுள்ள வறட்சி நீங்கும். கூந்தலும் பட்டு போல மின்னும். ஒரு அவகேடோ பழத்தை எடுத்துக் கொண்டு அதில் 1 அல்லது 2 முட்டையின் வெள்ளைக் கருவை (முடியின் நீளத்திற்கு ஏற்ப) எடுத்து நன்கு கலக்க வேண்டும். இந்த கலவையை தலைமுடியில் தேய்த்து ஒரு அரை மணி நேரம் வரையிலும் ஊறவிடுங்கள். பிறகு மென்மையான ஹெர்பல் ஷாம்பு கொண்டு தலையை அலசுங்கள். கெமிக்கல் அதிகமுள்ள ஷாம்புவைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் அது மேலும் கூந்தலை வறட்சியடையச் செய்யும்.

**நெய்**

நெய் கூந்தலுக்கு நல்ல பளபளப்பையும் போஷாக்கையும் கொடுக்கும் என்பது நம்மில பலருக்கும் தெரியாது. ஆம். அந்த காலத்தில் தலைக்கு நெய்யிட்டு தலைமுழுகுவார்கள். அப்படி செய்வதால் கூந்தல் வறட்சி நிலையில் இருந்து மாறி மிருதுவாக மின்ன ஆரம்பிக்கும். 4 ஸ்பூன் அளவு நெய்யை எடுத்துக் கொண்டு முடியின் வேர்க்கால்களில் நன்கு தேய்த்து ஒரு 15-20 நிமிடங்கள் வரையிலும் தலையை நன்கு மசாஜ் செய்யுங்கள். பிறகு வழக்கம்போல சியாக்காய் அல்லது மென்மையான ஷாம்பு கொண்டு தலையை அலசுங்கள். தலைமுடி வறண்டு போய் முடி மென்மையாகும்.

**முட்டை வெள்ளைக்கரு**

முட்டையுடன் அவகேடோ சேர்த்து தலைமுடிக்கு போடும் மாஸ்க் பற்றி ஏற்கனவே பார்த்தோம். அவகேடோ எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. அதேபோல அது சற்று விலையும் அதிகம். உங்களுடைய பட்ஜெட்டுக்கு ஒத்து வராது என்று நீங்கள் நினைத்தால் வெறும் முட்டையின் வெள்ளைக்கருவை கூட அப்ளை செய்யலாம். அது கூந்தலுக்குத் தேவையான ஊட்டச்சத்தைக் கொடுக்கும். அப்படி முட்டையின் வெள்ளைக்கருவை அப்ளை செய்யும் போது அதனுடன் சிறிது ஆலிவ் ஆயில் அல்லது எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) சேர்த்துக் கொள்ளலாம்.

**ஆலிவ் ஆயில்**

ஆலிவ் ஆயில் தலைமுடி வளர்ச்சிக்கு உதவுவதோடு தலைமுடியை ஈரப்பதத்துடன் வைத்திருக்கும். முடி வறட்சி அதிகமாக இருப்பவர்களுக்கு ஆலிவ் ஆயில் மிகச் சிறந்த தீர்வாக இருக்கும். அரை கப் ஆலிவ் ஆயிலை எடுத்துக் கொண்டு அதை மிதமாக வெப்பத்தில் சூடு செய்யுங்கள். லேசாக எண்ணெய் சூடானால் போதும். கை பொறுக்கும் சூடு இருக்கும்போது எண்ணெயை கை விரல்களில் நுனிகளில் தொட்டு முடியின் வேர்க்கால்களில் நன்கு படும்படி தேய்த்து மசாஜ் செய்யுங்கள். 15-20 நிமிடங்கள் வரை மசாஜ் செய்துவிட்டு முடியை நன்கு உச்சந்தலையில் தூக்கி கட்டிக் கொள்ளுங்கள். கொண்டை போட்டுக் கொள்ளலாம். 45 நிமிடங்கள் வரை அப்படியே விட்டு விட்டு பிறகு ஷாம்பு போட்டு தலைமுடியை அலசுங்கள். பிறகு பாருங்கள். வெளியில் போகும்போது வெயிலில் படும்போது கூந்தல் பளபளக்கும். வைரம் போல முடி மின்ன ஆரம்பித்துவிடும்.

# முஸ்லீம் சமூகம் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசலாம் ஆனால் வன்முறையை தூண்டிவிடக்கூடாது – ஹரீஸ் எம்.பி

**முஸ்லீம் காங்கிரசினுடைய பிரதித்தலைவரும், கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஹரீஸ் அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**

**கடந்தவார தொடர்ச்சி...**

**கேள்வி :- அல்லாஹ் அக்பர் எனக்கூறியே உலகளவில் வாழும் முஸ்லீம்கள் இறைச்சிக்காக விலங்குகளை அறுக்கிறார்கள். நல்ல விடயங்களைச் செய்கிறார்கள். மனிதனையும் கொல்கிறார்கள். இதனது விளக்கம் என்ன என்பதைக் கூறமுடியுமா?**

பதில் :- உண்மையில் இவ்வாறான கேள்விகளுக்கு பதில் வழங்கவேண்டுமாயின் நான் மார்க்க அறிஞராக இருக்கவேண்டும். இவ்வாறான கேள்விகளை மௌலவிக்கும் மேலாக இருக்கக்கூடியவர்களால் தான் இதற்கு பதல் வழங்க முடியும் என்பதே எனது கருத்து.

**கேள்வி :- சரி தவறுக்கு அப்பால், கடந்த காலச் செயற்பாடுகளை மறந்து, தற்போது இந்த கல்முனை விவகாரத்தில் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கான தீர்வு குறித்த உங்களது கருத்து என்ன?**

பதில் :- எனக்கிருக்கும் கவலை என்னவெனில் கல்முனை விவகாரத்தினை வைத்து வடகிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக நாம் செயற்படுவதாக சில தமிழ் அரசியல்வாதிகள் பிரச்சாரத்தினை முன்னெடுக்கிறார்கள். மக்களுக்குத் தெரியும். நான் ஒரு தமிழ்க் கல்லூரியில் படித்தேன். ஆசிரியர்கள், புத்திஜீவிகள், நண்பர்கள், பல்கலைக்கழக நண்பர்கள், வர்த்தக பிரமுகர்கள் என ஏராளமான தமிழ் சகோதரர்கள் எனக்கு இருக்கிறார்கள். எனக்கு உண்மையில் பெரிய சங்கடம் அதாவது வடகிழக்கில் மாத்திரம் இவ்வளவு பெரிய பிரச்சினைகள் இருப்பதையிட்டு. சுயாட்சியிலான சமஸ்டி என்பது தமிழ் மக்களது ஒரு நீண்டகாலக் கனவு. அதற்குப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் உயிர் துறந்துள்ளார்கள். அவர்களது தியாகத்தினை இன்று செல்லாக்காசாக்குகின்ற அரசியலே நடக்கின்றது. நான் அறிந்த வகையில் நம்பியிருந்த நாடுகள் கூட கைவிடும் அளவிற்குப் போயுள்ளது. அதைத்தான் கஜேந்திரகுமார் அவர்களும் கூறுகிறார். இப்படியான சூழலில் வடகிழக்கில் சுமார் 80 பிரதேச செயலகங்கள் இருக்கிறது. அதில் இந்தவொரு பிரதேச செயலகத்தின் பிரச்சினையை ஒட்டுமொத்த தமிழ் - முஸ்லீம்களின் பிரச்சினையாக வைத்து, அனைத்து தமிழ் எம்பிக்களும் பிரதேச செயலகத்திற்கு வருவதும், பாராளுமன்றில் கூடுவதும், பின்னர் முஸ்லீம் எம்பிக்களும் வருவதும் பாராளுமன்றில் கூடிக்கதைப்பதும் என காலம் வீணடிக்கப்படுகின்றது. தமிழ் - முஸ்லீம்களின் ஒற்றுமையை வலியுறுத்தி செய்த போராட்டத்திற்கு எமது முஸ்லீம் தலைமைகளே வரவில்லை. இப்பிரச்சினையை பூதாகரமாக்கக்கூடாது என்ற ரீதியில் நாங்கள் கலந்துகொண்டோம். எமது தலைமைகளுக்கே நிதானம் இல்லை.

மன்னாரில் நடந்த பிரச்சினை உங்களுக்குத் தெரியும். திருக்கேதீச்சர வளைவு பிரச்சினை. ஆலயத்திற்காகக் கட்டப்பட்ட வளைவில் ஏற்பட்ட பிரச்சினை. அங்கிருக்கும் கிறிஸ்தவ மக்களால் இதனை எதிர்த்த விடயம். காணி விடயமொன்று தொடர்பாக ஞானசார தேரர் வருகைதரும் நிலைமை கூட உருவாகியது. ஆகவே இது இனவாதமாகவோ மதவாதமாகவோ பார்க்கப்படவில்லை. அதேபோலத் தான் கல்முனையிலும் மட்டக்களப்பிலும் இரு கிராமங்களுக்கு இருக்கும் எல்லைப்பிரச்சினை. வழக்கு என பெரிய பிரச்சினை. அதேபோல சாய்ந்தமருது முஸ்லீம்கள் தனியான நகர சபை வேண்டும் என்ற பிரச்சினை. இவையெல்லாம் எல்லைப் பிரச்சினைகள். நான் அனைத்து மதங்களையும் மதிக்கின்ற ஒருவன். கல்முனை பிரதேச செயலகத்தில் இந்துகோவில் கட்ட முற்பட்ட போது அதுவொரு சர்ச்சையாக வெடிக்கப்பார்த்தது. நாங்கள் இணைந்து அந்தப் பிரச்சினைக்கு சுமுகமாக முற்றுப்புள்ளி வைத்தோம். இன நல்லுறவுக்காக நான் தனிப்பட்ட ரீதியில் தமிழ் மக்களுக்கு உதவி செய்யவேண்டும். தமிழர்களும் முஸ்லீம்களும் ஆட்சி அதிகாரத்துடன் கொள்கை ரீதியாக தலைநிமிர்ந்து வாழவேண்டும். உண்மையில் நான் தமிழ்த் தலைமைகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன் முஸ்லீம் மக்களை இணைத்துச்செல்ல உங்களுக்கு விருப்பம் என்றால் பிரபாகரன் வழியில், நீலன் திருச்செல்வம் வழியில், சிவசிதம்பரம் வழியில் வாருங்கள். என்னவென்றால் அவர்கள் இனப்பிரச்சினை தீர்வு என்று சந்திரிக்கா அவர்கள் இருந்தபோது அரசியல் வரைபு திட்டம் ஒன்று வரையப்பட்டது. அதில் வடகிழக்கு இணைக்கப்பட்டு தென்கிழக்கு மாகாணம் முற்றுமுழுதாக அம்பாறை பிரதேசங்கள் அந்த தென்கிழக்கு மாகாணத்தில் உள்ளடக்கப்பட்டது. அதை அன்றைய தமிழ்த் தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி அதைச் செய்ய முடியும் என்றால், நாங்கள் தமிழ் பிரதேச சபையோ, தமிழ் நகர சபையையோ கொடுப்பதற்கு எதிரானவர்கள் அல்ல. ஒரு வட்டாரத்தினது எல்லைப்பிரச்சினை தான் இவ்வளவு பெரிய சர்ச்சைகளை இன்று உருவாக்கியுள்ளது.

**கேள்வி:- உங்களது அரசியல் அனுபவங்களைக் கொண்டு உங்களுக்கு எட்டியவகையில் தமிழ்க் தரப்பா அல்லது முஸ்லீம் தரப்பா?, சிங்களத் தரப்பா யார் இந்தப் பிரச்சினையை தூண்டுகிறார்கள்?**

பதில் :- இவ்வளவு காலம் தமிழ் - முஸ்லீம் தலைமைகளின் கைக்குள் இருந்தது இந்தப் பிரச்சினை. சிலர் இந்தப் பிரச்சினையை அரசியலுக்காகவும் துவேச நோக்குடனும் எழுதினார்கள். அது நடந்தது உண்மை. ஆனால் இப்பொழுது இவர்களே தெற்கிலுள்ள சில பௌத்த அமைப்புகளிடம் இந்தப் பிரச்சினையை மாற விட்டுவிட்டார்கள். உதாரணமாக ஞானசாரதேரரின் கைக்கும், அத்துரலிய ரத்னதேரரின் கைக்கும் இந்தப் பிரச்சினை போய்விட்டது. அவர்களின் கைகளுக்குப் போனால் எப்படியிருக்கும். அவர்கள் தமிழ் - முஸ்லீம்கள் ஒற்றுமையுடன் வாழ விரும்புவார்களா? நீங்களே இதயசுத்தியாகக் கூறுங்கள் பார்ப்போம். ஞானசார தேரர் ஏன் மன்னாருக்கு வந்தார்?

**கேள்வி :- இங்கு மத வாதம், இனவாதம் என்கிற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இன்று சிறுபான்மை மக்களை என்னவென்றாலும் செய்யலாம் என்கிற நோக்கில் இனவாத பௌத்த துறவிகள் செயற்படுவதை காண்கிறோம். இவ்வாறான நெருக்குவாரங்கள் இன்று தமிழ் - முஸ்லீம் மக்களுக்கு இருக்கின்றபோது நாம் ஏன் ஒரு குடையின் கீழ் நின்று செயற்படக்கூடாது?**

பதில் :- அன்று நாங்களும் தமிழினத்தின் போராட்டங்களோடு ஆதரவாகச் செயற்பட்டவர்கள். அன்று விடுதலைப்புலிகள் அமைப்புடன் முஸ்லீம் இளைஞர்கள் இணைந்து போராடினர் என்பதை மறுக்க முடியாது. அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழீழத்தைப் பெற்றுத்தராதுவிட்டால் தம்பி அஷ்ரப் ஆகிய நான் பெற்றுத்தருவேன் எனக் கூறியவர் எங்களது தலைவர். அவ்வாறான இனிமையான வரலாறுகள் எங்களுக்குள் இருக்கிறது. தந்தை செல்வநாயகம் அவர்கள் பிராந்திய சுயாட்சியினை எங்களுக்கு முன்வைத்தவர்.

இப்படியான வரலாற்றை ஏன் தமிழ்த் தலைமைகள், முஸ்லீம் தலைமைகள் தயாராக இருக்கிறது. ரவுப் ஹக்கீம் அவர்கள் தமிழ்ச்செல்வன் உயிர் துறந்த போது பாராளுமன்றில் அஞ்சலி செலுத்திய தைரியமான ஒரு தலைவர். தமிழ் - முஸ்லீம் உறவுகளைப் பலப்படுத்தவேண்டும் என்ற நோக்கமும் கொண்டவர். பேச்சுவார்த்தைகளைக் குழப்பியதற்கு ரவூப் ஹக்கீம் அவர்கள் காரணமல்ல. அதற்குக் காரணம் கருணா அவர்கள். கருணா அவர்கள் பிரபாகரனின் ஒப்புதல் இன்றி ஒஸ்லோவில் சில வாக்குறுதிகளைக் கொடுத்ததன் காரணமாகத் தான் பிரபாகரன் - கருணா இருவருக்கும் இடையில் பிரச்சினைகள் வந்தது. அதாவுல்லா அவர்கள் முஸ்லீம்களின் ஆணையைப் பெற்ற தலைவர் இல்லை. இந்த முறை தமிழ்ப் பிரதிநிதித்துவம் வராதபடியால் அவர் வந்தவர். இருக்கக்கூடிய முஸ்லீம் தலைமைகளுக்கு மத்தியில் ரவூப் ஹக்கீம் அவர்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள். அப்படியாயின் ஏன் இரண்டு நாட்கள் அவருடன் இணைந்து தமிழ்த் தலைமைகள் பேச முடியாது.

**கேள்வி :- தமிழ் - முஸ்லீம் ஒற்றுமையினை கொண்டுவருவதில் பின்னிற்பது யார் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில் :- தமிழ் - முஸ்லீம் ஒற்றுமையினைக் கொண்டு வர முஸ்லீம் தரப்பு தயாராக இருக்கிறது. இன்று சாணக்கியனே சுமந்திரன் அவர்களைப் பற்றி சிலாகித்து எழுதுகிறார். உண்மை தானே. சில விடயங்கள் செயற்கையாகவும் நடக்கிறது. முஸ்லீம் தலைமைகளுடன் இணைந்து அனைவரும் ஒரே அரசியல் நிலைப்பாட்டுடன் பயணிப்போம் என்கிற கோரிக்கைகள் அல்லது அழைப்பு ஏதும் தமிழ்ப் பகுதிகளில் இருந்து வரவில்லையே. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை இப்பொழுது மன்னார் ஆயர் மற்றும் மதகுருக்களைக் கொண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விக்னேஸ்வரன் ஐயா உட்பட தமிழ்த் தரப்பினர் இணைந்து பேச முற்படுகின்றனர். இந்த வகையான அமைப்பு ஏன் முஸ்லீம் கட்சிகளையும் மேடைக்கு கொண்டுவந்து, தமிழ்க்கட்சிகள் ஏன் இணக்கப்பாட்டு முயற்சியினை முன்னெடுக்கவில்லை.

**கேள்வி :- தமிழ் மக்கள் வாக்களிக்க முஸ்லீம் பாராளுமன்றஉறுப்பினர்களானகாதர்மஸ்தான், றிசாட் பதியுதீன் போன்றோர் கூட இன்று தமிழ் மக்களுக்காகக் கதைப்பதில்லையே?**

பதில் :- உண்மையில் காதர் மஸ்தான் என்பவர் முஸ்லீம் மக்களுக்காகவும் பாராளுமன்றில் பேசுவதில்லை. ஆனால் வேலைகளைச் செய்கிறார். மக்கள் ஒன்றுமில்லாமல் வாக்களிக்கமாட்டார்கள். றிசாட் பதியுதீன் அவர்களும் அமைச்சராகவிருந்து கணிசமான தமிழ் மக்களுக்காகவும் வேலை செய்திருக்கிறார். வாக்களித்தார்கள். வாக்களிப்பு என்பது வேறு. கொள்கை ரீதியான அரசியல் பின்னடைவை சந்திக்கின்றது அதனைத் தான் நான் கூறினேன். எங்களுடைய கட்சி மாத்திரமல்ல இரு சமூகங்களும் தான். தெற்கினுடைய மாற்றாந்தாய் என்கிற மனப்பான்மையால் தான் இரு சமூகங்களும் இணைந்து செயற்படவேண்டும் என்பதை நான் வலியுறுத்துகின்றேன். இன்னும் இரண்டு சமூகங்களும் பேசாமல் இருக்கின்றன. சிறுபான்மை சமூகம் இன்று நேற்று ஒடுக்கப்படவில்லையே. நூறு வருடமாக இதைப்பற்றித் தான் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். நல்ல தலைவர்கள் இருக்கும் போது இதற்கான வேலைத்திட்டங்கள் நடந்து கொண்டிருந்தது. உங்களை தந்தை செல்வாவாக நாங்கள் மாறச்சொல்லவில்லை குறைந்தது நீலன் திருச்செல்வமாக சரி மாறி வந்து சுமந்திரன், மாவை சேனாதிராஜா, சம்பந்தன் போன்றோர் ரவூப் ஹக்கீம் உட்பட்ட நாங்கள் இருக்கிறோம்.

எங்களுடன் கலந்துரையாடி வடகிழக்கு இணைப்பு என்றால் அதில் ஒரு கொள்கை. கல்முனைப் பிரச்சினை என்றால் அதனை எவ்வாறு பிரித்துக்கொடுப்பது, வாழைச்சேனை மற்றும் தோப்பூர் முஸ்லீம்களின் பிரச்சினை. யாழ் முஸ்லீம்களின் பிரச்சினை இதனை எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்கின்ற விடயங்களை நாங்களே வகுத்து, தெற்கில் போய் அவர்களுடன் பேசினால் சிக்கல் இல்லையே. இப்பொழுது நல்ல சந்தர்ப்பம். முஸ்லீம் இளைஞர்கள், தமிழ் இளைஞர்கள், தமிழ் - முஸ்லீம் அரசியல்வாதிகள் இணைந்து இப்பிரச்சினைளுக்குத் தீர்வு காண முடியும். சாணக்கியனாக இருக்கலாம் நானாக இருக்கலாம் யாரும் வெளியில் தேவையற்ற கதைகளைக் கதைத்துவிட்டு, நாளை இப்படியாக இணைந்து ஒரு பேச்சுவார்த்தை என்றவுடன் நாங்கள் எல்லோரும் கலந்துகொள்வோம். ரவூப் ஹக்கீம் அவர்கள் கூட வருவார். அனைவரும் பேசி ஒரு கொள்கையினை உருவாக்க வேண்டும். இன்று ஜெனீவா வரை தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பில் பேசுகிறார்கள். அதேபோல் இன்று முஸ்லீம்கள் தயாராகவிருக்கின்ற போது. ஏன் எங்களையும் தமிழ்த் தலைமைகள் இணைத்து கொள்கைகளை வகுத்து தெற்கில் உள்ளவர்களுக்கு கூறலாம். அவ்வாறு அவர்கள் ஏற்றுக்கொள்ளாது விடின் சர்வதேசத்திற்குச் செல்லலாம்.

இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா போன்ற நாடுகள் இலங்கையரசுடன் இணக்கமாகச் செயற்படுகின்றன. திருகோணமலை எண்ணெய் குதங்களை அதானிக்கு வழங்கியது இலங்கை. அதுபோல கெரவலப்பிட்டியவை அமெரிக்காவுக்கும். சீனா தானாகவே முன்வந்து இலங்கையில் பாரிய வேலைத்திட்டங்களை செய்து வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசுடன் இணங்கிப்போகின்ற அரசியலைச் செய்வதாகவே கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வளவு காலமும் முஸ்லீம்களும் செய்த அரசியல் இதுதான்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளுடன் இணைந்து தான் எமது பயணமும் அமைந்திருந்தது. அதாவது ஒத்துழைப்பு அரசியல். இப்படியிருந்துதான் முஸ்லீம் சமூகத்துக்குரிய அரசியலையும் அபிவிருத்தி வேலைகளையும் செய்தார்கள். முஸ்லீம் மக்களின் அரசியல் பாதை என்பது தீவிரவாதப் போக்குடையதாக மாறிவிடக்கூடாது அல்லது கொண்டுசெல்லக்கூடாது என்பது தான் எனது கருத்து. அதற்காகத்தான் நான் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களைக் கூட கண்டித்துப் பேசினேன்.

**கேள்வி :- இலங்கையில் சீன ஆக்கிரமிப்பு என்பது பூகோள ரீதியாக இலங்கையின் அரசியலை முன்நோக்கிக் கொண்டுசெல்லும் வாய்ப்பு இருக்கிறதா?**

பதில் :- சீனாவினது இலங்கை மீதான ஆக்கிரமிப்பு என்பது அவர்களது வர்த்தக நலன் சார்ந்த விடயம், பூகோள அரசியலைச் சமநிலைப்படுத்துவதற்காகத் தான் இன்று அரசு இந்தியாவுக்கு திருகோணமலை எண்ணெய் குதங்களையும், அமெரிக்காவுக்கு கெரவலப்பிட்டியவையும் வழங்கியுள்ளது. அரசு இராஜதந்திர ரீதியாகச் செயற்படுகின்றார்கள்.

**கேள்வி :- நீண்டகாலமாக இழுபறியில் நடாத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக தற்போது பேசப்படுகின்றது. இது தொடர்பாக?**

பதில் :- மாகாண சபைத் தேர்தல் கட்டாயம் நடாத்தப்படவேண்டும். அது முழுமையாகச் செயற்படவேண்டும். வெறுமனே அதிகாரமற்ற சபைகளாக அல்லாமல் தமிழ் - முஸ்லீம் மக்களின் தேவைகளை நடைமுறைப்படுத்தும் சபைகளாக மாறவேண்டும்.

**கேள்வி :- சிறுபான்மை இனத்திற்கான அரசின் தீர்வுகள் எவ்வாறு அமையவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

பதில் :- சிறுபான்மை மக்களுக்கு அரசாங்கம் தீர்வை வழங்க முன்பு, சிறுபான்மை மக்கள் என்ன தீர்வை வழங்க வேண்டும் என்கிற தீர்மானத்திற்கு வரவேண்டும். அதன் பின்னர் தான் அரசு எதை வழங்கும் அல்லது குறைக்கும் என்பதைப் பார்த்து போராடி அல்லது பேசித்தான் பார்க்கவேண்டும்.

**கேள்வி :- இன்று கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவினை மீண்டும் கட்டியெழுப்பக்கூடிய நிலை இருக்கிறதா?**

பதில் :- நிச்சயமாக கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவுகளை கட்டியெழுப்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு இரு சமூகங்களின் தலைவர்களும் முன்வரவேண்டும்.

# 13வது திருத்தச்சட்டமும் முருங்கைமரம் ஏறும் வேதாளங்களும்



**கடந்தவார தொடர்ச்சி...**

எனக்கு முன்னால் பேசிய தலைவர்கள் பாரதப் பிரதமர் மோடி அவர்களுக்கு நாங்கள் இந்தக் கடிதத்தை எழுதிய காரணத்தையும் எழுதவேண்டியதன் காரணத்தையும் அதிலே எழுதப்பட்டிருக்கின்ற விடயங்களையும் மிகவும் தெளிவாக விரிவாகப் பேசிவிட்டார்கள். மீண்டும் நானும் அதனையே கூறுவதில் அர்த்தமில்லை. எனினும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் மிகத் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்றபோது நான் இரண்டு ஒரு தமிழ்க் காங்கிரஸ் பிரதேச சபையின் உறுப்பினர்களோடு கதைத்தபோது அவர்களும் அக்கட்சியின் தலைமை கூறுவதை நம்புகின்றார்கள். அதுமாத்திரமல்ல தங்களது தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இவ்வளவு தீவிரமாக 13வது திருத்தத்தில் இருக்கக்கூடிய பிழைகளைக் கூறுபவர் நிச்சயமாக எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்றார்கள். இருந்தாலும் அடுத்தகட்ட தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் மிகத்தீவிரமாக அந்தத் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்பதை வலியுறுத்திக்கொண்டிருக்கின்றார்கள்

ஏனென்றால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரேயொரு சந்தர்ப்பம் இதுதான். ஏதோ சபைக்குப் போவதற்கு. பாராளுமன்றம் செல்ல முடியாது ஆகக்குறைந்தது மாகாண சபைக்காவது செல்லலாம் என்ற நம்பிக்கையில் மிகத் தீவிரமாக தேர்தலில் நிற்க வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். நானும் நம்புகின்றேன் அவர்கள் போட்டியிடுவார்கள் என்றுதான். அது வேறு விடயம். ஒரு பொய்யைச் சொல்வதற்கு தகுதி வேண்டும். தமிழ்க் காங்கிரஸ் கட்சியினைப் பொறுத்தமட்டில் தேர்தல் ஆணையகத்தில் அவர்கள் கொடுத்திருக்கின்ற யாப்பிலே அவர்கள் சமஸ்டியோ அல்லது இரு தேசம் ஒரு நாடு என்ற விடயங்கள் கூறப்பட்டிருக்கவில்லை. நிச்சயமாக ஒற்றையாட்சிதான் கூறப்பட்டிருக்கின்றது. 75 ரூபா கொடுத்து அந்த யாப்பினை நாங்கள் எடுத்துப் பார்த்திருக்கின்றோம். அந்த யாப்பிலே ஒற்றையாட்சியினைப் பற்றிக் கூறிவிட்டு மக்களுக்குக் கூறுவதற்காக வேறு ஒரு பெயரை வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்கிற ஒரு பெயரை வைத்து இரு தேசம் ஒரு நாடு, சமஸ்டி இவைகளைப் பற்றி மக்களுக்குக் கூறுகிறார்கள். ஆனால் அந்தக் கட்சியினுடைய உத்தியோகபூர்வமான நிலைப்பாடு ஒற்றையாட்சிதான். 77 வருடமாக அவர்களிடம்அதுதான்இருக்கிறது. ஆகவே இது மக்களுக்குத் தெரியாது என நினைக்கிறார்கள். மிகத் தொகையான மக்களுக்கு இவ்விடயம் தெரியும். இவர்கள் கூறுவது பொய் என்பதும் தெரியும். ஆகவே மக்கள் இதனை கவனமாகக் கையாள வேண்டும். எங்களது எந்தக் கட்சிகளாகவிருந்தாலும் சரி எங்களது யாப்பினை எடுத்துப்பார்த்தால் தெரியும். நிச்சயமாக நாங்கள் சமஸ்டி பற்றித்தான் வலியுறுத்தியுள்ளோம். ஏறக்குறைய தமிழரசுக்கட்சி உருவாகிய 1952ஆம் ஆண்டில் இரண்டு ஆசனங்கள். அதனை விடுவோம். 1956ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒவ்வொரு தேர்தலிலும் மக்கள் சமஸ்டி அமைப்புக்குத் தான் வாக்களித்திருக்கிறார்கள். அது தமிழரசுக் கட்சிக்கு மாத்திரமல்ல. இதில் போட்டியிட்டிருக்கும் அனைத்துக் கட்சிகளும் சமஸ்டி அடிப்படையில் தான் போட்டியிட்டிருக்கின்றோம். அதற்குத் தான் வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையினை நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் விட்டு விலக மாட்டோம் என்பது உறுதி. இதுதான் உண்மை. இந்தக் கடிதத்தில் கூட மிகத்தெளிவாகக் கூறியிருக்கின்றோம். அரசியல் அமைப்பில் இருக்கின்ற அந்த விடயத்தை அமுல்படுத்துவதற்கு நீங்களும் கையெழுத்துதாரிகளாக இருந்திருக்கின்றீர்கள். ஆகவே நீங்கள் அரசாங்கத்திடம் கூறுங்கள் அதனை அமுல்படுத்தும்படியாக இந்தியப் பிரதமரை நாங்கள் கேட்டிருக்கின்றோம். இலங்கை அரசாங்கத்திடம் கூறி இதனை நடைமுறைப்படுத்துங்கள் என்பதுவே இக்கடிதத்தில் முக்கியமான விடயமாகும் என புளொட் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் அவர்கள் தெரிவித்தார்.

சமஸ்டி என்பது தந்தை செல்வாவின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது முடியாமல் போகவே தனி நாடு தான் தீர்வு என 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் கொண்டுவரப்பட்டது. ஒரு நீண்ட யுத்தம் நடந்தது. பல்லாயிரக்கணக்கான போராளிகள் கொல்லப்பட்டார்கள். இலட்சக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். போராட்டம் இறுதியில் மௌனிக்கப்பட்டது. இப்பொழுது நாங்கள் மீண்டும் சமஸ்டி பற்றிப் பேசுகின்றோம். அதில் எவ்வித தவறும் கிடையாது. எல்லோரும் பூகோள அரசியல், சர்வதேச ரீதியான ஒத்துழைப்புக்கள் இவையனைத்தும் எங்களுக்குத் தேவை என்று பேசி வருகிறார்கள். குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரையில் அவர்கள் பூகோள அரசியலைப் பற்றி அடிக்கடிப் பேசிக்கொள்வார்கள். இந்தப் பூகோள ரீதியாகத் தான் எங்களுடைய அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று கூறுவார்கள். ஆனால் அந்தப் பூகோள அரசியலை எவ்வாறு கையாள்வது. அந்தப் பூகோள அரசியல் அவர்களால் கையாளப்படுகிறதா. நாங்கள் எல்லோரும் இருந்துவிட்டுப் பேசிவிட்டுச் செல்லலாம் அதில் எந்தவிதப் பிரச்சினைகளும் கிடையாது. ஆனால் இதனை நாங்கள் எப்படி செயற்படுத்துவது எப்படி நிறைவேற்றுவது. பூகோள அரசியல் என்பது ஒரு சர்வதேச மயப்படுத்தப்பட்ட அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இந்தியா போன்ற பல நாடுகளினுடைய விடயங்களைப் பற்றித் தான் நாங்கள் பேசுகின்றோம். இப்பொழுது பல விடயங்கள் இங்கு கூறப்பட்டது.

யுத்தம் நடந்த காலத்தில் இருந்த இலங்கை என்பது வேறு. இன்று இருக்கக்கூடிய இலங்கை என்பது வேறு. யுத்தம் ஆரம்பித்த காலத்தில் அமெரிக்கா - ரஷ்யாவுக்கு இடையில் பனிப்போர் நடைபெற்றது. அதன் பிற்பாடு இப்பொழுது இந்தியா - அமெரிக்காவுக்கிடையில் மிக நெருக்கமான உறவுகள் வந்திருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் யுத்தம் நடந்த காலத்தில் சீனாவைப் பற்றி யாரும் பேசியது கிடையாது. ஆனால் இலங்கை தற்போது சீனாவினது செல்வாக்குக்கு உட்பட்ட நாடாக மாறியிருக்கிறது. ஆகவே அந்த மாற்றம் என்பது வடக்கு மாகாணத்திலும் கூட சீனர்கள் காலூன்றுவதற்கான ஒரு தளத்தைத் தேடித்திரிகிறார்கள். அண்மையில் கூட சீனத் தூதுவர் ஒரு குழுவுடன் பருத்தித்துறைக்குப் போனார். மன்னார் போனார். இந்திய எல்லை வரை போனார்கள். பல கதைகளைப் பேசினார்கள் இதெல்லாம் நடந்து முடிந்திருக்கிறது. ஆகவே இப்பொழுது இலங்கை என்பது யார் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ இந்தியா விரும்பினாலோ, உலகம் விரும்பாவிட்டாலும் இலங்கைக்குள் சீனாவினது இருப்பு என்பது அடுத்த நூறு வருடத்திற்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை 99 வருடக் குத்தகைக்கு வழங்கியதன் ஊடாக இலங்கைக்குள் சீனாவினது இருப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எந்த அரசாங்கம் வந்தாலும் இதனை மாற்ற முடியாது. ஏனெனில் அது இரு தரப்பு ஒப்பந்தம். ஆகவே அதனை மாற்ற முடியாது. இவ்வாறான மாறியிருக்கக்கூடிய சூழ்நிலையில், இலங்கைக்குள் சீனாவினது இருப்பு என்பது இந்தியாவிற்குள் பாதுகாப்புப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்பது எல்லோருக்கும் புரியக்கூடிய விடயம். மன்னாரில் இருந்து ஒரு 25 கிலோ மீற்றர் தொலைவில் தான் தனுஸ்கோடி இருக்கின்றது. யாழ்ப்பாணம் மயிலிட்டியில் இருந்து ஒரு 40-50 கிலோ மீற்றர்கள் தொலைவில் தான் இராமேஸ்வரம் இருக்கின்றது. இந்த சூழ்நிலையில் வடகிழக்கில் சீனாவினது ஆதிக்கமும் இருப்பும் இருக்குமாகவிருந்தால் அது இந்தியாவினது பாதுகாப்புக்கு கேள்விக்குள்ளாக்கும். இவ்வாறான சூழ்நிலையில் இந்த விடயங்களை நாங்கள் எவ்வாறு கையாள்வது. ஆகவே அந்தவொரு நிலவரத்தில் தான் இந்தியா மீண்டும் எங்களது பிரச்சினையில். ஈழத்தமிழர்களின் பிரச்சினையில் தலையிடுவதற்கான ஒரு களத்தை உருவாக்குவது. அந்தக் களம் உருவாகினால் தான் பேச்சுவார்த்தை என்ற ஒன்று ஆரம்பமாகும். அந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பமானால் தான் நாங்கள் பல விடயங்கள் பற்றிப் பேசலாம். அது வெறும் 13 மாத்திரம் அல்ல.

வடகிழக்கில் தமிழ் மக்கள் பலமாக இருந்தால் தான், தமிழர் தரப்பு பலமாக இருந்தால் தான் அது இந்தியாவுக்கு பயன். பலவீனமான தமிழ்த்தரப்பால் இந்தியாவுக்கு எந்தவித பயனும் கிடையாது. வடக்கு கிழக்கு என்பது தமிழ் மக்கள் ஒரு அதிகாரம் மிக்கவர்களாக இருந்தால் பலம் மிக்கவர்களாக இருந்தால் இதற்குள் வெளிநாட்டு ஊடுருவல்களைத் தடுக்கின்ற சக்தி பெற்றவர்களாக இருந்தால் அதுதான் இந்தியாவுக்கு பிரயோசனமானது. பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடியது. ஆகவே 13 அல்ல பிரச்சினை. 13 ஆரம்பப் புள்ளியா, தொடக்கப்புள்ளியா, முடிந்த புள்ளியா. 13 என்பது அரசியல் அமைப்பின் ஒரு அங்கம். நீங்கள் யாரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாங்கள் யாரும் விரும்பாவிட்டாலும் அது அங்கு இருக்கிறது. நாங்கள் அதை நடைமுறைப்படுத்துமாறு கூறுகிறோம். இந்தியா கூறியவுடன் நடைமுறைப்படுத்தப்படுமா? நடைமுறைக்கு வருமா? வராது. இந்தியா ஒவ்வொரு விடயங்களுக்கும் இலங்கை அரசுடன் சண்டை பிடிக்கிறது. நெடுந்தீவு, நைனாதீவு, அனலை தீவு மாற்று மின் உற்பத்தித்திட்டம் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு அது விருப்பமில்லை. ஆனால் தற்காலிகமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறதே தவிர, அது முற்றுமுழுதாக இரத்துச்செய்யப்படவில்லை. கைவிடப்படவில்லை. ஆகவே இந்தியா இன்னும் உயர் அதிகாரிகளூடாக இராஜதந்திரமாக அதற்கானப் போராட்டத்தை நடாத்துவார்கள்.

இந்தியா நாளைக்கு கூறியவுடனேயே நாங்கள் கேட்கின்ற பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள், பறிக்கப்பட்ட ஏனைய அதிகாரங்கள் வழங்கப்படும் என்று இல்லை. கொடுக்கப்படாதுவிட்டால் நாங்கள் தொடர்ச்சியாக இந்தியாவுடன் பேசுவதற்கான ஒரு களம் உருவாகும். நாங்கள் தொலைவில் இருந்துகொண்டு இந்தியாவைத் திட்டித்தீர்க்கப்போகிறோமா?. இந்தியா 13 உடன் நின்றுவிடும் என்று நாங்கள் கூறிக்கொண்டிருக்கப்போகிறோமா? அல்லது இந்தியா ஏதோவொன்றைக் கொணர்ந்து திணிக்கப்போகின்றது எனப் பேசிக்கொண்டிருக்கப்போகிறோமா?. இல்லை நாங்கள் இந்தியாவுடன் ஒரு பேச்சுவார்த்தைக்கு இணங்கப்போகிறோமா?. முதலாவது ஒரு விடயத்தை நகர்த்துவதற்குத் துணிச்சல் வேண்டும். நாங்கள் ஐயையோ இவர்கள் 13 ஐப் போல எல்லாவற்றையும் கொண்டுவந்து திணித்துவிடுவார்கள் என்று கற்பனையில் கதைபேசிக்கொண்டிருந்தால் எதுவும் நடக்காது. இந்த 13வது திருத்தம் என்பதோ அல்லது நாங்கள் கொடுத்த இந்த அறிக்கை என்பதோ இந்தியாவிற்கான ஒரு பிடிமானம் எங்கே இருக்கிறது என்றால், அது இந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமான 13வது திருத்தத்தில் தான். இந்தியா அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துவைத்தவர்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு பங்கு இருக்கிறது. இதில் அவர்கள் கவனத்தைத் செலுத்துவதற்கு ஒரு தேவையும் இருக்கிறது. அந்தத் தேவை அவர்களுக்கு இன்று மிகப் பலமாக இருக்கிறது. ஆகவே அந்த நேரத்தில் நாங்கள் தமிழ் மக்கள் கூட்டாக இணைந்து அவர்களுடன் பேச்சுக்களை நடாத்தி ஒரு பலமான அதிகாரம் மிக்க ஒரு சபையை தமிழ் மக்களுக்காக உருவாக்கப்போகிறோமா? அல்லது நாங்கள் பூகோள அரசியல் என்று பேசிக்கொண்டிருக்கப்போகிறோமா?.

இப்பொழுது நான் 13வது திருத்தச்சட்டத்தை சவப்பெட்டிக்குள் வைத்து இழுத்துக்கொண்டு திரிவதாக கேள்விப்பட்டேன். ஒரு பக்கத்தில் ஜனாதிபதி கோட்டாபய 13 வேண்டாம் ஒன்றும் வேண்டாம் உங்களுக்கு அபிவிருத்தி போதும் என்கிறார். புதுடெல்லியில் இருக்கக்கூடிய தூ துவர் மிலிந்த மொறகொட நான் யாழ்ப்பாணம் எல்லாம் போனேன். அவர்களுக்கு அபிவிருத்தி போதும் என்கிறார். யாழில் இருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் குழுவினர் தமிழ் மக்களுக்கு ஒன்றும் தேவையில்லை, 13ஐ விட வேறு எதையாவது இவர்கள் வைத்துக்கொண்டு 13 வேண்டாம் என இவர்கள் கூறினால் அதில் ஒரு அர்த்தம் உள்ளது அல்லது நீங்கள் கூறுகின்ற இரு தேசம் ஒரு நாட்டினை எவ்வாறு அடையப்போகின்றீர்கள் என நீங்கள் கூறவேண்டும். அதற்கான செயல்முறை என்ன வைத்திருக்கிறீர்கள். அதனை அடைவதற்கு உங்களுக்கு எவ்வளவு காலம் எடுக்கும். இரண்டு வருடம், ஐந்து வருடம், பத்து வருடம் அல்லது இருபது வருடங்கள். தந்தை செல்வா சமஸ்டியைக் கேட்டு இன்றும் நாங்கள் சமஸ்டி பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆகவே அது வரும் வரையில் இருக்கிறதையெல்லாம் கைகழுவிவிடப்போகின்றோமா? இருக்கிறதை வைத்துக்கொண்டு குறைந்தபட்சம் தமிழ் மக்களை, மண்ணை நாங்கள் காப்பாற்றப்போகிறோமா? என்பது இன்னுமொரு கேள்வி. ஆகவே இங்கு முக்கியமான விடயம், ஒரு பக்கம் ஒரே நாடு ஒரே சட்டம் என்கிற பெயரில் ஞானசார தேரரை களமிறக்கியிருக்கிறார்கள். கிழக்கில் ஒரு பௌத்த குழுவை விட்டு அங்குள்ள பௌத்த சின்னங்களை அடையாளங் காண்கின்ற வேலை. வடக்கில் வவுனியாவில், முல்லைத்தீவில், வெடுக்குநாறி மலையில் உள்ளதெல்லாம் தங்களுடையது எனக்கூறி பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்ற வேலை நடக்கிறது. வடக்கு கிழக்கு இணைக்கப்படக்கூடிய பிரதேசம் எங்களுடைய கையில் இருந்து நழுவிப்போகின்ற நிலைமை இருக்கிறது. கந்தரோடை குறிவைக்கப்படுகின்றது. சித்தார்த்தன் அவர்களின் இல்லத்திற்குப் பக்கம் இருக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் இவற்றைத் தடுத்துநிறுத்த குறைந்தபட்ச அதிகாரங்களையாவது எடுக்கப்போகிறோமா?. இல்லையென்றால் பாடையில் கட்டி அனுப்புகின்ற வேலையினைச் செய்யப்போகின்றோமா?

செல்வராசா கஜேந்திரன் ஒருமுறை பாராளுமன்றில் யுத்தம் நடந்தால் 40 ஆயிரம் சவப்பெட்டிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதாகச் சொன்னார். அவர் ஆயிரக்கணக்கில்சவப்பெட்டிகளைச்செய்கின்ற மனிதர். இப்பொழுது ஒரு சவப்பெட்டியில் 13ஆவது திருத்தச்சட்டத்தை அவர் கொண்டிழுப்பதாகக் கேள்வி. தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய அற்பசொற்ப விடயங்கள் அனைத்தையும் இல்லாமல் செய்யக்கூடிய முட்டாள்த்தனமான நடவடிக்கையைத் தான் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் பாவிக்கிற வார்த்தைகள் இந்தியாவினுடைய முகவர்கள், அடிமைகள், அடிவருடிகள், டெல்லிக் காவடிகள் இதுதான் இவர்கள் பாவிக்கிற வார்த்தைகள்.

**தொடரும்...**



# உலக பார்வை



## அவுஸ்திரேலியாவில் 14 அடி சுறாவினால் தாக்கப்பட்டு உயிரிழந்தவரின் பயங்கரமான இறுதிநிமிடங்கள்

அவுஸ்திரேலியாவில் சுறாவால்தாக்கப்பட்டு உயிரிழந்த நபர் தனது இறுதிநிமிடங்களில் உதவிக்காக கதறினார் 14 அடி வெள்ளை சுறாவை எதிர்த்து போராட முடியாத நிலையில் காணப்பட்டார் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். லிட்டில் பே பீச்சில் மதியம் நீச்சலில் ஈடுபட்டிருந்த நபரின் உயிர் சுறாவின்தாக்குதலால் பறிபோயுள்ளது.

கடந்த 60 வருடங்களில் சிட்னியில் சுறாவின் தாக்குதலால் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் இது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனா. சுறா தாக்குதல் இடம்பெற்றவேளை பலர் நீச்சலில் ஈடுபட்டிருந்தனர் மீனவர்கள் உட்பட பலர் காணப்பட்டனர். நீச்சலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவரின் பெரும் அலறல்காரணமாக அவர் எச்சரிக்கை நிலைக்கு தள்ளப்பட்டபோதிலும் சுறா அந்த நபரை தாக்கி கொன்று கடலுக்குள் இழுத்துச்செல்வதை வேடிக்கை பார்ப்பதை தவிர அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை. சுறா கடலில் மூர்க்கமாக காணப்படுவதையும் அந்த நபரை கடலிற்குள் இழுத்துச்செல்வதையும் நீலக்கடல் சிவப்பாக மாறுவதையும் கரையில் பதற்றம் நிலவுவதையும் காண்பிக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

அவசர உதவி பணியாளர்களும் உயிர்காக்கும் பணியாளர்களும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஹெலிக்கொப்டர்களும் சுறா இழுத்துச்சென்றநபரை தேடுவதையும் காண முடிகின்றது. உடல் ஒன்றை வீடியோக்கள் காண்பிக்கின்றன.அரைவாசி உடலை சுறா எடுத்து செல்கின்றது என காவல்துறை அதிகாரியொருவர் அந்தவேளை தனது சகாக்களிற்கு தெரிவித்துள்ளார். யாரையோ சுறா தின்றுவிட்டது என மீனவர்கள் சத்தமிடுவதையும் வீடியோக்கள் காண்பித்துள்ளன. சிறிது நேரத்தின் பின்னர் அந்த நபரின் எஞ்சிய பாகங்கள் கடலில் காணப்பட்டன.எனதெரிவித்துள்ள காவல்துறையினர் அவரின் வெட்சூட்டும் காணப்பட்டது என குறிப்பிட்டுள்ளனர்.

அந்த நபரின் காயங்கள் மிகவும் ஆபத்தானவையாக காணப்பட்டதால் மருத்துவ உதவியாளர்களால் அவரை காப்பாற்ற முடியவில்லை. கரையில் இந்த சம்பவத்தை பார்த்த பலர் இன்னமும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவர்களாக காணப்படுகின்றனர். புச்சன் பொயின்ட் என்ற இடத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாரையோ சுறா தின்றுவிட்டது அது பெரிய வெள்ளை சுறா என மீனவர் ஒருவர் அலறுவது வீடியோவில் பதிவாகியுள்ளது. அவர் இன்னமும் அங்கு காணப்படுகின்றார் என அவர் தெரிவிக்கின்றார். நான் ஐந்து அடி சுறாவை பார்த்தேன். நீச்சலடித்துக்கொண்டிருந்தவரின் மேற்பரப்பில் பாரிய வெள்ளைநிறத்தில் ஏதோ தென்பட்டது கார் ஒன்று நீரிற்குள் இறங்குவது போல அது காணப்பட்டது எனஅவர் தெரிவித்துள்ளார். நான் பாரிய அலறல் சத்தத்தை கேட்டேன்.சுறா அவரது உடலை நசுக்கியது அவரது உடல் இரண்டானது எனவும் மீனவர் தெரிவித்துள்ளார். அது திருப்பிவந்து அவரின் உடல்பாகங்களை விழுங்கியது பின்னர் காணாமல்போய்விட்டது என அவர் தெரிவிக்கின்றார். கரையில் அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தவர்களின் அலறல்களையும் வீடியோக்களில் கேட்க முடிகின்றது.






## தலிபான் ஆப்கானை கைப்பற்றியமை பாக்கிஸ்தானின் பாதுகாப்பிற்கு மிகவும் ஆபத்தான விடயமாக மாறியுள்ளது

பாக்கிஸ்தானில் சமீபத்தில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியமை பாக்கிஸ்தானின் பாதுகாப்பிற்கு மிகவும் ஆபத்தான விடயமாக மாறியுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது என ஊடகங்கள்தெரிவித்துள்ளன. கடந்தஇரண்டு வாரங்கள் பாக்கிஸ்தானின் இராணுவத்திற் கடும் எச்சரிக்கையை அளிப்பதாக அமைந்துள்ளன. குறிப்பாக பலூச்சிஸ்தானில் இந்த நிலைமை காணப்படுகின்றது இங்கு மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் பாக்கிஸ்தான் இராணுவம் பல படையினரை இழந்தது என டிப்ளோமட் செய்தி வெளியிட்டுள்ளது. ஜனவரி 25 ம் திகதி பயங்கரவாதிகள் பாக்கிஸ்தானின் ஈரான் எல்லையில் உள்ள கெச்பலோச்சிஸ்தான் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.இந்த பகுதி மாகாணதலைநகரம் குவட்டாவிலிருந்து 600 கிலோமீற்றர் தொலைவிலேயே உள்ளது என அமெரிக்காவை தளமாக கொண்ட சஞ்சிகைள் தெரிவித்துள்ளன. இந்த பயங்கரவாத தாக்குதலில் பத்துக்கும்மேற்பட்ட பாக்கிஸ்தான் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதற்கு ஒரு வாரத்தின் பின்னர் அதேமாகாணத்தின் நொஸ்கி மற்றும் பஞ்குர் பகுதிகளில் இன்னொரு தாக்குதல் இடம்பெற்றது-நொஸ்கிதாக்குதல் சில மணிநேரத்தில் முறியடிக்கப்பட்ட போதிலும் பஞ்குர் தாக்குதல் 60 மணிநேரம் நீடித்ததுடன் அதிகாரியொருவர் உட்பட ஏழு படையினர்கொல்லப்பட்டனர். ஆப்கானிஸ்தானின் அரசியல் நிலைமை இன்னமும் முட்டுக்கட்டை நிலையிலேயே உள்ளதுஒரு உலகநாடுகளும் தலிபானை ஏற்றுக்கொள்ளவில்லை என பாக்கிஸ்தானை சேர்ந்த பாதுகாப்பு நிபுணர் முகமட் வலி தெரிவிக்கின்றார். ஆப்கானின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடையும் நிலையில் உள்ளது அந்தநாட்டில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் இன்னமும் இயங்குவதாக கருதப்படுகின்றது என தெரிவிக்கும் அவர் இவை அனைத்தும் பாக்கிஸ்தானிற்கு கவலையளிக்கவேண்டும் என தெரிவிக்கின்றார். வரவிருக்கும் ஆபத்து பாக்கிஸ்தானையும் பாதிக்ககூடும் என தெரிவித்துள்ள அவர் பொருளாதார ஸ்திரமின்மையை ஏற்படுத்தலாம்,எனவும்தெரிவித்துள்ளார்.

பாக்கிஸ்தான் ஏற்கனவே பணவீக்கம்மற்றும் குறைந்த பொருளாதாரவளர்ச்சி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது என்கின்றார் அவர் ஆப்கானின் தலிபான்கள் டிடிபியை கையாளவேண்டும் பாக்கிஸ்தான் வலியுறுத்தவேண்டும் என தெரிவிக்கும் பாதுகாப்பு நிபுணர் பாக்கிஸ்தான் தேசிய செயற்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றவேண்டும் எனவும் தெரிவிக்கின்றார். காபுலை தலிபான் கைப்பற்றிய பின்னர் பாக்கிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை காண்பிக்கும் சமீபத்தைய தாக்குதல்கள் கடந்த சில வருடங்களாக பாக்கிஸ்தான் குழப்பநிலை ஸ்திரமின்மை ஆகியவற்றை நோக்கி தள்ளப்படுகின்றது என்ற அச்சத்தை உறுதி செய்கின்றது என பாக்கிஸ்தானை சேர்ந்த சமாதான கற்கைகளிற்கான பாக்கிஸ்தான் நிலையம் தெரிவிக்கின்றது.

## கிணற்றின் மேல்தளம் உடைந்ததால் உள்ளே விழுந்து 13 பெண்கள் பலி

உத்தரபிரதேச மாநிலம் குஷிநகர் மாவட்டம் நிபுவா நவ்ரங்யா என்ற கிராமத்தில் திருமண நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க நூற்றுக்கும் அதிகமான விருந்தினர்கள் வந்திருந்தனர். திருமண நிகழ்ச்சிக்கு பின்னர் இரவு திருமண வரவேற்பு நடைபெற்றது. வரவேற்பு நிகழ்ச்சியின் போது விருந்தினர்களில் பெண்கள் வீட்டிற்கு பின்னால் அமைந்திருந்த கிணற்றின் மேல் ஏறி நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

கிணற்றின் மேல் பகுதி இரும்பு வலையான ஆன கான்கிரீட் மேடை அமைக்கபப்ட்டிருந்தது. அதன் மீது ஏறி அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். இரும்பால் ஆன கான்கிரீட் மேல் தளம் வலிமையாக இருப்பதாக கருதி 20-க்கும் மேற்பட்ட பெண்கள் அந்த கிணற்றின் மீது ஏறி நின்று பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, பாரம் தாங்காமல் கிணற்றின் மீது அமைக்கப்பட்டிருந்த இரும்பாலான கான்கிரீட் மேல் தளம் திடீரென இடிந்து விழுந்தது. இதில், மேல் தளத்தில் நின்றுகொண்டிருந்த பெண்கள் அனைவரும் ஆழமான கிணற்றுக்குள் விழுந்தனர். இந்த கோர விபத்தை கண்ட அங்கு நின்றுகொண்டிருந்தவர்கள் இது குறித்து தீயணைப்பு மற்றும் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு மீட்புபடையினர் கிணற்றுக்குள் விழுந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, 15-க்கும் அதிகமான பெண்கள், சிறுமிகள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். ஆனால், கிணற்றுக்குள் விழுந்ததில் படுகாயமடைந்து 13 பெண்கள் சம்பவ இடத்திலேயே நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இதையடுத்து, உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு பிரேதபரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயமடைந்த பெண்களை சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க சென்ற இடத்தில் 13 பெண்கள் கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.






## உலகில் கொரோனா வைரஸ் பரவல் ஒருபோதும் ஒழியாது – எச்சரிக்கை

புதிய திரிபுகளாக உருமாறுவதன் மூலம் கொரோனா வைரஸ் பரவல் உலகில் ஒருபோதும் ஒழியாமல் போகலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் யேல் மருத்துவ பல்கலைக்கழக நிபுணர்கள் இது குறித்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி வைரஸ்கள் சில மாதங்களுக்கு ஒருமுறை புதிய தன்மைகளுடன் கூடிய அவதாரமெடுத்து தமது பரவலைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். இந்நிலையில் பல்வேறு கொரோனா தடுப்பூசிகளை உருவாக்கிவிட்டு, அதனை ஏராளமானவர்களுக்கு செலுத்திவிட்டதாக நாம் பெருமைப்பட்டுக்கொண்டு இருக்கும்போது, புதிய வகை கொரோனாக்கள் உருவாவதை நாம் மறந்துவிடக் கூடாது எனத் தெரிவித்துள்ளனர். மேலும் ஒமிக்ரோன் வகை கொரோனா ஏராளமானவர்களுக்குப் பரவி, அதிக உடல்நல பாதிப்பை ஏற்படுத்தாமல் மறைந்து விடுவதால், சமூக நோய்த் தடுப்பாற்றல் கிடைத்துவிடும் என நினைப்பது தவறான கணிப்பு என ஹூஸ்டன் மருத்துவக் கல்லூரி நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 250 கிலோகிராம் கஞ்சாவுடன் தமிழகத்தில் 14 பேர் கைது

இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகம் வழியாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 250 கிலோகிராம் கஞ்சாவுடன் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆந்திரா - விசாகப்பட்டினத்தில் இருந்து தமிழகம் வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.




அதனடிப்படையில், தஞ்சை பொலிஸாரின் தீவிர கண்காணிப்பு பணியின்போது திருச்சியிலிருந்து தஞ்சை நோக்கி வந்த லொரியை நிறுத்தி சோதனை மேற்கொண்டுள்ளனர். இதன்போது சுமார் 60 இலட்சம் ரூபா இந்திய பெறுமதி மிக்க 250 கிலோகிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து, இந்த கடத்தலுடன் தொடர்புடைய மேலும் 12 பேர் கைது செய்யப்பட்டதுடன், 3 கார்களும் மோட்டார் சைக்கிளொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை தஞ்சை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.













# பளு தூக்கல் போட்டியில் வவுனியா வீராங்கனைகள் சாதனை

கா/போத்திவல மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற இளையோர் / கனிஷ்ட மற்றும் சிரேஸ்ட புதியவர்களுக்கான பளு தூக்கல் போட்டியில்

44kg எடை பிரிவில் 85kg எடை தூக்கி பானுஜா சுரேஸ்குமார் 2ம் இடத்தையும்,

56kg எடை பிரிவில் 71kg எடை தூக்கி விதுசியா சுரேஸ்குமார் 2ம் இடத்தையும்,

76kg எடை பிரிவில் 94kg எடை தூக்கி செரோண்யா பாலசுப்பிரமணியம் 2ம் இடத்தையும் பெற்று வவுனியா மண்ணிற்கு பெருமை சேர்த்து வவுனியா மண்ணுக்கு மாத்திரமல்ல, தமிழினத்திற்கு தொடர்ந்தும் பெருமை சேர்த்து வருகின்றனர்.

இவ்வாறான திறமைமிக்க இளைஞர் மற்றும் யுவதிகளை இனங்கண்டு, அவர்களது முயற்சிகளை ஊக்குவித்து, தொடர்ந்தும் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கிவரும், வவுனியா பளு தூக்கல் கழகத்தின் பயிற்றுவிப்பாளர், ஞா.ஜீவன் (றகி ஜிம் உரிமையாளர்) அவர்களுக்கும், இப்போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கும் தினப்புயல் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.












இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 20.02.2022 அன்று வெளியிடப்பட்டது.